# யாழ்ப்பாண மாவட்டத்தின் வளங்கள், பயன்பாடு, அபிவிருத்தி வழிமுறைகள்



# Resources, Utilization and Development Strategies in Jaffna District

சிந்தனைக்கூடம் – யாழ்ப்பாணம்
மற்றும்
யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்
2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டத்தின்
# வளங்கள், பயன்பாடு, அபிவிருத்தி வழிமுறைகள்

# Resources, Utilization and Development Strategies in Jaffna District


**தொகுப்பாசிரியர்**

பேராசிரியர் இரா. சிவசந்திரன்



**சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம்**

**மற்றும்**

**யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்**

**2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : யாழ்ப்பாண மாவட்டத்தின் வளங்கள், பயன்பாடு, அபிவிருத்தி வழிமுறைகள்

ஆசிரியர் : பேராசிரியர் இரா.சிவசந்திரன்

உரிமை : யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்

பதிப்பு : முதல்பதிப்பு, மார்ச் 2011

வெளியீடு : யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்

அச்சிட்டோர் : கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல.424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**Title** : **Resources, Utilization and Development Strategies in Jaffna District**

**Author** : **Prof.R.Sivachandran**

**Copy Right** : **Cintanai Koodam, Council of NGOS' Jaffna District**

**Edition** : **First March 2011**

**Published by** : **Cintanai Koodam, Council of NGOS' Jaffna District**

**Page** : **64**

**Printed by** : Harikanan Printers,
No.424, K.K.S. Road, Jaffna.

**ISBN** : 978-955-53788-0-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**மனிதவாழ்வின் மேம்பாட்டிற்காக வளங்களை நிறைவாகப் பயன்படுத்துவோம்.**

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ் மாவட்டத்தின் பௌதிக வளங்களையும், மனித வளங்களையும் இனங்கண்டு அவற்றை மனித வாழ்விற்காகவும் மேம்பாட்டிற்காகவும் எவ்வகையில் அவற்றை பயன்படுத்தலாம் என்பது பற்றி நீண்ட காலமாகவே சிந்தித்து, பல சந்திப்புகளில் கலந்துரையாடி வந்துள்ளது.

எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களை இனங்கண்டு விவசாயம், கைத்தொழில், மீன்பிடித் தொழில், வர்த்தக நடவடிக்கைகள், என்பனவற்றை நிறைவான உற்பத்திசார் வளங்களாகவும், வினைத்திறன் வாய்ந்த உற்பத்தி நடவடிக்கைகளாகவும் மாற்றுவதற்கான முயற்சியின் முதற்படியாகவே வளங்கள், பயன்பாடு, அபிவிருத்திக்கான வழிமுறைகள் எனும் தலைப்பில் செயலமர்வினை ஒழுங்கு செய்ய எண்ணினோம். இப் பணிக்கு "டயக்கோனியா நிறுவனம்" நிதி உதவியை வழங்கியது. இதற்கு நன்றி தெரிவிப்பது எமது கடமையாகும்.

இப் பாரிய பொறுப்பை நல்ல வகையில் நிறைவு செய்யத்தக்க திறன் வாய்ந்த நிறுவனமான சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தை தேர்ந்தெடுத்து, அதன் இயக்குனர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்களிடம் இப்பணியை ஒப்படைத்தோம். எமது பிரதேச ஆய்வு அபிவிருத்தியில் அக்கறை கொண்டு நீண்ட காலமாக செயற்பட்டு வரும் இந் நிறுவனம் யாழ் பல்கலைக்கழக அறிஞர்கள், தொழில்சார் நிபுணர்களின் துணையுடன் 05.02.2011 மற்றும் 06.02.2011 ஆம் திகதிகளில் இரு நாள் செயலமர்வை நடத்திற்று. அதில் பதினொரு தலைப்புகளில் ஆய்வுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவை செயலமர்வில் பங்குகொண்ட பங்குபற்றுனர் களின் அபிப்பிராயங்கள், கலந்தரையாடலுக்கும் முக்கியமளித்து நிறைவான கருத்துக்களை திரட்டியது. இவற்றையெல்லாம் உள்வாங்கி வளவாளர்கள் ஆய்வுக்கட்டுரைகளாகச் சமர்ப்பித்தார்கள். அவற்றை தொகுத்து பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்கள் நூல் வடிவில் கருத்தரங்குத் தொகுப்பாக வெளிக்கொணர உதவியுள்ளார். இந் நூல் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்கு மாத்திரமன்றி தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் பொதுவாக இலங்கையின் அபிவிருத்திக்கு உதவக்கூடிய பொருட்பரப்பைக் கொண் டுள்ளது.

இப்பயன்மிகு பணியை எமக்காக செய்தளித்த சிந்தனைக்கூடம் எனும் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்திற்கு நன்றி கூறும் அதேவேளை இப்பணிக்கு ஆக்கபூர்வமாக உழைத்த யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறான பணிகளை நாம் மேலும் தொடர உள்ளோம் என்ற நற் செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வி.கேசவன்,
தலைவர்,
யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**நமக்கு நாமே திட்டமிட்டுச் செயலாற்றும் சூழ்நிலையை உருவாக்குவோம்.**

யாழ்ப்பாணம் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உற்பத்திசார் வளங்களையும் அவற்றை பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளையும் இனங்கண்டு ஆவணப்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கிய செயற்பாடே 05.02.2011 மற்றும் 06.02.2011ஆம் திகதிகளில் இடம்பெற்ற செயலமர்வாகும்.

இணையத்தின் எண்ணக்கருவுக்கு வடிவம் கொடுக்கக்கூடிய வகையில் டயக்கோனியா நிறுவனம் நிதியுதவி வழங்கியமையால், பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்களின் வழிகாட்டலில் இயங்கும் சிந்தனைக்கூடம் நிறுவனத்திடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

இந்தப் பணியினை சிந்தனைக்கூடம் மிகவும் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளது எனலாம். துறைசார் அறிஞர்கள் சமர்ப்பித்த ஆய்வறிக்கைகளைத் தொகுத்து நூல் வடிவில் வெளிக்கொணர்வதே எமது நோக்கமாகவிருந்தது. அது இப்பொழுது நிறைவேறுகின்றமை மகிழ்விற்குரியது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி, தொழில்வாய்ப்புகள் பற்றி பல்வேறு மட்டங்களில் பலகாலமாகப் பேசப்பட்டு வந்தாலும், எமது பிரதேசத்தில் உள்ள வளங்களையும் அவற்றின் உற்பத்திப் பயன்பாடுகள் பற்றிய ஆவணத் தொகுப்பு எம்மிடம் இல்லாமை பெருங் குறையாகவே உணரப்பட்டு வந்தது. நிதியுதவி நிறுவனங்கள் எம்மைச் சந்திக்கும்போது அவர்களுக்கு எமது தேவைகள் பற்றி எடுத்துக் கூறக்கூடிய ஆவணம் எம்மிடம் இல்லாதது ஒரு குறையாக இருந்து வந்தது. எமது பொருளாதார வளர்ச்சியை நாமே திட்டமிட்டு அமுல் செய்யக் கூடிய நிலையை உருவாக்குவதற்கான ஆரம்பப் புள்ளியே இது.

இந்த விடயம் கூர்மைப்படுத்தப்பட்டு, எமது இளைய சந்ததியினர்க்கு வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய உற்பத்திசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆரம்பப்படியாகவே இந்த ஆய்வு ஆவணத் தொகுப்பு அமைகிறது. பல்கலைக்கழக பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், துறைசார் அறிஞர்களும், நிபுணர்களும் இந்த சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பணியை முன்னெடுத்து மேம்படுத்த முன்வந்து உதவவேண்டும் என விநயமாக வேண்டுகிறேன்.

நாமின்றி நமக்காக திட்டமிடுதல் நிலையிலிருந்து விடுபட்டு நமக்கு நாமே திட்டமிட்டு செயலாற்றும் சூழ்நிலையை உருவாக்க நாமெல்லாரும் இணைந்து செயற்படுதல் வேண்டும்.

**சீ.வீ.கே.சிவஞானம்**
*முன்னாள் தலைவர்,*
*யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

**மனிதவாழ்வின் மேம்பாட்டிற்காக வளங்களை நிறைவாகப் பயன்படுத்துவோம்.**

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ் மாவட்டத்தின் பௌதிக வளங்களையும், மனித வளங்களையும் இனங்கண்டு அவற்றை மனித வாழ்விற்காகவும் மேம்பாட்டிற்காகவும் எவ்வகையில் அவற்றை பயன்படுத்தலாம் என்பது பற்றி நீண்ட காலமாகவே சிந்தித்து, பல சந்திப்புகளில் கலந்துரையாடி வந்துள்ளது.

எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களை இனங்கண்டு விவசாயம், கைத்தொழில், மீன்பிடித் தொழில், வர்த்தக நடவடிக்கைகள், என்பனவற்றை நிறைவான உற்பத்திசார் வளங்களாகவும், வினைத்திறன் வாய்ந்த உற்பத்தி நடவடிக்கைகளாகவும் மாற்றுவதற்கான முயற்சியின் முதற்படியாகவே வளங்கள், பயன்பாடு, அபிவிருத்திக்கான வழிமுறைகள் எனும் தலைப்பில் செயலமர்வினை ஒழுங்கு செய்ய எண்ணினோம். இப் பணிக்கு "டயக்கோனியா நிறுவனம்" நிதி உதவியை வழங்கியது. இதற்கு நன்றி தெரிவிப்பது எமது கடமையாகும்.

இப் பாரிய பொறுப்பை நல்ல வகையில் நிறைவு செய்யத்தக்க திறன் வாய்ந்த நிறுவனமான சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தை தேர்ந்தெடுத்து, அதன் இயக்குனர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்களிடம் இப்பணியை ஒப்படைத்தோம். எமது பிரதேச ஆய்வு அபிவிருத்தியில் அக்கறை கொண்டு நீண்ட காலமாக செயற்பட்டு வரும் இந் நிறுவனம் யாழ் பல்கலைக்கழக அறிஞர்கள், தொழில்சார் நிபுணர்களின் துணையுடன் *05.02.2011* மற்றும் *06.02.2011* ஆம் திகதிகளில் இரு நாள் செயலமர்வை நடத்திற்று. அதில் பதினொரு தலைப்புகளில் ஆய்வுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவை செயலமர்வில் பங்குகொண்ட பங்குபற்றுனர்களின் அபிப்பிராயங்கள், கலந்தரையாடலுக்கும் முக்கியமளித்து நிறைவான கருத்துக்களை திரட்டியது. இவற்றையெல்லாம் உள்வாங்கி வளவாளர்கள் ஆய்வுக்கட்டுரைகளாகச் சமர்ப்பித்தார்கள். அவற்றை தொகுத்து பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்கள் நூல் வடிவில் கருத்தரங்குத் தொகுப்பாக வெளிக்கொணருகின்றார். இந் நூல் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்கு மாத்திரமன்றி தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் பொதுவாக இலங்கையின் அபிவிருத்திக்கு உதவக்கூடிய பொருட்பரப்பைக் கொண்டுள்ளது.

இப்பயன்மிகு பணியை எமக்காக செய்தளித்த சிந்தனைக்கூடம் எனும் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்திற்கு நன்றி கூறும் அதேவேளை இப்பணிக்கு ஆக்கபூர்வமாக உழைத்த யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறான பணிகளை நாம் மேலும் தொடர உள்ளோம் என்ற நற் செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இல: 07 இரத்தினம் ஒழுங்கை**
**கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**ஈ. மெயில்:** avsrsiva@gmail.com

பேராசிரியர் இரா. சிவசந்திரன்,
இயக்குனர், சிந்தனைக்கூடம்- யாழ்ப்பாணம்
(ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1) வளங்களின் வரையறை, வகைப்பாடு, வள அபிவிருத்தி என்பதன் பொருள் மற்றும் தமிழர் நிலத்தின் வளங்களும் பயன்பாடும் 01
பேராசிரியர் இரா. சிவசந்திரன்

2) இலங்கையின் வடபுலத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய ஒரு நோக்கு 14
பேராசிரியர் வி.பி.சிவநாதன்

3) Financial Resources and Investment for Economic Development in Northern Province 17
***Dr.S.Santhirasegaram***

4) Human Resource Development in Northern Province, Special Reference to Jaffna District 22
***A.Saravanabawan, J.Robinson***

5) இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையின் செல்நெறியும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளும் 27
எஸ். உதயகுமார்

6) யாழ் மாவட்டத்தில் போரின் பின்னரான பெண்களின் பொருளாதார சமூக மீளுருவாக்கப் பயணம் 34
சரோஜா சிவசந்திரன்

7) வடபகுதியில் பனை வளஞ்சார் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் 37
பேராசிரியர் கு.மிகுந்தன்

8) எமது சமூகத்தின் அறிவு பாதுகாப்பு ஆவணப்படுத்தல் பரவலாக்கம் 44
சிவானந்தமூர்த்தி சேரன்

9) யாழ். மாவட்டத்தில் நிலைத்து நிற்கக்கூடிய மீன்பிடி அபிவிருத்தியை நோக்கி 49
பேராசிரியர் சிவசாந்தினி குகநாதன்

10) வடபகுதி விவாசய அபிவிருத்தியின் எதிர்கால வாய்ப்புகள் 53
பேராசிரியயர் கு.மிகுந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்களின் வரையறை, வகைப்பாடு, வள அபிவிருத்தி என்பதன் பொருள் மற்றும் தமிழர் நிலத்தின் வளங்களும் பயன்பாடும்

பேராசிரியர் இரா. சிவசந்திரன்,
இயக்குனர், சிந்தனைக்கூடம்- யாழ்ப்பாணம் (ஆய்வு, அபிவிருத்திக்கான நிறுவனம்)

மனித வாழ்வுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பயன்படுபவை யாவற்றையும் வளங்கள் எனலாம். இயற்கையாகக் கிடைப்பவற்றை மனிதன் தன் அறிவாலும் தொழில்நுட்ப விருத்தியாலும் பயன்பாட்டிற்கு உட்படுத்தும்போது அவை வளங்களாகக் கருதப்படுகின்றன. மனிதனது தேவைகள் அளப்பரியன. அவற்றை நிறைவு செய்வதற்கு மனிதன் பல்வேறுபட்ட வளங்களை பயன் படுத்த வேண்டியுள்ளது. தனிமனிதத் தேவைகள் போன்றே ஒரு நாட்டினதும் பிரதேசத்தினதும் சமூகத்தினதும் தேவைகள் வரையறை அற்றவை. ஆனல், வளங்கள் வரையறைக்கு உட்படுபவை. இதனுல் பொருளியலாளர்கள் வளங்கள் அருமை, தெரிவு, பரிமாற்றம் எனும் அம்சங்களைக் கொண்டுள்ளன என்பர்.

1.1 பொதுவாக வளங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

01) பௌதிகவளம் அல்லது இயற்கை வளம் (Physical resource or Natural Resource)

02) மனித வளம் அல்லது பண்பாட்டு வளம் (Human Resource or Cultural Resource)

1.2 பௌதிக வளத்தை இரசாயனவியலாளர்கள்

01) உயிரியல் வளம் (Organic Resource)
உதாரணம்: - (காடுகள், விலங்குகள்)

02) உயிரற்ற வளம் (Inorganic Resource)
உதாரணம்: - (நீர், கனிமங்கள்)
என வகுப்பர்

1.3 பொருளியலாளர்கள் வளங்களை நுகர்வுத்தன்மை அடிப்படையில்

01) புதுப்பிக்கக் கூடிய வளம் (Renewable Resource)
உதாரணர்: -(நீர், வளி)

02) புதுப்பிக்க முடியாத வளம் (Nonrenewable Resource)
உதாரணம்: - (கனிமம், காடுகள்)
என வகைப்படுத்துவர்.

1.4 சூழலியலாளர்கள் பௌதிகவளத்தை

01) நில மண்டல வளம் (Lithosphere Resource)
உதாரணம்: (மண், கனிமம்)

02) நீர் மண்டல வளம் (Hydrosphere Resource)
உதாரணம்: - (ஏரி, சமுத்திரம்)

03) வளிமண்டல் வளம் (Atmosphere Resource)
உதாரணம்: -(காற்று, மழை)

04) உயிர் மண்டல வளம் (biosphere Resource)
உதாரணம்: -(காடுகள், விலங்குகள்)

என வகைப்படுத்துவர்.

**பௌதிக வளங்களும்(சூழல்), பண்பாட்டு வளங்களும்**

புவியியலாளர்கள் மனித இனத்தின் வளர்ச்சி வரலாறானது சூழலுக்கும் மனிதனின் அறிவு வளர்ச்சிக்குமிடையே நிகழ்ந்த போராட்ட வரலாறு என்று கூறுவதோடு, சூழலை முதன்மைப்படுத்தும் சூழலாதிக்க வாதக் கோட்பாடுகளையும், மனித நடவடிக்கைகளை முதன்மைப்படுத்தும் மானிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கவாத கோட்பாடுகளையும் முன்வைக்கின்றனர். மனித இனத்தின் அறிவு, தொழில்நுட்ப வளர்ச்சி படிப்படியாக எவ்வகையில் வளத்தைப் பயன்பாட்டிற்கு உட்படுத்தி வந்ததென்பதையும், வருகின்றதென்பதையும் முறைப்படி விளக்குகின்றனர. புவியியலாளர் சூழலை அமைவு, அமைப்பு, தரைத்தோற்றம், காலநிலை, மண், இயற்கைத்தாவரம், விலங்கினவாழ்வு என வகைப்படுத்தி மனிதன் இவற்றில் செல்வாக்குச் செலுத்துவதனையும், இவற்றால் மனிதன் செல்வாக்கிற்கு உட்படுத்தப்படுவதனையும் விபரிப்பதோடு, இரண்டிற்கு இடைப்பட்ட நிலையும் உண்டு எனவும் விளக்குகின்றனர். இவற்றைப் பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.

**சூழலாதிக்கம் (பௌதிக வளம்)**




**மானிடவாதிக்கம் (பண்பாட்டு வளம்)**




**இடைப்பட்ட (சூழல், மனிதன்) ஆதிக்க வாதம்**




**3.0 பண்பாட்டு வளம்**
**(மனித அறிவும் தொழில்நுட்பமும்)**

வளங்கள்பற்றி விபரிக்கும் அறிஞர்கள் பலர் மனித வளமே உலகிலே கிடைக்கும் எல்லா மூலவளங்களையும்விடச் சிறந்தது என்கின்றனர். வளம் என்பது அறிவியற் கலாசாரத்தின் செயற்பாடே எனச் சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். புவியிற் பரந்துள்ள இயற்கை நிலைமைகளை வளங்களாக மாற்றுவதற்கு மனிதஅறிவு வளர்ச்சி இன்றியமையாதது. மனிதஅறிவு எனும் போது கல்விகற்ற தொழில்நுட்ப அறிவுகொண்ட சமூகத்தை குறித்து நிற்கின்றது. ஒரு நாடு அபிவிருத்தியடைய அந்நாட்டு மக்கள் இயற்கை வளங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற அறிவு கொண்டவர்களாக இருத்தல் அவசியம். இல்லாதுவிடின் அந்நாட்டிற் காணப்படும் வளங்கள்; மறைவளங்கள் (Latent Resources) என்ற நிலைமையிலேயே காணப்படும். உதாரணமாக, கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே பெற்றோலியம் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆனால், தொழில்நுட்ப விருத்தியால் பெற்றோல் வடிகட்டும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும்; வாகனங்கள் இயக்குவதற்கு அதனை எரிபொருளாகப் பயன்படுத்தலாம் என்ற தொழில்நுட்ப அறிவு விருத்தியின் பின்னரே அவை வளமாக மாற்றப்பட்டன. இறப்பர் மரம் அமேசன் காடுகளில் இயற்கையாக வளரும் தாவரம். இறப்பர் மரத்திலிருந்து பால்பெற்றுத் தொழில்நுட்ப முறைகளைப் புகுத்தி ரயராக, ரியூப்பாக பயன்படுத்தலாம் என்ற அறிவு வளரும்வரை, அவை மறைவளமாகவே இருந்துள்ளன. இவ்வாறு இன்றும் பல வளங்கள் எமது அறிவு விருத்தியின்மையால் பயன்பாட்டிற்கு உட்படாது இருத்தல்கூடும். எதிர்காலத்தில் மேலும் வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பங்களால் அவற்றின் பயன்பாடு கண்டுபிடிக்கப்படலாம். அதுவரை அவ்வளம் ஒரு மறைவளமாக அல்லது உள்ளார்ந்த வளமாகவே இருக்கும். இதிலிருந்து மனித அறிவு, தொழில்நுட்ப விருத்தி என்பனவே முக்கியமான வளம் என்பது பெறப்படுகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தி அந்நாட்டில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளைக் கொண்டும் அளவிடப்படு கின்றது. இதன்படி; பின்வரும் சூத்திரம் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை வளத்துடனும், தொழில்நுட்ப அறிவுடனும் இணைந்த கலாசார மேம்பாட்டுடன் தொடர்புபடுத்தி விளக்குகின்றது.

$$SL = \frac{RxC}{P}$$

$$\text{வாழ்க்கைத்தரம்} = \frac{\text{வளம் X கலாசாரம்}}{\text{மக்கள் தொகை}}$$

இதில் R என்பதில் விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்பனவற்றின் அபிவிருத்திக்குரிய வளங்கள் உள்ளடங்கு கின்றன. C என்பது தொழில்நுட்பத்துடன் இணைந்த மனித கலாசாரத்தைக் குறிக் கின்றது. P என்பது நாட்டின் மொத்த மக்கள் தொகையையும் SL என்பது தனிநபர் வாழ்க் கைத்தரத்தையும் குறிக்கின்றது. புதிய வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலோ, புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டாலோ மொத்த உற்பத்தி அதிகரிக்கும் என்பதைச் சூத்திரம் விளக்குகின்றது.

3.1 மனிதன் வளங்களின் உற்பத்தியாள னாகவும், நுகர்வோனாகவும் விளங்குகின் றான். இயற்கை, வளமாக மாறவேண்டுமாயின் மனிதனின் உழைப்பு இன்றியமையாதது. அவ் உழைப்பு உளஞ் சார்ந்ததாகவோ, உடல் சார்ந்ததாகவோ அமையலாம். உழைப்பினாற் பெறும் அனுபவங்கள் உற்பத்தியை வினைத் திறன் மிக்கதாக்குகின்றன. இவ்வாறே, மனித நாகரிகங்கள் வளர்ந்துள்ளன. நாகரிக வளர்ச்சி யில் மனித உடல் உழைப்புக் குறைய உள உழைப்பே அதிகரித்து வந்துள்ளதை காண்கின் றோம். உளச் சக்திவள அதிகரிப்பிற்கு உடல் உறுதியானதாகவும், ஆரோக்கியம் உள்ளதாக வும் இருத்தல் அவசியம். உள ஆரோக்கி யத்துக்குக் கல்வியும் தொடர்ந்த பயிற்சிகளும் அவசியம். மனிதவள அபிவிருத்தியானது மனிதனின் நல் ஆரோக்கியத்திலும், முறை யான கல்வியிலுமே தங்கியுள்ளது.

3.2 மனிதன் உழைப்பது நுகர்வுக்காகவே. எனவே, மனிதனின் தேவைகளை இரு வகையாகப் பிரிக்கலாம்.

01) அடிப்படைத் தேவைகள்

02) ஏனைய தேவைகள்

அடிப்படைத் தேவைகள் எனும்போது உணவு, உடை, உறையுள் என்பனவாக அமையும். இவ் அடிப்படைத்தேவைகளுடன் மனிதன் திருப்தியடைவதில்லை. மனிதனுக்கு ஆடம்பரமாகவும், வசதியாகவும் வாழும் விருப்பு உண்டு. மனித அறிவு வளர வளர இதுவும் வளரும். **"அடிப்படைத் தேவைகள் நிறைவுற்றதும் மனித மனம் மேலதிக தேவைகளை உருவாக்கிக் கொள்ளும்"** என்கிறார் ஒரு அறிஞர். இதனாலேயே மனிதன் தனது அறிவை மேலும் விருத்தி செய்து வினைத்திறனுள்ள வள உற்பத்தியாளனாக மாறுகின்றான். இவ்வாறே உற்பத்தி நுகர்வு என்பவற்றின் இயக்கம் ஒரு தொடர் சங்கிலி போன்றதே - இதனை மனிதஅறிவின் வளர்ச்சியே துரிதப்படுத்து கின்றது.

**4.0 பௌதிக வளமும் குடித்தொகையும்**

குடித்தொகையின் தரத்திற்கு(Quality) முக்கியத்துவம் கொடுக்கும்போது அதனை மனிதவளம் எனவும், தொகையைக் (Quantity) கணக்கெடுக்கும்போது அதனைக் குடித் தொகை எனவும் கூறலாம். மேற்படி குடித் தொகையை பௌதிகவளங்களுடன்ஒப்பிடும் போது உலகளாவிய ரீதியில் அல்லது நாடு பிரதேசம் என்ற ரீதியில் மூன்று குடித்தொகை நிலைமைகள் உருவாகின்றன. அவையாவன:

01) மிதமான குடித்தொகை (Optimum Population)

02) குறைவான குடித்தொகை (Under Population)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) மிகையான குடித்தொகை (Over Population)

குடித்தொகையின் அளவு, பரம்பல், அமைப்பு, கல்விநிலை, தொழில்நுட்பம் என்ற அம்சங்கள் ஒரு நாட்டின் குடித்தொகை எனும் போது கவனம் கொள்ள வேண்டியவையா கும். ஒரு நாட்டின் குடித்தொகை எவ்வாறு அந்த நாட்டிலுள்ள பௌதிக வளத்தைப் பயன்படுத்துகின்றது என்பதைப் பொறுத்தே அந்த நாடானது மிதமான, குறைந்த, மிகை யான குடித்தொகை நிலையைக் காட்டு கின்றதா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

மிதமான குடித்தொகையெனில் நாட்டிலுள்ள மொத்தக் குடித்தொகை நல்ல வாழ்க்கைத் தரத்தைப்பெற்று வாழக்கூடிய அளவிற்கு அந்நாட்டின் வளங்களைப் பயன் படுத்திவரும் நிலையினைக் குறிப்பதாகும். இம்மிதமான தன்மை புதிய வளங்களை கண்டு பிடிக்கும்போது அல்லது தொழில்நுட்பத்தின் தரம் அதிகரிக்கும்போது மாற்றத்திற்கு உட்படும். வளமும் தொழில்நுட்பமும் நிலை யாக இருக்கும் போது குடித்தொகை அதிகரிப் பின் மக்கள் வாழ்க்கைத்தரம் குறையும். இது மிகையான குடித்தொகை நிலையைத் தோற்று விக்கும். வளங்கள் புதிதாக கண்டுபிடிக்கப்பட தொழில்நுட்பமும் வளர்ந்துவர அதற்கேற்ப குடித்தொகை அதிகரிக்காதுவிடின் அது குறைவான குடித்தொகை நிலையைத் தோற்று விக்கும். அதாவது அந்நாடு இருப்பதைவிடக் கூடிய குடித்தொகையைத் தாங்கக் கூடியதான நிலைமையில் இருக்கும்.
(உதாரணம்:- பிறேசில், கனடா, அவுஸ்ரே லியா; போன்ற நாடுகள் பெருமளவு வளங் களைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்குக் குடித் தொகை அளவினைக் கொண்டிருக்க வில்லை.)

மேற்படி நிலைமைகள் ஒரு நாட் டிற்கு மாத்திரம் உரியனவல்ல. நாட்டிற் குள்ளேயுள்ள பிரதேசம், குறிச்சிபோன்ற சிறு அலகு களுக்கும் பொருந்தும்.

**5.0 மனிதனும் அபிவிருத்தியும்**
**அபிவிருத்தியின் அடிப்படைகள்**

மைக்கேல் ரொறாடோ (Michel Torado) எனும் பொருளியல் அறிஞர் உண்மையான அபிவிருத்தியெனில் பின்வரும் மூன்று அம்சங்களில் கவனம் கொள்ளவேண்டு மென்கிறார்.

01) வாழ்வின் தேவை (Life Sustenance)
மனிதனுக்குச் சில அடிப்படைத்தேவை கள் நிறைவு பெறவேண்டும். இவை இன்றி அவன் வாழ முடியாது. அவையாவன: உணவு, உடை, உறையுள், சுக நலன், பாதுகாப்பு என்பனவாகும். இவை இல்லை எனில் அல்லது குறைவாக இருப்பின் அங்கு குறைவிருத்தி நிலவு கின்றதென்றே கூறவேண்டும். இவற்றை முதலாளித்துவ நாடு என்றால் என்ன? சோஷலிச நாடு என்றால் என்ன? கலப்புப் பொருளாதார நாடு என்றால் என்ன? மனிதனுக்கு வழங்கியே தீரவேண்டும் என்றார். இவ்வாறான அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளை வழங்க முடியாத எந்த ஒரு நாடும் அபிவிருத்தி அடைந்ததாகக் கொள்ளமுடியாது.

02) சுய மதிப்பு (Self Respect)
ஒருநாடோ, தனிமனிதனோ இருக்கும் சூழலில் சுயமதிப்பு, கௌரவம், (Respect, Dignity, Honour) நிலவவேண்டும். இவை இல்லையெனில் அபிவிருத்தி இல்லை யென்றே கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார்

03) சுதந்திரம் (FREEDOM)
இது குறிப்பது அரசியல் கருத்துச் சுதந்திரத்தையாகும். சமூக நெருக்குதல், அறியாமை, மேலாதிக்கம் என்பன இல்லா திருத்தல் வேண்டும். மேலும் எந்தச் சித்தாந்தத்தையும் பின்பற்றும் சுதந்திர உரிமை நாட்டிற்கும் மனிதனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும். இவை இல்லையாயின் அங்கு அபிவிருத்தி இல்லை என்றே கொள்ளவேண்டும்.

மேற்படி அம்சங்களையும் மனிதவள அபிவிருத்தி பற்றிப் பேசுவோர் கவனத்தில் கொள்ளவேண்டும் என மக்கேல் ரொடாறோ வலியுறுத்திக் கூறுகின்றார்.

டட்லி சியரஸ் (Dudely Seers)எனும் பொருளியல் அறிஞர் அபிவிருத்திபற்றி பிரஸ்தாபிக்கும் போது பின்வரும் கேள்விகளை முன்வைக்கின்றார்.

ஒரு தேசம் அபிவிருத்தி அடைந்துள்ளதெனக் கருதுவதாயின் அங்கு:

I. வறுமையைப் போக்க என்ன நடந்தது?
II. வேலை இன்மையைப் போக்க என்ன நடைபெற்றது?
III. அங்கு நிலவும் பல்வேறுபட்ட சமமின்மையான நிலைமைகளை நீக்குவதற்கு என்ன நடந்தது?

என்ற கேள்விகளை எழுப்பவேண்டுமென்றும், கணிசமான அளவில் இவை குறைவடைந்து வந்தாற் சந்தேகத்திற்கிடமின்றி அந்நாடு அபிவிருத்திப் பாதையிற் செல்கின்றதென்று கூறலாம் எனக் கூறுகின்றார். இவற்றுள் ஒன்றோ, இரண்டோ பாதகமாக இருக்குமாயின், அந்த நாட்டின் தலா வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்திருந்தாலும் அந்நாடு அபிவிருத்தி அடையவில்லையென்றே கூறவேண்டும் என்கிறார். இதன் மூலம் தனியே பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி அல்ல. அபிவிருத்திக்கு பல்பரிமாணம் உண்டு என வலியுறுத்துகின்றார்.

பிலிப்ஸ் எச்.ஹோம்ஸ் (Philip.H. Coombs) எனும் அறிஞர் மனிதவள அபிவிருத்தியை கல்வியின் மூலமே எய்தமுடியுமெனக் கூறுவதோடு பின்வரும் வழிமுறைகளில் அக்கல்வி மேம்பாட்டை ஏற்படுத்தி மனிதவள அபிவிருத்தியை அடையலாம் என்கின்றார். அவையாவன:

01) பொது அல்லது அடிப்படைக்கல்வி விருத்தி
(எழுத்தறிவு பெறுதல், ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் கல்வியை அபிவிருத்தி செய்தல்.)

02) கல்வியால் குடும்ப மேம்பாடு காணல்
(குடும்ப வாழ்வின் தரத்தை உயரத்துதல், சுகநல வாழ்வு, ஊட்டச்சத்து மேம்பாடு, மனைப்பராமரிப்பு, குழந்தைப் பராமரிப்பு, குடும்பத்திட்டமிடல்).

03) சமூக மேம்பாட்டு கல்வி வளர்ச்சி
(உள்ளூர், சர்வதேச நிறுவனங்களின் வளர்ச்சி, அரசாங்க அரசசார்பற்ற நிறுவனங்களின் வளர்ச்சி, கூட்டுறவு வளர்ச்சி, சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்)

04) தொழில்சார் கல்வி வளர்ச்சி
(பயிற்சி அதிகரித்தல், கருத்தரங்குகள், பயிலரங்குகள், தொழில்சார் பயிற்சிகளை பல மட்டங்களிலும் வழங்குதல்)

கல்வி அபிவிருத்தியின் ஊடான அபிவிருத்தி அம்சங்களில் ஒரு நாடோ, பிரதேசமோ கவனம் செலுத்தும்போது மனிதவள அபிவிருத்தி ஏற்படுமென எச்.ஹோம்ஸ் வலியுறுத்துகின்றார்.

## தமிழர் நிலத்தின் வளங்களும், பயன்பாடும்

### விவசாயத்திற்குரிய பௌதிகவளம்.

நிலவளம், நீர்வளம், மண்வளம் போன்றன விவசாயப் பயன்பாட்டிற்கு இன்றியமையாத பௌதிக வளங்களாகும். தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தின் தரைத்தோற்றம் அதிக உயர வேறுபாடற்ற சமநிலமாகவே காணப்படுகின்றது. மத்திய மலைநாட்டிலிருந்து படிப்படியாக உயரத்திற் குறைந்துவரும் இலங்கையில் வடசமவெளி மற்றும் கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவெளிகளிற் பெரும்பாகத்தை இப் பிரதேசம் அடக்கியுள்ளது. பொதுவாக; இப்பிரதேசத்தின் தரைத்தோற்றத்தை கரை யோரத் தாழ்நிலமென்றும் உள்ளமைந்த மேட்டுப்பாங்கான நிலமென்றும் பிரிக்கலாம். கரையோரத் தாழ்நிலம் ஏறத்தாழ 100 அடிக் குட்பட்ட உயரத்தைக் கொண்டு இப்பிரதே சத்தின் பரந்த பரப்பை அடக்கியுள்ளது. உள்ள மைந்த மேட்டுநிலம் 100 அடிக்கு மேற்பட்டும் 300 அடிக்கு உட்பட்டும் காணப்படுகிறது. இது வடக்கே அகன்றும் கிழக்கே ஒடுங்கியும் உள்ளது. இம் மேட்டுநிலத்தில் குறிப்பிடக் கூடிய மலைகள் இல்லாவிடினும் ஆங்காங்கே பல எச்சக்குன்றுகளும் வெளியரும்பு பாறை களும் காணப்படுகின்றன.

தரைத்தோற்ற அமைப்புக்கேற்ப உயர்ந்த பகுதிகளிலிருந்து உற்பத்தியாகிவரும் ஆறுகள் வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, கிழக்குத் திசைகளை நோக்கிப் பாய்கின்றன. இப்பிரதேசத்தில் 61 ஆறுகள் காணப்பட்ட போதிலும் மகாவலி கங்கையைத் தவிர ஏனை யவற்றில் வருடம் முழுவதும் நீரோட்டம் இருப்பதில்லை. இங்கு காணப்படும் ஆறு களில் பெரும்பாலானவற்றில் மழைகால நீரோட்டம் காணப்படுவதால் இவை பருவ கால ஆறுகளென வழங்கப்படுகின்றன. இதனாலேயே ஆற்றை மறித்து அணைகட்டி நீரத்தேக்கங்கள் உருவாக்கி விவசாயத்திற்கு பயன்படுத்தும் பாசனமுறை இப்பகுதிகளில் பல நூற்றாண்டுகளாக நிலவி வருகின்றது. அண்மைக்காலங்களில் பழைய குளங்கள் பல புனரமைக்கப்பட்டும், புதிய குளங்கள் பல உருவாக்கப்பட்டும் இப்பகுதிகளில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. இவ்வாறான அபிவிருத்திக்குரிய வாய்ப்புகள் அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நிறைய உள்ளன.

இப் பிரதேசத்திலே யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளடக்கிய வடமேற்கு பகுதியின் புவி அமைப்பு மயோசின் கால சுண்ணாம்புப் பாறைப்படையைக் கொண்டுள்ளதால் தரைக்கீழ் நீர்வளம்மிக்க பகுதியாக அமைந் துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடித்தொகை செறிவாக இருப்பதற்கு தரைக் கீழ் நீர்வளமே பிரதான காரணமாகும். வருடம் முழுவதும் கிணற்று நீர் பெற்று இங்கு விவசாயம் செய்தல் நீண்ட காலமாக இடம் பெற்று வருகின்றது. இப்பிரதேசத்தின் பிர தான நிலப்பகுதியின்(வன்னி) கிழக்கு,மேற்கு கரையோர மணற்பாங்கான பகுதிகளிலும் உள்ளமைந்த வண்டல்மண் பகுதிகளிலும் ஓரளவு தரைக்கீழ் நீர்வளம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாடு போலன்றி குளங் களில் நீர் இருக்கும் காலங்களிலேயே வன்னி யில் ஓரளவு தரைக்கீழ் நீரை பெறமுடி கிறது. பெருமளவுக்கு குடிநீர் பெறுவதற்கே இவை பயன்படுத்தப்படுகின்றன.

தமிழர் பாரம்பரியப் பிரதேசம், வருடம் ஏறத்தாழ 1800 மி.மீ. (75 அங்குலம்) இற்குக் குறைந்த மழைவீழ்ச்சி பெறும் வறண்ட வலயத்தின் பெரும்பாகத்தை உள்ள டக்கியுள்ளது. பொதுவாக இங்கு வருடம் முழுவதும் சராசரியாக உயர்வான வெப்ப நிலையான 28 பாகை சென்ரிகிறேட் அளவு நிலவுகிறது. வருடாந்த வெப்ப ஏற்றத்தாழ்வு 21 - 32 பாகை செ.கி ஆக அமைகின்றது. இங்கு வருடத்தின் நான்கு மாதங்களுக்கே குறிப் பிடக்கூடிய மழைவீழ்ச்சியும் கிடைக்கப் பெறுகின்றது. இப்பிரதேசத்தின் வருட சராசரி மழைவீழ்ச்சி 1500 மி.மீ ஆகும். மழைவீழ்ச்சிப் பரம்பலில் பிரதேச வேறுபாடுகள் உள. மன்னார், அம்பாறை மாவட்டங்களின் தென்பகுதிகள் குறைந்தளவிலான 1200 மி.மீ தொடக்கம் 1500 மி.மீ வரை மழை பெற, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதிகள் உயர்ந்தனவான 1800 மி.மீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு மழையைப் பெறுகின்றன. எனினும் 1200 மி.மீ தொடக்கம் 1800 மி.மீ வரை மழைபெறும் பரப்பளவே அதிகமாகும். யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மாவட்டங்கள் முழுவதும் மன்னார், அம் பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிற் பெரும்பாகமும் 1200 மி.மீ தொடக்கம் 1500 மி.மீ மழைபெறும் பகுதிகளாக உள்ளன. யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மாவட்டங்கள் முழுவதும் மன்னார், அம் பாறை, மட்டக்களப்பு, மாவட்டங்களிற் பெரும்பாகமும் வருடத்திற்கு சராசரியாக 1200 மி.மீ தொடக்கம் 1800 மி.மீ மழை பெறும் பகுதிகளாகவே அமைகின்றன.

இப் பிரதேசம் வடகீழ் மொன்சூன் காற்றினாலும், சூறாவளி நடவடிக்கைகளி னாலும் ஒக்டோபர் முதல் ஜனவரி வரையான காலப்பகுதியிலேயே அதிகளவு மழைவீழ்ச்சி யைப் பெறுகின்றது. வருடம் முழுவதும் கிடைக்கப்பெறும் மொத்த மழைவீழ்ச்சியின் 70வீதம் நான்கு மாத காலத்தினுள்ளேயே பெறப்படுவது முக்கிய அம்சமாக உள்ளது. இம் மழைவீழ்ச்சியே இப்பிரதேசத்தின் காலபோக விவசாயச் செய்கைக்கு உதவு கின்றது. மார்ச் முதல் மே வரை மேற்காவுகை யினாலும் குறைந்தளவு சூறாவளி நடவடிக்கை யினாலும் சிறிதளவு மழைவீழ்ச்சி கிடைக் கின்றது. சிறுபோகச் செய்கைக்கு இம் மழை வீழ்ச்சி ஓரளவுக்கு உதவுகின்றது. யூன் முதல் ஆகஸ்ட் வரை இங்கு அதிக வறட்சி நிலவு கின்றது. இக்காலத்தே வீசும் தென்மேற்கு மொன்சூன் இலங்கையின் ஈரவலயத்திற்கு மழையைக் கொடுத்து இப்பகுதிகளில் வறண்ட காற்றாக வீசுகின்றது. இவ் வறண்ட காற்றை வடக்கே சோளகக் காற்று என்றும் கிழக்கே சோளகக்கச்சான் காற்று என்றும் வழங்குவர்.

இப் பிரதேசத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு தவிர ஏனைய பகுதிகளில் பெரும் பாகத்தில் வறண்ட பிரதேசத்தின் முறையான மண் வகையான செங்கபில நிற மண் பரந்துள்ளது. இம் மண்வகை தொல்காலப் பாறைகளிலிருந்து விருத்தியடைந்ததாகும். விவசாயச் செய்கைக்குப் பொருத்தமான வளமான மண்ணான இது மன்னார், மட்டக் களப்பு மாவட்டங்களில் ஓரளவுக்கும் வவுனியா, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் பெருமளவுக்கும் பரந் துள்ளது. மன்னாரிலிருந்து முல்லைத்தீவு வரை கரையோரத்திற்கு சிறிது உள்ளாக சிவந்த மஞ்சல் லட்சோல் மண், செங்கபில நிறமண் என்பன உள்பரப்பிற்கும் கரையோரப் பகுதிக் கும் இடையே பரந்துள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்திய பகுதியிலும் பரந்துள்ள இம்மாதிரியான மண்வகை செம்மண் என வழங்கப்பட்டு குடாநாட்டில் வளமான மண்ணாக கருதப்படுகின்றது. மன்னார் தொட்டு முல்லைத்தீவுக் கரையோரமாகவும், யாழ்ப்பாணக்குடாநாட்டின் கரை யோரமாகவும் உவர்மண் பரந்துள்ளது. புல் வளருவதற்கே பொருத்தமான இம் மண்வகை விவசாயத்திற்குப் பயன்பட அதிக இரசாயன உரம் பயன்படுத்தப்படவேண்டும். மட்டக் களப்புக்கு வடக்கேயும் திருகோணமலைக்குத் தெற்கேயும் சுண்ணும்புக்கலப்பற்ற கபில நிற மண் பரந்துள்ளது. வளம் குறைந்த இம்மண் பரந்தளவு புல் வளரச்சிக்கு ஏற்றதா கும். இவை தவிர வடக்கேயும், கிழக்கேயும் காணப்படும் ஆற்றுப்படுக்கைகளிலும் அவற்றின் வெள்ளச் சமவெளிகளிலும் வளம் மிக்க வண்டல் மண் படிவுகள் பரந்துள. மன்னார்தீவு, பூநகரி முனை, யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குப்பகுதி, முல்லைத்தீவிலிருந்து பொத்து வில் வரையான கிழக்குச் கரையோரப் பகுதி ஆகியவற்றில் அண்மைக் கால மணற்படிவுகள் பரந்துள்ளன. பொங்குமுகப் படிவுகளான இவை தென்னைச் செய்கைக்குப் பொருத்த மானவை. மணற் குவியலாகக் காட்சிதந்த இவை கட்டுமான வேலைக்காக பெருமளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகழப்பட்டு வருவதால் கடல்நீர் தரையினுள் புகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

**நிலப்பயன்பாடு**

தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தில் உழைக்கும் மக்களில் 60வீதத்தினர் விவசாயத்தையே பிர்தான தொழிலாகக் கொண்டுள்ளனர். இப்பகுதிகளில் பாரம்பரியமாக விவசாயமே முக்கிய பொருளாதார நடவடிக்கையாக இருந்து வருகின்றது. விவசாயத் துறையில் புகுத்தப்பட்ட புதிய தொழில்நுட்ப முறைகள் இப்பகுதி விவசாயிகளிடையே வேகமாகப் பரவியுள்ளன. இப்பிரதேசம் அடங்கியுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிலப்பயன்பாட்டை இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். தோட்டச்செய்கையோடு தொடர்பான நிலப்பயன்பாடு எனவும், நெற்செய்கையோடு தொடர்பான நிலப் பயன்பாடு எனவும் இவற்றை வகைப்படுத்தலாம்.

இப்பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 6.1 வீதத்தையும் மொத்தக்குடித்தொகையில் 36 வீதத்தையும் உள்ளடக்கிய யாழ்ப்பாணக்குடாநாட்டுப் பகுதியே தோட்டச் செய்கை அதிகளவுக்கு வளர்ச்சி பெற்ற பகுதியாக உள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைக்கப்பெறும் தரைகீழ் நீர் வளத்தைப் பயன்படுத்தி இப்பகுதி வாழ் மக்கள் வருடம் முழுவதும் பயிர் செய்கின்றார்கள். மிகவும் சிறிய அளவிலான துண்டு நிலங்களில் செறிவான முறையில் தோட்டப் பயிர்ச் செய்கை இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கையின் வேறு எப்பாகத்திலும் இவ்வகையான செறிந்த பயிர்ச்செய்கை முறை மேற்கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக யாழ்ப்பாணக்குடாநாட்டுப் பகுதி செறிவான குடித்தொகையை கொண்டுள்ளது. தோட்ட நிலங்கள் அதிகளவு கொண்ட பகுதிகளில் சதுரமைலுக்கு 3000 இற்கு மேற்பட்டோர் வாழ்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு ஏறத்தாழ 1025 சதுர கி.மீ பரப்பைக் கொண்டது. இதில் 60 வீதமான பகுதியே மக்கட் பயன்பாட்டிற்கு ஏற்றதாக அமைகின்றது. ஏனைய 40 வீதமான பகுதி மணல், பாறை ஆகியவற்றையும் சதுப்பு நிலங்களையும் கொண்டுள்ளதால் பயன்பாட்டிற்கு ஏற்றதாக அமையவில்லை. மக்களுக்குப் பயன்படுகின்ற 60 வீதமான நிலப்பகுதியில் மூன்றிலொரு பகுதி குடியிருப்பு நிலங்களாக உள்ளன. பனை, தென்னை ஆகிய மரப்பயிர்கள் மற்றொரு மூன்றிலொரு பகுதியிற் காணப்படுகின்றன. எஞ்சிய பகுதியே நெற்பயிரும், தோட்டப் பயிரும் செய்கை பண்ணப்படும் விவசாயப்பகுதியாகும். அண்மைக்காலங்களில் விவசாய நெல்வயல் நிலங்கள் தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்ற போக்கினையும் தோட்ட நிலங்கள் குடியிருப்பு நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்ற போக்கினையும் அவதானிக்க முடிகின்றது.

இப்பகுதித்தோட்டங்களில் புகையிலை, மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு, காய்கறிகள், திணை வகைகள், வாழை ஆகியன பெருந்தொகையாக விளைவிக்கப் படுகின்றன. இலங்கையின் உபஉணவுத் தேவையின் கணிசமான பங்கு யுத்தத்திற்கு முன்னர் யாழ்ப்பாணக்குடாநாட்டு உற்பத்தியாலேயே பூர்த்தி செய்யப்பட்டது. உதாரணமாக இலங்கையில் வெங்காயச் செய்கைக்குட்பட்ட பரப்பளவில் 38 வீதத்தையும், மிளகாய்ச் செய்கைக்குட்பட்ட பரப்பளவில் 15 வீதத்தையும் யாழ்ப்பாணக்குடாநாடே உற்பத்தி செய்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாயிகள் புதிய தொழில்நுட்ப முறையினை புகுத்துவதில் பேரார்வம் கொண்டவர்கள். தோட்டச்செய்கைக்கு நீர் இறைக்கும் இயந்திரம், செயற்கை உரம், கிருமிநாசினி என்பனவற்றை பெருமளவு பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரித்துள்ளார்கள். குடித்தொகை அதிகரிப்பும், தோட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கை அதிகரிப்பும் தரைக்கீழ் நீர் வளத்தை மிகையாகப் பயன்படுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளன. தரைக்கீழ் நீரின் மிகையான பயன்பாட்டினால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலும் உவர்நீர் பகுதிகள் அதிகரித்து வருகின்றன. தரைக்கீழ் நீரவளத்தை பேணுவதற்கு கிடைக்கும் மழை நீரில் பெரும்பகுதி தரையின் கீழ் செல்வதற்கு வழி காணவேண்டும். இதற்கு இப்பகுதிகளின் நீர்த் தேக்கங்கள் ஆழமாக்கப்படுதலும், நீர்த்தேக்கங்களில் தூர் அகற்றுதலும், புதிய நீர்த்தேக்கம் உருவாக்கப்படுதலும் அவசியம். மேலும், இங்கு காணப்படும் பல கடனீரேரிகள் நன்னீர் ஏரிகளாக மாற்றப்படுவதாலும் நற்பயன் விளையும். இந்நடவடிக்கையால் நீர், நிலவளம் அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு.

யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளின்(வன்னி) நிலப்பயன்பாட்டை தாழ்நிலப்பயன்பாடு, மேட்டுநிலப்பயன்பாடென வகைப்படுத்தலாம். மேட்டுநிலப் பயன்பாடு இப்பகுதியில் அதிகம் விருத்தியடையவில்லை. தாழ்நிலப்பயன்பாட்டில் நெற்செய்கையே முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆற்றுவடிநிலப்பகுதிகளிலும் நீர்த் தேக்கத்தினை அண்டிய பகுதிகளிலும் வண்டல்மண், களிமண் படிவுகள் காணப்படும் தாழ்வான பகுதிகளிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இப்பகுதிகளிற் பழைய பாரம்பரிய கிராமிய விவசாய நிலப்பயன்பாடும், புதிய குடியேற்றத்திட்ட நிலப்பயன்பாடும் வெவ்வேறான பண்புகளைக் கொண்டமைந்துள்ளன. மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளின் கரையோரமாக பழைய விவசாய நிலப்பரப்புகள் பரந்துள. முன்னர் காடு சூழ்ந்திருந்து நில அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்ட உள்ளமைந்த பகுதிகளில் குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்பட்டு அபிவிருத்தி அடைந்துள்ளன. 1935ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட நில அபிவிருத்திச் சட்டத்தின் பின்னர் இப்பகுதிகளில் குடியேற்றத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. பல நோக்கு குடியேற்றத்திட்டம், பாரிய குடியேற்றத்திட்டம், கிராமவிஸ்தரிப்புத் திட்டம், மத்தியவகுப்பார் குடியேற்றத்திட்டம், இளைஞர் குடியேற்றத்திட்டம் ஆகியனவாக இவை அமைக்கப்பட்டுள்ளன. குடியடர்த்தி மிக்க பகுதிகளில் இருந்து மக்களை நகர்த்தவும் நிலமற்றோருக்கு நிலமளிக்கவும் வேலையற்றிருப்போருக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் குடியேற்றத்திட்ட உருவாக்கம் ஓரளவு உதவியுள்ளது. அம்பாறையில் கல்லோயாத் திட்டம், மட்டக்களப்பில் உன்னிச்சைக் குளத் திட்டம், மன்னாரில் கட்டுக்கரைக்குளத்திட்டம், கிளிநொச்சியில் இரணைமடுக்குளத் திட்டம், வவுனியாவில் பாவற்குளத்திட்டம், என்பன மாவட்டத்திற்கொன்றான உதாரணங்களாகும். இப்பகுதிகளிலே படித்த இளைஞர்களுக்கென உப உணவு உற்பத்தித் திட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்த முத்தையன்கட்டு இளைஞர்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்த விஸ்வமடு, திருவையாறு இளைஞர் திட்டங்கள் என்பன குறிப்பிடத்தக்கன. ஏனைய குடியேற்றத்திட்டங்கள் போலன்றி இளைஞர் திட்டங்கள் பொருளாதார ரீதியில் திருப்தியைத் தருவதாக விருத்தியடைந்துள்ளன. பொதுவாக; இப்பிரதேசத்திலே குளநீரப்பாசன அடிப்படையில் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் நிறைய உள. இந்நடவடிக்கைகள் குடியடரத்தி மிக்க யாழ்ப்பாணக்குடாநாடு மற்றும் வன்னிக் கரையோரப் பகுதிகளிலிருந்து இப்பகுதிகளுக்கு மக்களை நகர்த்தவும் உதவும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்த நிலம் ஏறத்தாழ 202 977 (2007) கெக்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். இது இலங்கையின் மொத்த நெல் விளைபரப்பில் 25வீதமாக அமைகின்றது. இப்பிரதேசத்தின் மொத்தநெல் விளைபரப்பில் 75 வீதத்தைக் கிழக்கு மாகாணம் உள்ளடக்கியுள்ளது. மொத்த நெல்விளை நிலத்தில் 44.4 வீதம் பருவகால மழையை நம்பிய மானாவாரி நிலங்களாக உள்ளன. ஏனையவை நீர்ப்பாசன வசதியுடைய குளங்களை அடுத்துள்ளன. பாசனவசதியுடைய நிலங்களில் வருடத்தில் இரு தடவை நெல் விளைவிக்கப்படும். இவ்வாறான விளை நிலப்பரப்பு 28 வீதமாக அமைகிறது. பொதுவாக இப்பிரதேசத்தில் அதிகளவு நெல்விளை பரப்பு பருவமழையை நம்பியதாகையால் பருவமழை பிழைத்து விடும் காலங்களில் நெல் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. நெற்செய்கையில் நிலவும் இந்த நம்பிக்கையற்ற நிலையை மாற்றவும் சிறு போகத்தின் போது அதிகளவு நெல்லை விளைவிக்கவும் ஏலவேயுள்ள விளைநிலப்பரப்பிற்கு பாசன வசதிகள் அதிகரிக்கப்படுதல் அவசியம்.

இப்பகுதி நெற்செய்கையில் புதிய தொழில்நுட்ப முறைகள் புகுத்தப்பட்டுள்ளன. இப்பிரதேசங்களில் உழவு இயந்திரப் பாவனையே பெருமளவு நிலவுகின்றது. சிறந்த கலப்பின உயர் விளைச்சல் தரும் நெல்லினங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் இரசாயன உரம், கிருமிநாசினி, களைகொல்லி என்பனவற்றின் உபயோகம் நிறைய உள்ளது. விவசாயிகளின் நலனை உத்தேசித்து அரசாங்கமும் பல உதவிகள் அளித்து வருகின்றது. கடன் உதவி, உத்தரவாத விலைத்திட்டம், சந்தைப்படுத்தும் வசதி, விவசாய ஆலோசனை பெறக்கூடிய அமைப்புகளை உருவாக்குதல் என்பன இவற்றுட் குறிப்பிடத்தக்கன. இவை காரணமாக இப்பகுதிகளில் நெல் விளைச்சல் வருடாவருடம் அதிகரித்து வருகின்றது. சராசரி நெல் விளைச்சல் ஏக்கருக்கு 42 புசலேயாகும். மன்னாரில் ஏக்கருக்கு 60 புசல் வரை கிடைக்கின்றது. பொலனறுவையில் ஏக்கருக்குரிய சராசரி உற்பத்தி 80 புசலாக உள்ளது. பாசன வசதிகள் அதிகரிக்கப்படுவதாலும் புதிய தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடிப்பதனால் விளையக்கூடிய பயன்களை விவசாயிகளுக்கு உணரவைப்பதாலும் ஏக்கருக்குரிய உற்பத்தியை இரண்டு மூன்று மடங்காக அதிகரிக்க இயலும். இப்பிரதேச விவசாய செய்கையில் நீர்ப்பற்றாக்குறையே முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனைத் தீர்ப்பதற்கு புதிய நீர்த்தேக்கங்கள் வாய்ப்பான இடங்களில் அமைக்கப்படுதலும் தூர்ந்த நிலையிலுள்ள குளங்களை புனரமைத்தலும் ஏலவேயுள்ள குளங்களின் நீர்க் கொள்ளளவை கூட்டுதலும் அவசியம். மகாவலி திசை திருப்புத் திட்டம் கிழக்கே மாதுறுஓயா சார்ந்த பகுதிகளின் விருத்திக்கு வாய்ப்பாக அமையும். வடக்கே திசை திருப்பத் திட்டமிட்டுள்ள மகாவலிகங்கை நீர் வடபகுதி நிலங்களுக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுமாயின் இப்பகுதிகளின் விவசாயம் பெருமளவு விருத்தியுறும் என்பதில் ஐயமில்லை.

**கனிப்பொருள் வளம்**

இலங்கையில் கனிப்பொருள் வளம் பொதுவாகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகளும் குறைவே, தமிழர் பாரம்பரியப்பிரதேசத்தைப் பொறுத்த வரையில் சில வாய்ப்பான நிலைமைகள் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் சுண்ணக்கல், களி, உப்பு, இல்மனைற் - மொனசைற், சிலிக்காமணல் முதலான கனிப்பொருட்கள் காணப்படுகின்றன. நில நெய் பெறக்கூடிய சாத்தியக் கூறும் ஆராயப்பட்டு வருகின்றது. புத்தளம் தொடக்கம் பரந்தன் முல்லைத்தீவை இணைக்கும் கோட்டிற்கு வடமேற்கேயுள்ள பகுதிகள் மயோசின் காலத்தே தோன்றிய சுண்ணக்கல் படிவுகளைக் கொண்டு காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ 2000 கி.மீ பரப்பில் பரந்துள்ள இப்படிவுகள் பலநூறு மீற்றர் ஆழம்வரை காணப்படுகின்றன. புத்தளம், மன்னார் யாழ்ப் பாணக் குடாநாட்டின் வடக்குப் பகுதிகளில் இவை மேற்பரப்புப் படிவுகளாக அமைந் துள்ளன. இச் சுண்ணக்கல் படிவுகள் பெருந் தொகையாக அகழப்பட்டு காங்கேசன்துறை, புத்தளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆலைகளில் சீமேந்து உற்பத்திக்குப் பயன் படுத்தப்பட்டன. யுத்தத்திற்கு முன் நாட்டின் மிகப்பெரிய சீமேந்து ஆலை காங்கேசன் துறையிலேயே அமைந்திருந்தது. சீமேந்து உற்பத்தி தவிர கண்ணாடி உற்பத்தி, கடதாசி உற்பத்தி, சீனி சுத்திகரிப்பு, நீர் சுத்திகரிப்பு, தோல் பதனிடல் போன்றவற்றுக்கும் சுண்ணக் கல் பயன்படுகின்றது. இப்பிரதேசத்தில் பெருந்தொகையாகக் காணப்படும் இன் னொரு கனிப்பொருள் களியாகும். ஆற்றுப் பள்ளத்தாக்குகள், குளங்களை அண்டிய பகுதிகள், கழிமுகங்கள் ஆகிய பகுதிகளில் களிப்படைகள் பரவலாக உள. செங்கட்டி, ஓடு முதலியனவற்றை உற்பத்தி செய்யவும், சீமேந்து உற்பத்திக்குரிய துணைப்பொரு ளாகவும் களி பயன்படுத்தப்படுகின்றது. முல்லைத்தீவு கல்லோயா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆலைகள் செங்கட்டி, ஓடு ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகின் றன. களியைப் பயன்படுத்தி மட்பாண்டப் பொருட்களும் குடிசைத்தொழில் அடிப்படை யில் பரவலாகப் பல கிராமங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இப்பிரதேசம் நெடிய கடற்கரையையும் பல குடாக்களையும் கடலேரிகளையும் கொண்டிருப்பதோடு வறண்ட பகுதியாகும், நாட்டின் வேறு எப்பாகத்திலுமில்லாதவாறு பல உப்பளங்கள் இப்பிரதேசத்தில் பரந்துள. ஆனையிறவு, நிலாவெளி, சிவியாதெரு, இருபாலை, கரணவாய், கல்லுண்டாய், முல்லைத்தீவு முதலிய இடங்களில் உப்பு உற்பத்தி செய்யமுடியும். இப்பகுதியிலுள்ள உப்பளங்களில் ஆனையிறவு உப்பளமே மிகப் பெரியதாகும். இவ் உப்பள உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை ஒன்றும் இயங்குகிறது. இல்மனைற் படிவுகளும் ஓரளவு மொனசைட், றூரைல், சேர்க்கன் படிவுகளும் புல்மோட்டை, குதிரைமலை, திருக்கோவில் முதலிய கடற்கரையோரப் பகுதி மணற் பரப்புகளில் பரந்துள்ளன. இவை அகழப் பட்டு அங்குள்ள ஆலையில் சுத்தம் செய்யப் பட்டு ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நிகழ்வு நீண்டகாலமாக இடம்பெற்று வருகிறது. இல்மனைற் படிவுகளோடு சிறிதளவு றூரைல் சேர்க்கன் படிவுகள் கலந்து காணப்படுகின்றன. சிலிக்காமணல் சாவகச்சேரியிலும் பருத்தித்துறை தொட்டு திருகோணமலை வரை கடற்கரையோரமாகப் பரந்தும் காணப்படுகின்றது.

சிலிக்கா மணலைப் பயன்படுத்தி கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்று நாகர் கோயிலில் அமைக்கப்படு வதற்கான ஆரம்ப ஆய்வு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர கட்டிடத் தேவைக்கு வேண்டிய கல், மணல் முதலியன இப்பகுதிகளில் பெருமளவுக்குப் பெறக்கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட புவிச்சரித ஆய்வுகள் இப்பகுதிகளில் நில நெய்வளம் இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டெனத் தெரிவிக்கின்றன. அரசாங்கமும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றும் சேரந்து இதற்கான அகழ்வாராய்ச்சிகளை அண்மைக் காலத்தில் ஆரம்பித்துள்ளன. இவ் ஆய்வுகள் வெற்றியளிப்பின் எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக இது அமையக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிட்ட கனிப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட சீமேந்துக் கைத்தொழில், இரசாயனக் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில், ஓட்டுக் கைத்தொழில், கண்ணாடிக் கைத்தொழில் ஆகியவற்றை விஸ்தரிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் இன்னும் பல பகுதிகளில் புதிய ஆலைகள் அமைப்பதற்கும் நிறைய வாய்ப்புகள் இப்பிரதேசத்தில் உள்ளன.

இப் பிரதேசத்தில் விவசாய வள அடிப்படையிலான பல கைத்தொழில்களும் நிறுவப்படலாம். வாழைச்சேனை கடதாசி உற்பத்தி ஆலை, கந்தளாய், கல்லோயா சீனி உற்பத்தி ஆலைகள், திருகோணமலை மா அரைக்கும் ஆலைகள் என்பன குறிப்பிடத்தக்கன. யாழ்ப்பாணக் குடாநாடு சுருட்டுக் கைத்தொழிலுக்கு பெயர்பெற்ற இடமாக நீண்ட காலமாக விளங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இங்கு பனை, தென்னை, வளங்களைப் பயன்படுத்திக் கிராமங்கள் தோறும் குடிசைக்கைத்தொழில் அடிப்படையில் பலவகையான பாவனைப் பொருட்களும், அலங்காரப் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கையில் தென்னைச் செய்கைக் குட்பட்ட நிலப்பரப்பில் 6 வீதத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்குகின்றன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களும் இப்பிரதேசத்தின் தென்னைச்செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பில் 60வீதத்தை அடக்கியுள்ளன. பனைவளம் இப்பிரதேசத்தின் முக்கிய வளங்களுள் ஒன்றாக அமைகின்றது. இலங்கையில் மொத்தம் 70,000 ஏக்கர் பரப்பில் பனைவளம் உள்ளது. இதில் தமிழர் பாரம்பரியப் பிரதேசம் 57,00 ஏக்கர் (82 வீதம்) பரப்பைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதியில் மாத்திரம் 42,000 ஏக்கர் பரப்பில் (60 வீதம்) பனைவளம் காணப்படுகிறது. யாழ்ப்பாணக்குடாநாட்டுப் பகுதிவாழ் மக்கள் பாரம்பரியமாக பனை வளத்திலிருந்து அதிக பயன் நுகர்ந்து வருகின்றனர். வளமற்ற நிலங்களில் வளரக்கூடிய இப்பனையில் இருந்து 80இற்கு மேற்பட்ட பயன்கள் பெறலாமெனத்தாலவிலாசம் எனும் நூல் கூறும். அக்கால மக்களின் உணவு, குடிபானத் தேவைகளின் ஒருபகுதியை பனைமரம் பூர்த்தி செய்தது. வீடு கட்டுவதற்கு மரமும், ஓலையும் பனைமரத்திலிருந்தே பெறப்பட்டன. விறகாயும் இதுவே பயன்பட்டது. ஆகவே, அன்றைய யாழ்ப்பாணத்துக் கிராம மக்கள் பனையுடன் ஒன்றித்த வாழ்வை மேற்கொண்டிருந்தனர். பிற்காலத்தில் ஓரளவுக்கே பனை வளம் பயன்படுத்தப்பட்டு வந்தது. பனை வளப்பயன்பாட்டினை விருத்தி செய்வதற்காக இலங்கை அரசு பனம்பொருள் அபிவிருத்திச்சபை என்றதோர் அமைப்பினைத் தோற்றுவித்துள்ளது. இவ்அமைப்பு பனைவளப்பயன்பாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதோடு பல வேலைத் திட்டங்களை கிராமங்கள்தோறும் உருவாக்கி வருகின்றது. பனைவள அடிப்படையிலான குடிசைக் கைத்தொழில் வளர்ச்சிக்கு இந் நிறுவனம் பெரும் பணியாற்றும் என எதிர் பார்க்கலாம். பனைவளத்தைப் பயன் படுத்தி கைவண்ணப் பொருள் உற்பத்தி, சீனி உற்பத்தி, மதுபான உற்பத்தி, போன்றன அண்மைக் காலத்தில் நன்கு விருத்தியடைந்து வருகின்றன.

**கடல் வளம்**

கடல் வளத்தைப் பல்வேறு வகையில் பயன்படுத்தலாமாயினும், இங்கு மீன்பிடித்தலுக்காகவே இவ்வளம் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்திலே மனிதனின் உணவுத் தேவையில் கணிசமான பங்கினை கடல்வளமே அளிக்குமென நம்பப்படுகின்றது. இலங்கையின் மீன்பிடித்தொழிலின் விருத்திக்கு அடிப்படையான பௌதிக வாய்ப்புகளை வடக்கு கிழக்கு மாகாணங்களே பெருமளவு கொண்டுள்ளன. 1100 மைல் நீள நெடிய கடற்கரையோரத்தைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கண்டத்திட்டின் பரப்பளவு 12,000 சதுரமைல்களாகும். இதில் 73 வீத பரப்பளவு வடகிழக்கு மாகாணம் சார்ந்துள் ளது. தென்னிந்தியாவரை பரந்துள்ள வட பகுதிக் கண்டத்திட்டு மட்டும் நாட்டின் மொத்தக் கண்டத்திட்டுப் பரப்பளவில் 57 வீதத்தைக் கொண்டுள்ளது. வட கண்டத் திட்டில் அமைந்துள்ள பேதுரு கடல்மேடை, முத்துக் கடல்மேடை, உவாட்ஸ் கடல் மேடை என்பன மீன்வளம் மிக்க பகுதி களாகும். ஆழமற்ற இக்கடல் மேடைகளில் சூரிய ஒளிஅடித்தளம் வரை ஊடுருவிச் செல்ல இயல்வதால் மீனுணவான நுண்ணுயிர்களின் வளரச்சி இப்பகுதிகளில் அதிகமாகும். இதுவே மீன்வளம் அதிகளவு காணப்படுவதற்குக் காரணமாய் அமைகின்றது. இப்பிரதேசக் கடற்கரையோரங்கள் குடாக்களையும், கடனீ ரேரிகளையும், பெருமளவு கொண்டுள்ளதால் மீன்பிடித்துறைமுகங்கள் ஏற்படுத்தவும் வச தியை அளிக்கின்றன. தென்மேற்கு மொன்சூன் வேகமாக வீசும் திசைக்கு ஒதுக்குப்புறமாக இப்பிரதேசம் அமைந்துள்ளதாலும், வடக்கு மொன்சூன் மென்மையாக வீசுவதாலும் வருடம் முழுவதும் இப்பகுதிகளில் மீன் பிடித்தல் இடம்பெறுவதற்குரிய சாதகமான நிலை உண்டு.

தமிழரது பாரம்பரியப் பிரதேசத்தில் வருடத்திற்கு 12,56980 அந்தர் உடன் மீனும் 1,10099 அந்தர் பதனிடப்பட்ட மீனும் பெறப் படுகின்றன. இலங்கையின் மொத்த உடன் மீன் உற்பத்தியில் இப்பிரதேசம் 52வீதத்தை யும் பதனிடப்பட்ட மீன் உற்பத்தியில் 90வீதத்தையும் யுத்த காலத்திற்கு முன்னர் வழங்கிற்று. மீன்பிடித்தொழில் தவிர மன்னாரில் முத்துக்குளித்தலும், மட்டக் களப்பு பகுதிகளில் இறால் பிடித்தலும், யாழ்ப்பாணப் பகுதிகளில் கடலட்டை பதனி டுதலும் குறிப்பிடக்கூடிய வருமானத்தை யளித்து வருகின்றன. கடலுணவு உற்பத்தியி லும் மீன்பிடித் தொழிலுக்கு வேண்டிய உபகரண உற்பத்தியிலும் காரைநகரில் அமைந்துள்ள சீநோர் நிறுவனம் குறிப்பிடத் தக்க பணியாற்றி வருகின்றது.

இப்பிரதேசத்தில் மீன்பிடித் தொழி லின் புராதன முறைகளே இன்றுவரை பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இவை நவீனமயப் படுத்தப்படின் மீன்பிடித் தொழில் பெருமளவு விருத்தியடையக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. இயந்திர வள்ளங்களின் பாவனையை அதிகரித்தல், மீன்பிடித்தலில் புதிய முறை களை பயிற்றுவித்தல், புதிய மீன்பிடி உபகரணங்களை மீன்பிடி, தொழிலாளர்கள் இலகுவிற் பெற வழிவகை செய்தல், மீன்பிடித் துறைமுகங்களை அதிகரித்தல், மீனைப் பழுதடையாது பாதுகாக்கும் வசதிகளையும், போக்குவரத்து வசதிகளையும் அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகள் துரிதமாக மேற் கொள்ளப்படின் மீன்பிடித் தொழில் இப்பகுதியின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததோர் தொழிலாக அபிவிருத்தி யுறுமென்பது திண்ணம்.

இது தவிர விலங்கு வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் நிறைய உள. பால் உற்பத்தி, இறைச்சி உற்பத்தி, தோல் பதனிடுதல் போன்ற தொழிற்றுறைகள் வடக்கு-கிழக்குப் பகுதி களில் அதிகளவு விருத்தியடையக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

தமிழர் பாரம்பரியப் பிரதேசத்திலே கல்வித்திறன், தொழில்நுட்ப ஆற்றல் கொண்ட பண்பாட்டிற் சிறந்த மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் இப்பிரதேசம் கொண்டுள்ள பொருளாதார வளங்களைத் திட்டமிட்ட முறையில் முறையாகப் பயன்படுத்தினால் விவசாயமும், கைத்தொழி லும் பெருமளவு விருத்தியுறும். தமிழர் தம் பிரதேச அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டு அயராது உழைப்பார்களேயாயின் தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தை சுயநிறைவுப் பொருளாதார வளம்கொண்ட பகுதியாக மாத்திரமன்றி; பல்வேறு மேலதிக உற்பத்தி களை ஏற்றுமதி செய்யக்கூடிய பூமியாக மாற்ற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வடபுலத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய ஒரு நோக்கு

தொகுக்கப்பட்டது

பேராசிரியர் வி.பி.சிவநாதன்,
தலைவர், பொருளியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

முதலில் வடமாகாண அபிவிருத்திப் பொருளாதாரக் கொள்கை எந்தகக்கட்டளைப் படிமத்தைச் சார்நத்து என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

1) பிரதேச அபிவிருத்தியூடாக தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்ற இலக்குடன் செயற்படுகின்றதா?

2) போருக்குப்பின்னரான புனர்நிர்மாணம் மீள் கட்டுமானத்தைச் செய்தால் மற்றவை அதன் வழி முன்னெடுக்கப்படும் என்ற இலக்குடையதா?

3) இன முரண்பாடுகளைத் தீர்த்தல் என்ற வகையிலான இலக்குடன் பொருளாதார கொள்கை முன்னெடுப்பா?

4) போரால் பாதிக்கப்பட்டவர்களிற்கான நிவாரணம் என்ற இலக்கு மாத்திரம் கொண்டதா?

5) பின்தள்ளப்பட்ட காலத்திற்கான விரைவான பொருளாதார முன்னேற்ற நடவடிக்கையா?

6) பூர்வீகக்குடிகள் பொருளாதார மேற்கிளம்பலை எதிர்கொள்ளவிடாமல் (அவுஸ்திரேலியா ஆதிக்குடிகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் செவ்விந்தியர்) பார்த்துக் கொள்ளல் என்பதற்கமைவாக நுகர்வு மயமாக்கும் நடவடிக்கையா?

என்ற வகையில் இதனை நுணுக்கமாக நோக்கவேண்டும். இதற்கு இப்பிரதேச அபிவிருத்தி சார்பான பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் அரசியற் பொருளாதாரக் கொள்கைகள் எவ்வாறு எவ்வடிப்படையில் வகுக்கப்படுகிறது, செயற்படுத்தப்படுகிறது என்பதை தெளிவாக அறிந்துகொண்டு பின்னர் இப்பொருளாதார அபிவிருத்திக்கான சாதக பாதக தன்மைகளை நோக்க முடியும்.

பொதுவாக பொருளாதாரம் ஒன்றை உற்பத்தித்துறைகள் என்ற வகையில் முதற் துறை, கைத்தொழில்துறை, சேவைத்துறை என வகுத்து அவற்றில் ஏற்படும் மாற்றங்களை பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் என்ற வகையில் நோக்குவதுண்டு. இத்துறைகளில் உள்ளிட்டுச் சந்தையும் வெளியீட்டுச் சந்தையும் திறந்த கட்டற்ற முறையில் உள்ளதா அல்லது கட்டுப்பாடுடையதா அல்லது பெயரளவில் திறந்த சந்தையாக இருந்தாலும் அரசியல் பொருளாதாரக் காரணிகளால் வரையறைகளைக் கொண்டதாக இருக்கின் றதா என்பதைக் கருத்தில் கொண்டே இப்பிரதேசப் பொருளாதாரக் கட்டமைப்பும் அதன் இயக்கமும் எவ்வாறு உள்ளது என்பதைக்கூற முடியும். 30 வருடங்களாக பிரதேச எல்லைகளுக்குட்பட்டு உள்ளீடு வெளியீடுகளின் நுகர்வு தடைப்படுத்தப் பட்டோ மட்டுப்படுத்தப்பட்டதாகவோ இருந்ததால் பொருளாதார செயற்பாடுகளில் முழுவீச்சையும் எந்த உற்பத்தித்துறையிலும் பார்க்க முடியவில்லை. இம் 30 வருடத்திலும் உலகளாவிய ரீதியில் பரவலடைந்த உலக மயமாக்கத்தின் விளைவை இலங்கையில் இப்பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசகால எதிர்கொள்ளக் கூடியதாக இருந்ததால் அவை தமது பிரதேச பொருளாதாரக் கட்டமைப்பை அதற்கேற்ற வகையில் சரிப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டன. ஆனால் போருக்குப் பின்னரே உலகமயமாக்கத்தை எதிர்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்ததால் எல்லாப் பொருளாதார செயற்பாட்டிலும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. இதனால் ஏ9 திறந்துவிடப்பட்ட பின்னர் ஏனைய பிரதேசப் பொருளாதாரங் களால் சுரண்டப்படும் நிலைக்கு தள்ளப்பட்டி ருந்தது. ஏனைய பிரதேசப் பொருளாதாரங் களுடன் போட்டியிடும் வல்லமையை இழந்திருந்தது. குறிப்பாக முயற்சியாண்மை போதுமானதாக இருக்கவில்லை. இருக்கும் முயற்சியாண்மையும் பலவீனமானதாகவே இருந்தது. கட்டற்ற திறந்த சந்தையில் போட்டியிடும் வல்லமையை இழந்திருந்த தால் தென் இலங்கை வர்த்தகர்களின் சுரண்டலுக்கு இலக்காக வேண்டியிருந்தது. மனித மூலதனம் கூட தற்கால பொருளாதார இயல்புக்கு ஏற்றதாக கட்டமைக்கப்பட்டதாக இருந்ததால் தொழிற்பயிற்சியும், திறனும் இல்லாமல் வேலையின்மைக்குள் தள்ளப் பட்டிருந்தது.

மரபு உற்பத்தித்துறைகளை சம காலத்திற்கேற்ற வகையில் மீட்டெடுக்க முடிவில்லை. எல்லாப் பொருளாதார செயற்பாடுகளிலும் பின்தங்கிய நிலையில் இருக்கவேண்டியதாக இருந்தது. மீட்டெ டுப்பதாயின் இப்பிரதேசத்திற்கென விசேட மான பேரினப்பொருளாதாரக் கொள்கையை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். உள்ளீட் டுச் சந்தை வெளியீடுச் சந்தைகள் நெறிப்படுத் தப்பட்டதாயும் விசேடமானதாகவும் கட்டுப் பாடுகள் நிறைந்ததாகவும் இருக்கவேண்டும். இது புதிய அரசியல் பொருளாதாரக் கொள் கையூடாகவே நிறைவேற்றக் கூடியதாக இருக்கும். அவ்வாறில்லாமல் கட்டற்ற திறந்த சந்தை அறிமுகப்படுத்தப்பட்டதால் இப்பிரதேச உற்பத்தியாளர்கள் விவேகப் பொறிமுறையூடாக சந்தைப்போட்டியூடாக மேல் எழுந்துவர முடியும். இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என நினைப்பது தென்னிலங்கையில் பல தேசிய நிறுவனங் களும், தேசிய முதலாளித்துவக் கம்பனிகளும். இப்பிரதேச வளங்களையும், உற்பத்தி மிகை களையும் சுரண்டிச் செல்வதற்கு வாய்ப்பளிக் கப்பட்டதாகவே இருந்தது.

போருக்குப் பின்னர் ஏ9 திறந்து விடப்பட்டதுடன் தென்னிலங்கையிலிருந்து இப்பிரதேசத்தின் சந்தைக்குள் புகுந்து கொண்ட தேசிய முதலாளிகள் தங்கள் குளிரூட்டியுடன் கூடிய பாரவூர்த்திகளை வட புலத்து கடற்கரையோர மீன் கொள்வனவிற் காக கொண்டு வந்துள்ளனர். இதனால் 1980களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தி லிருந்து கொழும்பு பெற்றா மீன்சந்தைக்கு மீன் கொண்டு சென்ற பாரவூர்திகள் தொழில் இன்றி முடங்கிக்கிடக்கின்ற. அதில் தொழில் புரிந்த ஓட்டுனர், துப்புரவாளர், நடுவர் பொதீ களாகவே, பனிக்கட்டு உற்பத்தி செய்வோர் தொழில் இழந்துள்ளனர். மீன்பிடித்துறை போல பல உற்பத்தித்துறைகள் இவ்வாறே பாதிக்கப்பட்டுள்ளன. விவசாய உள்ளீடுகள் விவசாய வெளியீடுகள் சந்தைப்படுத்திலும் இதே நிலை தான் உள்ளது. உள்ளீடுச் சந்தையில் செயிலீன் கொம்பனி ஆதிக்கம் செலுத்துகின்றது. இதனால் இதுவரைக்கும் உள்ளீட்டுச் சந்தையில் பிரசன்னமாய் இருந்த சிறு முயற்சியாளர்கள் தங்கள் தொழில் இழந் துள்ளனர். வெளியீட்டுச் சந்தைப்படுத்தலும் தென்னிலங்கை வாகனங்கள் விவசாய பண்ணை முகப்பில் கொள்வனவு செய்யக் காத்து நிற்கின்றன. புதிய குளிரூட்டப்பட்ட நல் வாகனங்களில் வந்து வெங்காயம், பீற்றூட், வாழைப்பழம் கொள்வனவு செய்கின் றனர். இதனால் உள்ளூர் போக்குவரத்து வாகனங்கள் தொழில் இழந்துள்ளனர். அத்துடன் ஊட்டிய பெறுமானம்சார் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பையும் இழந்து நிற்கின்றனர். இப்பிரதேசவிவசாயத்துறையினர்.

வடமாகாணத்தின் முக்கிய உற்பத்தித்துறைகளை விவசாயமும், மீன்பிடியும் ஊட்டிய பெறுமான வசதிகள் இழந்திருப்பதனால் வேலைவாய்ப்பையும் இழக்க வேண்டியதாய் உள்ளது. இப்பிரதேசத்தின் கைத்தொழில்துறை மிகப் பலவீனமான நிலையில் உள்ளது. முன்னர் இருந்த சிறு சிறு தனியார் கைத்தொழில்துறைகள் முழுவதும் அழிந்த நிலையில் உள்ளது. அலுமினியம், புடவைக் கைத்தொழில் கூரைத்தகடு உற்பத்தி, பழரச உற்பத்திக் கைத்தொழில், குளிர்பானக் கைத்தொழில் போன்றவை முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டதாகவேயுள்ளது. இத்துறைகளில் வேலை வாய்ப்பையும் இழந்துள்ளோம். உற்பத்தி மிகைகளையும் இழந்துள்ளோம். வருமானத்தையும் இழந்துள்ளோம். இச்சூழ்நிலையின் கீழ் எவ்வாறு பிரதேச சேமிப்பை உயர்த்த முடியும்? எவ்வாறு முதலீட்டை அதிகரிக்க முடியும்.

போர் முடிந்த பின்னரும் பிரதேசத்தவர்களுக்கான மீன்பிடி வாய்ப்புக்களை மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது. தென்னிலங்கை மீனவர்களின் வருகையும், அதற்கான அரசாங்க அனுமதிகளும் இப்பிரதேச மீனவர்களின் வருமான வாய்ப்பைக் குறைத்துள்ளது. மீன்பிடியோடு சேர்ந்த போக்குவரத்து வியாபார நடவடிக்கைகளிலும் வாய்ப்பிளந்து இருப்பதால் மீன்பிடிதுறையிலிருந்த எந்த விதமான சேமிப்பு அதிகரிப்பையும் எதிர்பார்க்க முடியவில்லை. எதிர்காலத்தில் இது இன்னும் மோசமாகலாம். விவசாயத்துறையிலும் அவ்வாறான நிலையே நல்ல வளமுள்ள தோட்ட நிலையங்களும் தென்னைபயிரிடு நிலங்களும், உயர் பாதுகாப்பு வலயம் என்ற வகையில் பாதுகாப்பு என்ற வகையில் அரசு வகைப்படுத்தி வைத்திப்பதால் விவசாயிகளின் வருமானம் எதிர்பார்த்தளவு அதிகரிக்க முடியவில்லை. இதனால் அத்துறையின் சேமிப்பும், வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் அத்துறையிலும் முதலீடு அதிகரிக்கும் வாய்ப்பு இல்லை.

இந்நிலையில் இப்பிரதேசத்தின் பொருளாதாரம் அறிவுசார் பொருளாதாரமாக மாற்றமடைய வேண்டியதே இன்றைய தேவையாக உள்ளது. புதிய உற்பத்தித் துறைகளை உருவாக்க வேண்டும். சேவைத் துறைசார் உற்பத்தித்துறைகளுக்குக் உருவாக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தித்துறைகளை உருவாக்கவேண்டும். விளம்பரத்துறை, அச்சிடல்துறை, அழகு சாதனப் பொருள் உற்பத்தி, வாகனத்திரவிய உற்பத்தி போன்றவற்றிலும் கணினித்துறை சார்ந்த மென்பொருள் உற்பத்தி இணையத்தள வலைப்பின்னல் செயற்திட்டங்கள் போன்ற அறிவுசார் உற்பத்திப் பொள்களை உற்பத்தி செய்து சந்தைக்கு விடுவதனூடாகவே சந்தையில் போட்டியிட முடியும். அதில் கவனம் செலுத்தமுடியவில்லையாயின் நாம் தனித்து நுகரும் வர்த்தகமாக மாறி அவுஸ்திரேலியாவின் பழங்குடிகள் போலவும் அமெரிக்காவின் செவ்விந்தியர் போலவும் இருந்து தேசிய பொருளாதாரத்தில் எந்த பங்கையும் பெற்றுக் கொள்ள முடியாத தங்கி வாழ்வோராக மாறிவிடுவோம். இதனை பற்றி அமைக்கமுடியாத பொருளாதாரக் கொள்கை இருக்குமானால் வடபகுதி மக்கள் அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்க பழங்குடிகளின் நிலைக்கு மாற்றுவதற்கான முன்னெடுப்புகள் நடைபெறுவதாகவே கருதமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Financial Resources and Investment for Economic Development in Northern Province

**Dr.S.Santhirasegaram**
*Senior Lecturer,*
*Department of Economics, University of Jaffna*

## 1. Introduction

Development in a region, provinces and districts prerequisite economic growth which is basically generated by physical capital, human capital and technology. Among them, physical capital is very important than other factors. If regions have a predominant physical capital it can enrich the human resources and get technology easily. Physical capital in a region can be made by public sector (fund allocation of government) private sector and foreign sector. The term of physical capital does not mean little amount of money which spend by government in the name of development. Instead, it means a huge amount of capital that can be made by various channels within a short period. In theory, Harrod Domer, Rostow and others explain the need of huge investment by big push and take off terms. Physical capital accumulation is made by investment. Investment is made by saving. Saving can be mobilized to investment from local residents, foreign living local residents, government's savings, foreign residents, foreign companies, NGOs, INGOs and foreign governments through channels of national government.

After independent of Sri Lanka, under the parliamentary system, government has been able to form without participation of MPs who have been elected by North and East people. As a result, North and East parts of Sri Lanka have been marginalized from main stem of economic developmental agenda. Development based on public funding has been slow down.

## 2. Background of Problems

There has not been any enormous investment in all sectors. Education, health, water supply, electricity, telecommunication has been neglected from main stem of government development agenda. We can prove this marginalization from government's statistics.

Education

Pupils - Teacher Ratio in Public School Education






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Students and Teacher Ratio in University Education




Percentage of students selected to university




## Heath Conditions

Infant mortality per 1000 live births (Average)




## Incomes

Income shares of Major ethnic groups in Sri Lanka, 1953-1981




## Other services



Region for Tamil majority comprise all districts of northern and eastern. All these diagrams show that fund for economic development does distribute equally. As a result, the all services most probably delivered by government have been lower in region of Tamil majority than region of Singhalese majority. In this scenario, beyond the public fund, Tamil people have to seek a new path for financial sources to invest in North and East regions.

## 3.Financial Sources for Investment and Limitations

Due to the marginalization via discrimination of public fund allocation, North and East Part of Sri Lanka have been neglected from capital accumulation hence economic growth and development. Development of this region prerequisites



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

huge capital accumulation via various investment channels. It is impossible to mobilize public fund to invest northern region in the pertaining political system. All power has been concentrated in hand of central government. Most of public supported politicians from Tamil community do not have cabinet power. This political weakness leads to failure of public fund mobilization for Northern development (Normal allocation comes under the government projects does not enough to economic development of post war region)

Due to the lack of public fund and absent or delay of political devolution, Northern region have to seek other financial sources for investment. This region does not have political power to get foreign aids from international community directly. Aids donors for Northern Province also controlled by general government of Sri Lanka.

Financial sources from Tamil Diaspora is only feasible way for huge investment hence capital accumulation and economic growth and development. Around 1.5 millions Tamils has been living in abroad. Among them, around one million Tamils have financial strength to build up Northern region. Diasporas in British, France, Swiss, Germany, Netherland, Norway, Canada has enthusiasm to invest in North and East region of Sri Lanka. They have capital and technological capacity which attained from developed these nations. If these one million people grant five dollar for each one (That is around equal to cost of one break fast) for development of their motherland, total value will be excess to Sri Lanka's total reserve ( US$5000 M). Following channels can be adopted to absorb the financial resources from Tamil Diasporas.

**4. Channels to absorb the financial resources from Tamil Diasporas.**

Following channels can be adopted to absorb the financial resources from Tamil Diaspora.

1. Direct private investment ( Diaspora)
2. Joint private investment
   - Diaspora between and within their living country
   - Diaspora and Northern investors.
   - Diaspora and Southern investors
   - Diaspora and government
3. Grants from Diaspora (Fund raising for Northern development through various external organizations).
4. Investment of Northern living Diaspora's relatives.
5. Technology and advisory services for investment from various channels.

**5. Problems for absorbing investment to North and East of Sri Lanka**

1. Anxiety for investment and investors.
2. Lack of good governance.
3. Legal insecurity.
4. Lack of physical infrastructures. (High way, Harbor, Airport, Electricity etc)
5. Lack of institutional infrastruc-ture (Administration, police service, Justice)
6. Lack of political and government supports.
7. Absent of regional development bank



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. Conclusion**

Following steps should be taken for mobilization of Diaspora's finance for investment in North and East regions.

1. Normality of life
   Extra judicial killing, kidnapping, control of media, threats to journalists, threats from various mobbing are still continuing in North and East. For investment and economic development, bringing normal life is very important liver.

2. Political solution for sustainable peace.
   Sri Lanka has been experienced political conflicts from independent. After 1983, it was transformed to armed conflict backing by India. There is no grantee to urge another armed violence with India's support in North and East until Tamil minority's political problem will be solved in acceptable manner. Authentic political solution is precondition for not only mobilization of Diaspora's investment but also to attract huge foreign direct investment to other parts of Sri Lanka.

3. Good governance.
   Government has to maintain rule and regulations without political bias. Independent police commission, independent justice commission and other steps are very important to attract diaspora's investment.

4. Huge public investment on infrastructures with engaging regional resources.
   North and East region of Sri Lanka have a first priority in public investment during last two years. However, the size of such investment has been not enough for pulling Diaspora's investment towards North and East. Most of public funded infrastructure projects have been handling by southern companies. Profits of projects and payment for inputs, labors, technicians etc have not been circulated within regional people who have been affected by thirty years of war. For instance, constructing high ways in North and East have been done by southern companies. They bring labors, vehicles, stones, technicians, from southern parts of Sri Lanka. More added values of these projects going back to south in name of wages, profits and other forms. Power based regulatory body is needed to make development to own people.

5. Renounce of anti-government political strategy and following pro-government policy by regional public supported politicians.
   Leaving from flaming the government, Tamil politicians should realize their past shortcomings and direct people with pragmatism. As central government of India gave arms and training to Tamil youths for fighting with Sri Lankan government to make a separate nation, another time, India or America will have inertest to follow same practice for their self interested. Parties, Singhala and Tamil politicians all together must work to buildup not only North and East but also Sri Lanka without discrimination followed in past. For this approach, Tamils should renounce anti-government politics and follow pro-government politics. All Sri Lankan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

should participate in election and elect the correct clean hand politicians.

6. Government's various incentives.
   Government has to introduce special incentives for investment in North and East regions. Special investment zones, free trade zones, setting industrial cities are some of them.

7. Establishment of Northern development bank for regional development.
   Huge amount of saving which are saved by North and East people has been transferred to Southern parts of Sri Lanka via private and government bank. These banks give loans at a small percentage to these regions. Large part of savings comes from foreign remittance. Establishment of regional development bank and related regulations make opportunities to mobilize these saving to regional development. It will make investment and economic development.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Human Resource Development in Northern Province, Special Reference to Jaffna District

**A.Saravanabawan & J.Robinson**
*Senior Lecturers.*
*Department of Human Resource Management,*
*University of Jaffna.*

**Objectives of this Presentation**

Prime objectives of the presentation were to highlight the needs for HRD towards Regional and National Development.

**Major Issues in the District / Province**

Regional development and National development of a country entirely depends on Capacity of Human Resources.

- Human Resources Development in this district is severely affected due to prolonged war.
- There is a gap between Demand requirements for development and availability of Human Resources in the Region.
- Less concentration in Childhood development

**Economical and Social Vulnerable people in this Region**

- Internally displaced people - 30%
- No. of widows - 4.5%
- People in Welfare centers - 1.72%\
- No.of orphans - 1.18%
- Beneficiaries under social service assistance - 4.07%
- Un-cleared area / Under high security zone - 18%
- Under sea band - 11.96%

Source: A study on Alternative Income Generating Livelihood Options In the Jaffna District, 2008/2009.

**Economic Activities**

Table: 1

| Jaffna | Population | Farm/Fishing families |
|---|---|---|
| Fishing | 63709 | 14558 |
| Agriculture | 604766 | 66171 |
| Animal husbanbdry | | 40% |

**Source:** Sector Reports, Agriculture, Fisheries and Animal husbandry

**Research Studies**

The research study conducted in year 2008/2009 found the problems in the particular area are related to the following issues. Thus the Human Resource Development is one of the key issues in Jaffna district

- Finance
- Human Resources
- Inadequate Resources



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Marketing problems
- Lack of Investment
- Machineries
- Lack of New Technology

**Table-2:** Projection for number. of employees in next two years

| Sector | Agric | % | Fish | % | Anim husb | % | Indus | % | SME | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Managerial | 1 | 0.6 | 1 | 0.3 | 1 | 1.5 | 5 | 0.8 | 71 | 2.2 |
| Operational | 2 | 1.2 | 0 | 0.0 | 4 | 6.1 | 50 | 7.7 | 253 | 8 |
| Support staff | 124 | 73.4 | 38 | 10.3 | 50 | 75.8 | 410 | 63.6 | 1345 | 42.5 |
| Minor Employees | 32 | 18.9 | 190 | 51.3 | 11 | 16.7 | 128 | 19.4 | 1425 | 45 |
| Others | 10 | 5.9 | 141 | 38.1 | 0 | 0.0 | 52 | 8.1 | 73 | 2.3 |
| | 169 | 100 | 370 | 100 | 66 | 100 | 645 | 100 | 3167 | 100 |

**Source:** A study on Alternative Income Generating Livelihood Options in the Jaffna District, 2008/2009.

The survey projects 4, 417 number of employees can get the job in next two years period among the sample. In the agricultural sector 73.37% jobs perdicted related to support staff category, in the fisheries sector 51.35% jobs predicted related minor employees, in the animal husbandry sector 75.76% jobs in supportive staff category, in the Industry sector 63.57% jobs in supportive staff category, and in the SME sector 42.5% jobs related to supportive staff category and 45% jobs related to minor employees. projection for managerial job category is very less because most of the organizations are operated by owners.

**Full Time Employees and Their categories in the Northern Province**

**Table-3: No of Full Time employees & Categories**

| Sector | Agric | % | Fish | % | Anim husb | % | Indus | % | SME | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Managerial | 19 | 9.36 | 12 | 2.75 | 10 | 12.2 | 53 | 4.94 | 355 | 10.3 |
| Operational | 22 | 10.48 | 3 | 0.69 | 8 | 9.76 | 151 | 14.09 | 625 | 18.1 |
| Support staff | 151 | 74.38 | 66 | 15.1 | 47 | 57.32 | 684 | 63.81 | 2079 | 60.2 |
| Minor Employees | 11 | 5.42 | 47 | 10.8 | 12 | 14.63 | 135 | 12.59 | 350 | 10.1 |
| Others | | 0 | 309 | 70.7 | 5 | 6.1 | 49 | 4.57 | 45 | 1.3 |
| Total | 203 | 100 | 437 | 100 | 82 | 100 | 1072 | 100 | 3454 | 100 |

Source : Employment Opportunities in Small and Medium Enterprises in the Northern Province



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From the above table support staff category is needed to all sectors in Northern Province. Therefore the Human resource development should be focused in this category. The following table shows the detail support staff in each sector.

**Table: 4 Support Staff in Each Sector**

| Agriculture | Fisheries | Animal Husbandry | Industries | SME sector |
|---|---|---|---|---|
| Machine Operators<br>Hired help during harvesting time | Boat engine operators, mechanics menders of nets ·Fishermen | Milk collectors<br>Poultry farmers | Store keepers<br>Technician<br>Shop assistant | Shop assistants<br>Computer operators<br>Account Clerk |

Source: Employment Opportunities in Small and Medium Enterprises in the Northern Province

- For Fisheries sector supportive staff category and minor staff category should have the experience and technical skills.
- For Animal husbandry sector, supportive staff should have A/L qualification and sector a experience.
- For Industry sector supportive staff should have O/L qualification A/L Qualification and relevant experience and Computer related skill.
- For SME sector supportive staff should have O/L qualification A/L qualification, and Computer related skill.

**How to Develop Human Resource in the region**

- It and communication Skill Development or training
- Skills development in Fishing
- Skills development in Agriculture
- Skills development in Industry

IT and Communication Skill Development

The following are the recommendation to IT and communication skill development

- School level awareness program and reforms of syllabus
- Recognized Certificate in IT field
- Professional Career path in IT and awareness
- Target on School leavers towards international standard
- Scholarships to improve IT skills
- Collaboration with other universities and foreign universities

**Skills Development in Fishing**

The following are the recommendation to skills development in fishing

- New Technology
  - Boat repair
  - Sea food processing
  - Fishing net factory & Boat yard
  - Ice plants
  - Training for prawns farming

Skills Development in Agriculture

- Tourism & Hotel industries
- Entrepreneurial skill development program





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Training for Sunflower oil, Gingelly oil & Coconut oil production

Interviews were conductged to get more information from Government officials to get district level need for human resource development. The following section shows the full details, which is obtained from officials.

Jaffna

- There are potential for prawn farming, fish processing factories. Palmaray productions and food processing, Agriculture based food processing, wine industry etc.

**Mannar**

- There is great demand for rice mill and related employment in Mannar.
- Approximately 30% - 40% vacancies exist in Mannar District.
- In Mannar Distirict. 60% of the fertilized land a boundant.
- Provided training in the field of Radio /TV reparing, mobile phone repairing, tailoring, out motor repairing and beauticulture.
- In addition to the Bridge Asia Japan (BAJ) provided training in the field of Tractor and out motor repairing.
- Opportunity exists on garments, value adding activities such as food processing (wood apple, rice floor, and paddy). There is potential workforce available for the garments.

**Vavuniya**

- Opportunity is available for Heavy vehicle drivers
- There is big opportunity for them on local employment and foregin employment.

Mullaitivu

- The following opportunities exist in Mullaitivu district, Ice factory, Rice mill, weaving mill, bottle water factory, Palmyra industry, cocount based industry, dairy farm, poultry farm, concreat block making industry, fisheries, sea food processing, Garments, Timber production, tank renovation works.

Killinochchi

- The following potentials are avilable in this district Agriculture research centers,cashew Farming, salt Industry, Poultry farming, flour mills, rice mills, and processing industry. Wine industry, Beer industry, Agriculture production and food processing, Ayurvedic herbal Gardening, Tank fishing, Prawn farming etc.

**Conclusion**

- Human Resource Development is very vital in Northern part of Sri Lanka; because of the three decade civil war. Almost all the sectors were severely affected. But generating employment opportunities in Jaffna district are affected by lack of human resource development. Therefore policy makers and all other institutions should take necessary steps to enhance Human resources. There is potential demand from all sectors in the region and next era is all about post war development Therefore careful attention should be focused on Human Resource development. Without contribution of human resources we cannot reach development in this region.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## References

1. Research study of Employment Opportunities in Small and Medium Enterprises in the Northern Provincet, Year - 2010.

2. A study on Alternative Income Generating Livelihood Options in the Jaffna District, 2008/2009.

3. District secretariat (2005), Statistic information, Jaffna district.

4. District secretariat (2006), Statistic information, Jaffna district.

5. District secretariat (2007), Statistic information, Jaffna district.

6. District secretariat (2008), Statistic information, Jaffna district.

7. Interview with high level officials in Districts
   - Thirugnanasampanthar - Additional Govt.Agent, Kachcheri, Vavuniya.
   - Nagamani Ratnarajah. Deput Project Direct, Mullitive Districe ( Ministry of Economic Development Early recovery program)
   - Mr.S.Yogananthan - Deputy Director of Planning, Kachcheri, Mannar and
   - Mrs. Selvarani Nicholaspillai - Asst. Director of Planning, Kachcheri, Mannar.
   - Mrs.Sarojinidevi Pathmaranjan - Deputy Director of Planning, Kachcheri, Vavuniya. and Mr.N.Thriugnanasampanthar - Additional Govt. Agent, Kachcheri, Vavuniya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையின் செல்நெறியும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளும்

## யாழ்ப்பாண மாவட்டத்தினைச் சிறப்பாக கொண்ட ஆய்வு

எஸ்.எஸ். உதயகுமார்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

ஏதாவது ஒரு உற்பத்தி நடவடிக்கையானது, சந்தையை நோக்கமாகக் கொண்டு முன்வைக்கப்படும் பொருளியல்சார் செயற்பாடு கைத்தொழிலாக்கம் அல்லது கைத்தொழில் செயற்பாடு எனப்படும். அதாவது சூழலில் அமைந்து காணப்படும் பொருளாதாரங்களின் ஆரம்ப இயல்புகளை மாற்றி அமைப்பதன் மூலம் மனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்பாட்டினையே கைத்தொழில் என்றபதம் சுட்டி நிற்கின்றது.

எந்த ஒரு நாட்டிலும் கைத்தொழில் உற்பத்தித்துறை பிரதேச அபிவிருத்திக்கு வழிவகுக்கின்றது. இந்த வகையில் இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம் (வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் உள்ளிட்ட பகுதிகளில்) கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் அவிவிருத்திக்கு இப்பிரதேசத்தின் கைத்தொழில் உற்பத்தித் துறையானது பொருத்தமான துறையாகக் காணப்படுகின்றது. அத்துடன் இங்குள்ள கைத்தொழில்துறைக்கு பொருத்த மான அல்லது தேவையான அல்லது பயன்படக்கூடிய வளங்களைப் பொறுத்தவரை நாட்டின் ஏனைய பல மாவட்டங்கள் மற்றம் பிரதேசங்களுடன் ஒப்பிடுமிடத்து மிக்குறைவாகவே காணப்படுகின்றது. இருப்பினும் சீராகப் பிரயோகிக்கக் கூடிய வளங்கள் இப்பிரதேசங்களில் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும். இந்த அடிப்படையில் இப்பகுதியிலுள்ள வளங்களை (புதுப்பிக்கப்படக்கூடிய வளங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட முடியாத வளங்களை) நாம்

1. கனிப்பொருள் வளம்
2. விவசாய வளம் மற்றும்
3. கடல் உயிர்சார்வளம் எனப்பிரித்து நோக்க முடியும்.

இந்த அடிப்படையில் இப்பகுதிகளில் முன்னர் இயங்கி, தற்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்ற மற்றும் எதிர்காலத்தில் மீள உருவாக்கக்கூடிய மற்றும் புதிதாக உருவாக்கக்கூடிய கைத்தொழில்கள் என்ற அடிப்படையில் இப்பிரதேசத்தின் கைத்தொழில் உற்பத்தித்துறை இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு எந்தளவுக்குப் பொருத்தமான ஒரு துறையாக இருக்கமுடியும் என்பதையும் இத்தகைய பின்னணியில் எத்தகைய கைத்தொழில் துறைகள் பொருத்தமாக உள்ளது என்பதையும் அத்தகைய கைத்தொழில்களுக்கான வாய்ப்புகள் பற்றியும் படிமுறையாக நோக்குவோம்.

### பொருளாதாரம் ஒன்றில் கைத்தொழில் துறை அபிவிருத்தியின் அவசியம்

ஒரு பொருளாதாரத்தில் உள்ள முக்கிய துறைகளாக விவசாயத்துறை மற்றும் கைத்தொழில்துறை என்பவற்றில் விவசாயத் துறையினைவிட கைத்தொழில்துறையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் விடயங்களில் முக்கியமானதாக உள்ளது. அந்த வகையில்:

- விவசாயத்துறை உற்பத்திகள் இயற்கை அனர்த்தங்களினால் முற்றாகவோ, அல்லது பகுதியாவோ பாதிப்புறலாம். அதேநேரம் கைத்தொழில்துறை வெளியீடுகள் அவ்வளவாகப் பாதிப்படைவதில்லை.
- கைத்தொழில்துறை உற்பத்திகளைக் குறுகிய காலத்தில் அதிகரிக்க முடியும். ஆனால் விவசாயத்துறையினைப் பொறுத்தவரை பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு குறிப்பிட்ட ஒரு காலப் பகுதி தேவையாகும்.
- விவசாயத்துறையில் உற்பத்தி செய்யப் படும் பொருட்களுக்கான கேள்வியானது சனத்தொகை அதிகரிப்பின்போது தான் அதிகரிக்கும். பொதுவாக கைத்தொழில் பொருட்களுக்கான கேள்வி நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கின்றபோதும் சார்பளவில் அதிகரிக்கும்.
- சந்தைப்படுத்தல் செலவினை நோக்குகின்ற போது, கைத்தொழில் வெளியீடுகளுக்கு விவசாயத்துறை வெளியீடுகளை விடக் குறைவாகும்.
- விவசாயத்துறையானது கல்வியறிவு குறைந்த ஆண்களையே கவரக்கூடிய தன்மையுடையதாக இருப்பினும் வேலை வாய்ப்பை வழங்குவதில் ஊழியப்படையில் கைத்தொழில்துறை; கல்வியறிவு குறைந்தவர்கள், கல்வியறிவு கூடியவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் என அதிகளவானோருக்கு வேலைவாய்ப்பை வழங்கக் கூடிய துறையாக உள்ளது.
- உற்பத்திப் பொருட்களின் நெகிழ்ச்சி நிலையினை நோக்குகின்றபோது, கைத்தொழில் பொருட்களின் நிரம்பல் நெகிழ்ச்சி உடையதாகவும் அதனைக் காலநிலை கட்டுப் படுத்தக்கூடியதாகவும், விலை உயர்வுக்கு ஏற்ப நிரம்பலை மாற்றியமைத்து இலாபத்தினை உழைக்க வாய்ப்புள்ள தன்மையுடையதாகவும் காணப்படுகின்றது. ஆனால் இந்த நிலைமையானது, விவசாயத் துறைக்குப் பொருந்துவதில்லை எனலாம்.
- விவசாயத்துறையில் தொழில் விரிவாக்கத்திற்கான சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாகும். ஆனால் கைத்தொழில் துறையில் பல உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியை உருவாக்கமுடியும். உதாரணமாக வீட்டு நிர்மாணம், மரம், சீமெந்து, உலோகம் போன்றவற்றின் உற்பத்தியைத் தூண்டிவிடும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- கைத்தொழில் துறையில் உற்பத்தி வேறாக்கம் என்பது அதிகளவில் உண்டு. இதனால் உபயோகத்திற்கான பொருட்களையே பல்வேறு வடிவங்களில் பல்வேறு விலைகளில் விற்க முடிவதால் கேள்வி அதிகமாக இருக்கும். ஆனால் விவசாயத்துறையில் இது சாத்தியப் படாது. உதாரணம்: யப்பான் - கைக்கடிகாரம்.

**இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி அனுபவம்**

இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி பற்றி நோக்கும் போது நாம் இலங்கை சுதந்திரமடைய முன்னரான காலப்பகுதி (1948 இன் முன்னர்), சுதந்திரத்தின் பின்னர் ஏறக்குறைய கைத்தொழில் மயமாக்கல் இடம் பெறாத காலப்பகுதி (1948 0 1960), இறக்கு மதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கல் இடம்பெற்ற காலப்பகுதி என சில கால கட்டங்களாக நோக்கக்கூடியதாக உள்ள போதிலும் இலங்கையின் பொருளாதார வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாகத் திகபம் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட 1977 இலிருந்து கைத்தொழில் கொள்கையானது வெளிநோக்கிய பார்வை கொண்டதாக மாற்றங் கண்டது. இவ்வகையில்

- வங்கி, காப்புறுதி, வீதிப்போக்குவரத்து, கப்பற் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து என்பன போன்ற பல சேவைகள் பல்கிப் பெருகின.
- வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தது.
- நாட்டின் ஏற்றுமதி வருமானம் கைத் தொழில் துறை சார்ந்திருக்கும் நிலை உருவானது.
- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு குறைந்து வந்ததுடன் கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளின் பங்கு அதிகரித்து ஒரு சாதகமான பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் ஏற்படத்தொடங்கியது.
- வேலைவாய்ப்பு அதிகரித்து வேலையின்மை குறைவடைந்துள்ளது.
- பொருளாதார வளர்ச்சி ஓரளவிற்கு உறுதியாகச் செல்லத் தொடங்கியது.

**வடமாகாணத்தில் கைத்தொழில் துறை அபிவிருத்தியும் அதன் பொருத்தப்பாடும்**

பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கும் போது பொதுவாக விவசாயத்துறையின் மிகையிலிருந்து கைத்தொழில்துறை உருவாகவேண்டும். ஆனால் இலங்கைப் பொருளாதாரத்தின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றான வடபுலத்தே அமைந்துள்ள கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய 5 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வடமாகாணத்தில் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான வளங்கள் காணப்பட்டிருந்த போதிலும் கூட கடந்த கால யுத்த நிலைமைகளாலும் அதனுடன் தொடர்புடைய பல சாதகமற்ற சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களாலும் கைத்தொழில் துறையானது வளர முடியாது போனது அல்லது வளர்த்தெடுக்கப் படவில்லை எனலாம். இவ்வகையில் வடமாகாணத்தில் உள்ள ஒரு மாவட்டமான யாழ்மாவட்டத்திலுள்ள நிலைமையினை எடுத்து நோக்கினால் இப்பிரதேசத்தில் காணப்படும் மூலப்பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் கைத்தொழில்துறையை உருவாக்குவதற்கு ஏதுவாக உள்ளது.

**யாழ் மாவட்டத்தில் காணப்படும் கைத்தொழிலுக்குப் பொருத்தமான வளங்கள்**

இலங்கையின் வடபுலத்தே, வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் கனியவளங்களில் ஒன்றான கண்ணாடி மணல்( படிகமணல்) நாகர் கோவில் பகுதியில் காணப்படுகின்றது. இது வீடுகட்டுதல், சீமெந்துக்கல் போன்ற பொருட்கள் உற்பத்திக்காக மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் சிலிக்காமணல் வல்லிபுரக் கோவில் பகுதியில் காணப்படுகின்றது. இதனைக் கண்ணாடி உற்பத்திக்கு மட்டுமன்றி சூரிய மின்கலங்கள் ஏனைய கணனி தொடர்பான சில உதிரிப் பாகங்களையும் செய்வதற்குப் பயன்படுத்தலாம்.

வடக்கில் கனியவளங்களில் முன்னிலை வகிப்பது உப்பு ஆகும். இதன் காரணமாக ஆனையிறவு, கல்லுண்டாய், செம்மணி போன்ற இடங்களில் உப்பளங்கள் உள்ளன. கிழக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பு உணவில் சுவையூட்டலுக்குப் பயன்படுத்தப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்க ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிமண்ணும் இப்பகுதிகளில் காணப்படும் கனியவளங்களில் ஒன்றாகும். இக்களிமண்ணை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் உண்டு. சட்டி மற்றும் பானை என்பனவற்றின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது. முருகைக்கல் என்ற கனிய வளமானது, நெடுந்தீவு மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளிலும் காணப்படுகின்றது.

சிப்பி பெரியவிளான் பகுதியில் காணப்படுகின்றது. சிப்பியிலிருந்து நீறிய சுண்ணாம்பு, நீறாத சுண்ணாம்பு என்பன உற்பத்தி செய்யப்படுகின்றது. இதன் மூலம் குடிசைக்கைத்தொழில் விருத்தி செய்யப்படலாம்.

சுண்ணக்கல் - இதில் $CaCo3$ (Calciam Carbonate) அடங்கும். பாறைகளையே சுண்ணாம்புகற்கள் என்பர். இது யாழ்குடாக் கரையோரங்களில் காணப்படுகின்றது. குறிப்பாக காங்கேசன்துறை, மயிலிட்டி போன்ற இடங்களில் உள்ளது. சீமெந்துக் கைத்தொழில் உற்பத்திக்கு இது பயன்படுத்தப்படுகின்றது. இதனால் தான் காங்கேசன் துறையில் சீமெந்துக் கைத்தொழில்சாலை அமைவிடம் பெற்றிருந்தது. இருப் பினும் யுத்த நிலைமைகளால் தற்போது அது இயங்குவதில்லை. எதிர்காலத்தில் அது மீள இயங்குவதற்கான வாய்ப்புகள் கனிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத் தொழில்கள் அல்லது தொழிற்சாலைகள்**

*சீமெந்துக் கைத்தொழில்*

சீமெந்துக் கைத்தொழில் 1953இல் தொடங்கப்பட்ட இலங்கையில் பாரிய கைத்தொழிலாகும். இத்தொழிற்சாலை காங்கேசன்துறையில் காணப்பட்டது. இக்கைத்தொழிற்சாலைக்குத் தேவையான 70 சதவீதத்திற்கு மேற்பட்ட மூலப்பொருளான சுண்ணக்கல் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற காரணத்தால் இக்கைத் தொழிற்சாலையானது குறிப்பாக யாழ்ப் பாணத்தில் காங்கேசன்துறையில் நிறுவப் பட்டது.

**இரசாயனக்கைத்தொழில்**

இலங்கையின் ஒரேயொரு இரசாயனத்தொழிற்சாலை பரந்தன் என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் இரசாயனத் தொழிலுக்கு வேண்டிய அடிப்படை மூலப்பொருளான உப்பு பரந்தனுக்கு அண்மையிலுள்ள ஆனையிறவில் காணப்படுகின்றமை. இதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. இதுவும் யுத்த நிலைமைகளால் தற்போது இயங்குவதில்லை.

**சீனிக்கைத்தொழில்**

கருப்பஞ் சீனி மற்றும் பனங்கட்டி (பனை வெல்லம்) உற்பத்திக்கான செயற் பாடுகள் உள்ளன.

**கண்ணாடிக்கைத்தொழில்**

இத்தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருளான சிலிக்காப் படிவுகள் 98 சதவீதமானவை. யாழ்ப்பாணத்தில் உள்ள குடத்தனை, வல்லிபுரம், நாகர் கோவில் பகுதிகளில் ஏறத்தாழ 20 சதுரகிலோ மீற்றர் பகுதியில் காணப்பட்டது. இருப்பினும் இன்றுவரை பயன்பாட்டிற்கு உட்படுத்தப் பட்டதில்லை. இத்தகைய வளத்தினைக் கொண்டு செய்யக்கூடிய சில கணனி தொடர் பான கண்ணாடி இழைகள் இந்தியாவில் தமிழ் நாட்டில் சிறப்பாக மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காகிதக்கைத்தொழில்**

காகிதம் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருட்கள் இலகுவாகப் பெறக்கூடிய தாக இருந்தும் காகிதத் தொழிற்சாலை உருவாக்கப்படவில்லை. கடந்த 1990களின் தசாப்பத்தின் முன்னரைப் பகுதியில் யாழ்ப் பாணம், நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அண்மையில் திருவாளர் சுப்பிரமணியம் அவர்களின் முயற்சியால் பரீட்சார்த்த காகித உற்பத்தி மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கது. ஆனால் அது கூட 1995 இடப்பெயர் வுடன் செயலிழந்துவிட்டது. அதனை மீளவும் முயற்சி செய்ய வாய்ப்புள்ளது.

**துணி உற்பத்தி**

பண்டத்தரிப்பில் துணி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. 1970களில் இறக்கு மதிக் கட்டுப்பாடு நிலவிய காலத்தில் இலங்கையின் பல பகுதிகளிலும் பிரபல்யம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1977 இன் திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளை வாக யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே மேற் கொள்ளப்பட்டு வந்த நெசவு நிலையங்கள் செயலிழந்து போனமை குறிப்பிடத்தக்கது.

**பிறகைத்தொழில்கள்**

உப்பு, தீப்பெட்டி, சவர்க்காரம், பசளை உற்பத்தி செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதேபோல கீழ்வரும் இடங்களில் அவற்றோடு தொடர்புடைய வளங்கள் அதிகமாகக் காணப்படுவதனால் அவற்றிற்குரிய கைத்தொழிற்சாலைகளும் காணப்படுகின்றது.

திக்கத்தில் - வடிசாலை (சாராய உற்பத்தி)
சங்கானை வடிசாலை (சாராய உற்பத்தி)
வரணி வடிசாலை (சாராய உற்பத்தி)
வதிரியில் தோல் உற்பத்தி

இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் இயங்கிய தொழிற்சாலைகள் அண்மைக்காலங்களில் ஆரம்பிக்கப்பட்டவை அல்ல. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே இவை முயற்சியாண்மையாளரால் ஆரம்பிக்கப் பட்டது. வடக்கில் அரசினால் ஆரம்பிக்கப் பட்ட தொழிற்சாலைகளை விட முயற்சி யாண்மையாளரால் ஆரம்பிக்கப்பட்டவை அதிகமாகும். பின்வரும் கைத்தொழிற் சாலைகள் இதற்கு சான்றுபகருகின்றது.

- 1914 பங்குனியில் 'மச்சாடோ' சோடா குளிர்பான தொழிற்சாலை (நிறுவுனர் - யோசவ் மச்சாடோ)
- 1914 பங்குனியில் சீனித்தொழிற்சாலை நிறுவப்பட்டது. (A.Weighal)
- 1916 பங்குனியில் சினித்தொழிற்சாலைக் கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. (இரண்டும் ஒன்றா என்பது தெளிவாக இல்லை)
- 1916 பங்குனியில் சீனித்தொழிற்சாலைக் கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டது (இரண்டும் ஒன்றா என்பது தெளிவாக இல்லை.)
- பேபி மார்க் என்ற பெயரில் சோடா குளிர்பான தொழிற்சாலை வல் வெட்டித்துறையில் ஆரம்பிக்கப்பட்டது. திறமையாகவும் நிர்வகிக்கப்பட்டது (நிறுவுனர் சுப்பிரமணியம்)
- டொலர் அலுமினியத்தொழிற்சாலை மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அலுமினியத் தொழிற்சாலை யாகும். (நிறுவுனர் சம்பந்தர்) ஆரம்பத் தில் சீனத்தொழில் நுட்பவியலாளர்கள் வந்து இத்தொழிற்சாலையில் பணிபுரிய விருந்த தொழிலாளர்களக்கு பயிற்சி வழங்கியிருந்தனர்.
- 'எல்பிகெம்' வாளி உற்பத்தித் தொழிற் சாலை ஆரம்பிக்கப்பட்டது. (நிறுவுனர் சின்னத்தம்பி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மஸ்கன்ஸ் என்ற பெயருடன் அஸ் பெக்டஸ் கூரைத்தகடுகள்
- மில்க்வைற் சோப், லாலா சோப், பிறைற் சோப் உற்பத்திகள்
- அன்டசன் என்னும் பெயருடன் இறால் பதனிட்டு ஏற்றுமதி செய்தல்.
- கண்ணாடித்தொழிற்சாலைகள் நீர்வேலியிலும் கீரிமலையிலும் நிறுவப்பட்டு கண்ணாடிக்குவளைகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டது.
- ஆணி உற்பத்தி, ரயர் உற்பத்தி, மை உற்பத்தி
- கடல்பாசியை தகரத்தில் அடைத்து (உணவிற்காக) ஏற்றுமதி செய்தல்.
- அண்ணா கைத்தொழில் நிறுவனம் எனப் பல கைத்தொழில்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
- வடக்குக் கிழக்கு பகுதியில் மீன்வளம் அதிகமாக இருப்பதால் மீன்பிடித்தலுடன் தொடர்புடைய மீன்பதனிடல் கைத் தொழில், ஐஸ்கட்டி கைத்தொழில், படகு கட்டும் கைத்தொழில், வலை தைத்தல் கைத்தொழில் என்ற பல தொழில்கள் காணப்படுகின்றன.

**முடிவுரை**

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிகளின் அனுபவத்திலிருந்து நாம் பல பாடங்களை எமது நாட்டிற்கும் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பிரதேசத்திற்கும் மேலும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் பெற்றுக் கொள்ளலாம். 19 ஆம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளான ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி யானது கைத்தொழில் துறையின் வளர்ச்சியி னால் ஏற்பட்டதாகும்.

NIC நாடுகள், சீனா, இந்தியா என்பவற்றினது வளர்ச்சிக்கும் கைத்தொழில் விரிவாக்கமே ஏதுவாகின்றது. இலங்கையில் சுதந்திர காலப்பகுதியிலிருந்து நோக்குகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்கு அதிகரித்து வருகின்றது.

எனவே நாடுகளாக அன்றி பிரதேசங் களில் அவை பேண்தகு பொருளாதார வளர்ச்சி அடைய பொருளாதாரக் கட்ட மைப்பு மாற்றமானது உலக வளர்ச்சிப் போக்கில் அதாவது ஒட்டு மொத்த இலங்கைப் பொருளாதாரத்தைப் பொறுத்தும் அதில் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்தும் மேலும் யாழ் மாவட்டத்தைப் பொறுத்தும் கைத்தொழில் அபிவிருத்தியின் தேவை உணரப்பட்டுள்ளது.

கைத்தொழில்துறை வளர்ச்சி யடைந்து செல்லும் போது அத்துறையுடன் இணைக்கப்படவேண்டிய வேறு உற்பத்தி களும் அதாவது முன்கொழு, பின்கொழு உற்பத்திகளின் வளர்ச்சியும் ஏற்படுவது மட்டுமல்லாது பொருளாதாரக் கட்டமைப் பின் இன்னொரு முக்கிய துறையான சேவைத்துறையின் கேள்வியும் அதிகரித்துக் கொண்டே செல்லும் எனலாம். எனவே தற்போதைய அரசியல் பொருளாதார மற்றும் சமூக சூழலை நன்கு கவனத்தில் கொண்டு அரசு நேர்மையான முறையில் தேசிய வளர்ச்சி நோக்கில் பேரின பொருளாதார கொள்கை களை வகுத்து நடைமுறைப்படுத்துமானால் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் ஒன்றான யாழ்ப்பாண மாவட்டத்தின் வளர்ச்சியானது கைத்தொழில்துறை மூலம் துரிதமாக்கப்ப டுவது மட்டுமல்லாது அதிகரித் துச் செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணைகள்


1. வடக்கு மாகாண சபையால் வெளியிடப்படுகின்ற புள்ளி விபரத்திரட்டுக்கள்
2. யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் வெளியிடப்படுகின்ற வருடாந்த புள்ளி விபரத்திரட்டுக்கள்
3. கைத்தொழில்துறை தொடர்பான பல்வேறு வருட வெளியீடுகள்
4. இலங்கை மத்திய வங்கியின் சுதந்திர பொன்விழா மலர் (1998)
5. மக்கள் வங்கியின் மாதாந்த வெளியீடான பொருளியல் நோக்குகள்
6. பேராசிரியர் எல். டி. லக்ஸ்மன் என்பவரால் தொகுக்கப்பட்ட Delimmas of Development (1998)
7. இலங்கை மத்திய வங்கி பல்வேறு வருட ஆண்டறிக்கைகள்
8. யாழ்மாவட்ட கைத்தொழில்துறைசார் நிபுணர்களுடான நேர்காணல்கள்
9. யாழ்மாவட்ட கைத்தொழில் முயற்சியாளர்களக்கான நேர்காணல்கள்
10. யாழ் மாவட்ட கைத்தொழில்துறை தொழிலாளர்களுடான நேர்காணல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்தில் போரின் பின்னரான பெண்களின் பொருளாதார சமூக மீளுருவாக்கப் பயணம்

சரோஜா சிவசந்திரன்,
இயக்குனர், மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.

இன்று எமது நாடு வரலாற்றிலேயே மிக இக்கட்டான நிலையிலே உள்ளது. வன்முறை மோதலிலிருந்து விடுபட்ட போதிலும் வன்முறை கலாசாரத்தை முற்றாக அழிக்கமுடியாத நிலை உள்ளது. உருவாக்கப் படும் திட்டங்கள் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களாக அமையவில்லை. பொருளிய லாளர் அமத்தியா சென் அவர்களது கருத்துப் படி "அபிவிருத்திப் பணிகளில் சனநாயக விழுமியங்கள் இணைக்கப்படும் போது அவை மேலும் செழுமை பெற்று சமூகத்தின் அடிப் படைக் கலாசாரமாக மாற்றம் பெறுகின்றன" என்று கூறினார். வளங்களின் அதி உச்சப் பயன்பாடு அபிவிருத்தியின் அடிப்படைத் தேவையாகும். ஆனுல், நாட்டின் முழுமை யான வளங்களையும் அரசு தன் பூரண கட்டுப் பாட்டில் கொண்டுவரும் போக்கே இன்று காணப்படுகின்றது. அரச சார்பற்ற நிறுவனங் கள் கூட அரசின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டிய நிலை உள்ளது. போரின் வெற்றி தேர்தல் வெற்றிக்கு காரணமாக அமைந்ததா? அல்லது நாட்டை உலுக்கும் பொருளாதார பிரச்சினைகட்கு தீர்வு கண்டுள்ளதா? - என்பது இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது.

போரின் கோரப்பிடியிலிருந்து தம் சொந்த நிலங்களைவிட்டு அகதிகளாக ஓட நிரப்பந்திக்கப்பட்ட மக்கள் திரும்பி வரவும் முடியவில்லை. வந்தாலும் தமது சொந்த நிலங்களில் கால் பதிக்கவும் முடியவில்லை. தம் சொந்தக் காணிகளை தம்முடையவை என உறுதிப்படுத்த எண்ணிலடங்கா கேள்விகள் தொடுக்கப்படுகின்றன. தகுதியான ஆவணங் கள் இன்றி அலையும் மக்கள் மத்தியில் குறிப்பாக கணவன்மாரை இழந்த பெண்கள் தமது சொந்தக் காணிகளைத் தேடி மீள் குடியேறுவது சிரமமான காரியமாக உள்ளது. இலங்கையின் வளப்பயன்பாடு, காணி விடயங்கள், வரி விதிப்புப் போன்றன மாகாண சபைகளின் அதிகாரத்தில் நிர்வகிக் கப்பட்ட போதிலும் வடக்கு மாகாணத்தில் மாகாண சபை இதுவரை முறையாக இயங்காத நிலையில் மத்திய அரசாங்கத்தின் மேலதிக தலையீட்டை தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உடைமைகட்கு ஏற்பட்ட பேரழிவுகளோடு மக்கள் சந்திக்கும் வறுமைச் சுமைகளோடே புனரமைப்பு மீள் கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. இச் செயற்பாடு நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத் திக்கு வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளதா என்பதும் ஆராயப்படவேண்டிய விடயமாக உள்ளது.

அபிவிருத்திப் பாதையில் பெண்கள் பங்களிப்பை நோக்கும்போது பொருளாதார சமூக துறைகளில் பெண்கள் முன்னரை விட பாரிய முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதை யாரும் மறுக்க இயலாது. எமது நாட்டில் 90வீதமான பெண்கள் எழுத்தறிவு உடையவராவர். இன்று அரச அதிகாரத் துறை, தனியார்துறை, மருத்துவம், சட்டம், ஆசிரியத் தொழில், கலைத்துறை போன்ற பல துறைகள் உள்ளடங்கலாக பொது நிர்வாகங் களில் பெண்கள் அதிகளவில் ஈடுபடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பால்நிலை பாரபட்சம் தொடர்பான சீரதிருத்தச் சட்டங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதோடு பெண்களின் உரிமைகள் தொடர்பாகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரித்துள்ளது. ஆயினும், அபிவிருத்தி என்ற பொதுவான பதத்தினுள் பெண்ணின் அபிவிருத்தி என்ற செயற்பாடு இடம் பெறுவதில்லை. அதற்கு அப்பாலும் ஆற்றப்பட வேண்டிய பல தேவைகள் பெண்களுக்கு சிறப்பாக உள்ளன. பெண்கள் அதிகார அரசியலில் புறக்கணிக்கப்படல், சமூக அடக்குமுறைக்கு உள்ளாதல், பெண்களுக்கெதிரான வன்முறை, பெண்கள் தொடர்பான பாரம்பரிய மனப்பாங்கு இவை எமது சமூகத்தில் மாறுவதாக இல்லை. பெண்களுக்குத் தொழில் வாய்ப்பு பிரவேசம் அதிகரித்திருந்தும் தொழில் ரீதியான பால் பிரிவு மாறவில்லை. நாம் பெருமைப்படும் சமூக, பொருளாதார அபிவிருத்தியை எல்லாப் பெண்களும் அனுபவிப்பதில்லை. பாரபட்சம் காட்டப்படும் நிலையில் பெண்கள் கல்வி, சுகாதாரம், பொருளாதாரச் சுரண்டல் தொடர்பான விடயங்களை அணுகுவதற்கு பலத்த சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இன மோதலின் காரணமாக பெண்கள் ஆண் துணையை இழந்ததோடு 80% மானவர்கள் இடம் பெயரவும் நேரிட்டது. யாழ். மாவட்டத்தில் மட்டும் ஆண் துணையை இழந்த ஏறத்தாழ 29,000 பெண்கள் இளம் வயதினர் உட்படத் தாமே தனித்து குடும்பச் சுமையைத் தாங்க வேண்டியவர்களாகவும், சமூகத்தின் பாதுகாப்பை வேண்டி நிற்பவர்களாகவும் உள்ளனர். இவர்களைத் தவிர கணவர் காணாமற்போனவரகள் கூட அரை விதவைகளாக வாழ்கின்றனர். இவர்கள் யாவரையும் சமூகமே பாதுகாக்கவேண்டும்.

மேற்கூறப்பட்டவை தவிர, வேலை எதிர்பார்த்திருப்போரில் ஆண்களைவிட பெண்களே அதிகம். பெண்ணின் அபிவிருத்தி என்பது ஒரு சமனற்ற நிலையினையே காட்டுகின்றது. ஐ.நா. பாதுகாப்பு சபை பிரகடன இலக்கம் 1325 இன் அடிப்படையில், ஓர் நிலையிலிருந்து இன்னோர் நிலைக்கு கடந்து செல்லும் காலகட்டத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், மீள் கட்டமைப்பு, மீள் குடியேற்றம், பாதுகாப்பு ஆகியவற்றிற்கு பால் நிலைசார் அணுகுமுறை அவசியமானது. தற்போது உள்ள சூழ்நிலைகள், நடைமுறைச் செயற்பாடுகள் யாவும் பெண்கள் அபிவிருத்திப் பணிகளில் பங்குபற்ற வாய்ப்பளிப்பனவாகத் தெரியவில்லை. பெண்கள், மீள்கட்டுமானப்பணிகளில் தெரிவுக்குழுக்களில் தீர்மானம் எடுப்பவர்களாக உள்ளெடுக்கப்படல் அவசியம். பெண்கள் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுதலுக்குரிய சாதகமான சூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும்.

பொருளாதார வளங்கள் தொடர்பாக பெண்களுக்கு உள்ள உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களது இயலுமை உறுதி செய்யப்படும்போது வளப்பகிர்வு பெண்களுக்கும் ஏற்புடைத்தாகின்றது. இடம் பெயர்ந்த பெண்களுக்கு சொந்தமாக நிலத்துண்டுகள் பிரித்து வழங்கப்படும்போது விவசாயச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், சீவனோபாய செயற்பாடுகட்கும் அவரகள் உரித்துடையோராகின்றனர்.

பெண்கள் சுயமாக தொழில் பார்க்க நிதி வழங்கும் நிறுவனங்கள் ஆதரவு வழங்க வேண்டும். பெண்கள் கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதில் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் பெருகிவரும் வங்கிகள், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கடன் வசதிகளை இலகுவாக்குபவையாக காணப்படவில்லை. கிராமியப் பெண்களுக்கு உற்பத்திக் கடன் வழங்கும் (Production credit to Rural women) நடைமுறை விருத்தியாக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் நிர்வகிக்கும் கிராமிய வங்கிகள் உருவாக்குவதன் மூலம் இக்கடன் வழிமுறைகளை இலகுவாக்க முடியும். மேலும் பெண்கள் தம்மை ஒழுங்கமைப்புக்குள் உட்படுத்தி தம் உரிமைகளைக் காப்பதற்கான நிறுவனங்களை உருவாக்குதல் இன்றியமையாதது. இவை இன்னும் எட்டப்படவில்லை.

வேலை வாய்ப்பு என்பது ஆண்களுக்கு மட்டும் தானா? பெண்கள் எல்லோரும் ஏதாவது தொழில் செய்யவேண்டும் என்று விரும்பவில்லையா? என்ற வினாக்களைத் தொடுப்பின் பெண்களுக்கு தொழில் கட்டாய தேவையாக அமைவதோடு அது அவர்களுக்கு சமூக அந்தஸ்தையும் கொடுக்கும் என்ற விடை கிடைக்கும். பெண்களுக்கு தொழில் கட்டாய தேவை என்பது சமூக மயப்படுத்தப் படவில்லை. பெண் விரும்பினால் தொழில் பார்க்கலாம். தொழில் பார்க்கும் பெண்கள் கூட இடையில் அவற்றை நிறுத்தி விடுவதும் உண்டு. பெண்கள் சாரநிலைப் பொருளாதாரத்தையே கொண்டுள்ளனர். இவர்கள் சமூக உருவாக்கத்தில் துணைபுரிபவர்களாக மாற்றப் படல் வேண்டும். வேலை தேடும் பெண்கள் எவ்வகையான தொழிலைத் தேடுகின்றனர் என அறிந்து தொழில்சார் கற்கை நெறிகளை வழங்கி பெண்கள் தொழிலைத் தேடிக் கொள்ள வழிகாண வேண்டும். இவ்வாறான தொழில் பயிற்சிகளில் பெண்கள் கூடுதலாக உள்வாங்கப்படுவது தேவையாக உள்ளது. சுயதொழில்கள் கூட தற்காலத்திற்கேற்ப நவீன மயப்படுத்தப்பட்ட தொழில்களாக மாற்றப் படும் போது பெண்களின் ஈடுபாடு இவற்றில் அதிகரிக்க வாய்ப்புண்டு. இத் தேவைகட்காக போதிய மனிதவளம், நிதி என்பன ஒதுக்கப் படல் வேண்டும்.

வலுவூட்டல்(empowerment) செயற் பாடானது அபிவிருத்திக்கு மிக அவசியமானது. வலுவூட்டலை யாரும் எவருக்கும் கொடுக்க முடியாது. தொடர்ச்சியான கல்வி வழிகாட்டல், அதன் மூலம் பெறப்படும் அறிவை மூலாதாரமாக கொண்டதே வலுவூட்டல் ஆகும். பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து இச்செயற்பாட்டை ஆற்றி வந்த போதிலும் அவற்றின் பயன்பாடு செயற்றிறன் மிக்கதாக அமையவில்லை. இன்றைய நிலையில் குறிப்பாக நாம் மையப்படுத்த வேண்டிய அம்சங்களில் முன்னாள் பெண் போராளிகளின் மீள் சமுதாய இணைப்பு முக்கியம் பெறுகின்றது. அபிவிருத்திப் பணிகளில் இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களது வாழ்வாதாரங்கள், சமூகதரம் என்பன மேம்படுத்தப்பட வேண்டும்.

துறைசார் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் விவசாயம், மீன்பிடி, உட்கட்டுமான பணிகள், சிறு கைத்தொழில், கணினிச்சேவை, போன்ற துறைகளில் பெண்களை உள்ளடக்கப் படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. அதே போல் உயர் கல்வி வாய்ப்புகளை வழங்கி அவர்களை மேல் நிலைக்கு இட்டுச்செல்வதோடு தொழில் வாய்ப்புகளையும் வழங்குதல் வேண்டும். இவ்வாறு ஆளுமை உள்ளவர்களாக பெண்கள் மேலோங்கும்போது அவர்கள் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதோடு தீர்மானம் எடுக்கும் வலுவுள்ளவர்களாகவும் மாற்றமுறுவார்கள். இதனால் பெண்கள் எதிர்கொள்ளும் பல இடர்பாடுகளை அவர்கள் தாங்களாகவே நீக்கக்கூடிய வாய்ப்புகள் பெருக இடமுண்டு. அரசியல் தளங்களில் கூட பல பெண்கள் ஈடுபடும் போது, பெண்களுக்காக பாராளுமன்றிலும் உள்ளூராட்சி அமைப்புக்களிலும் தமது உரிமைக்காக குரல் கொடுக்க முடிகிறது. இவ்வாறான அபிவிருத்திப் பணிகளில் பெண்கள் ஈடுபடும் போது ஆண்களிற்கு சரிநிகர் சமானமாக பெண்கள் எழுச்சி பெற்று எமது பொருளாதார சமூக கலாசார மேம்பாட்டை விரைவில் மேலோங்க செய்யமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியில் பனை வளஞ்சார் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்

பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியற்றுறை,
விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

எமது நாட்டின் வடபகுதிக்குள் நுழையும் எவருக்கும் கண்ணில் தட்டுப்படுபவை பனை, தென்னை மரங்களாகத்தான் இருக்கும். அந்தளவிற்கு வடபகுதி மக்களுடனும், இந்த மண்ணுடனும் பின்னிப் பிணைந்து இப்பிரதேசத்தினது வரலாறு சொல்லும் மரமாக உயர்ந்திருக்கின்றன. கற்பகதருவான பனை மரம். இதற்கும் மேலாகத் தமிழ் மக்களது வாழ்வியலுடனும், வரலாற்றுடனும் இரண்டறக் கலந்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

பழமாக கீழேவிழுந்து விதை பிரிந்து முளைத்து மண்ணினுள்ளே கிழங்காகி அது வளர்ந்து வடலியாகிப் பின் மரமாகி, விதையிலிருந்து மரம்வரை அனைத்துப் பகுதிகளும் எமக்குப் பயன்தரும் பொருட்களாக விளங்குகின்றன. வடமாகாணத்தின் பகுதிகளான வன்னிப்பெருநிலப்பரப்பிலும் சரி யாழ்ப் பாணக் குடாநாட்டிலும் சரி இன்னும் தீவகப் பகுதிகளிலும் செறிந்து வாழும் இம்மரத்துக்கு வடமாகாணத்தின் மரமாகும் வாய்ப்பே யில்லாது மருது மரத்திற்கு அந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. பனை மரத்தையே நம்பி வாழுகின்ற மக்கள் வாழும் இப்பூமியில் இதற்கென முக்கியத்துவம் கொடுக்கப்படாமை அதனது அபிவிருத்தியையும் அந்தளவிலேயே வைத்திருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது.

மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற போரிலேஇழக்கப்பட்ட பனைமரங்கள் ஏராளம். பனையிலிருந்து இயக்கச்சிவரை தலையையிழந்து தனியனாக நின்று பனை மரங்கள் தாம் பிறந்த இடத்தின் போரின் வடுக்களையும், உக்கிரத்தன்மையையும் இப்போதும் பறைசாற்றி கொண்டிருப் பதனை காணலாம். இருப்பினும் பல இடங்களில் மனிதனது தலையீடின்றி இருந்ததனால் பாரிய அளவில் பரந்து பனைவடலிகள் வளர்ந்து வியாபித்திருப்பது இம் மரம் சார்ந்த கைத்தொழிலுக்கு வாய்ப்பைத் தேடித்தந்திருக்கின்றது. பனை வடலிகள் அதிகளவில் வளர்ந்திருப்பது பனை நார் தொடங்கி ஏனைய பொருட்களை உருவாக்குவதற்கு களமமைத்திருக்கின்றது. இன்னும் பல இடங்களில் குறிப்பாக வளமற்ற மண்ணையுடைய பிரதேசங்களில் பனை மர நடுகையை ஊக்குவிக்கவேண்டிய தேவையும் உண்டு. இவையனைத்தையும் ஒருமித்து நோக்கினால் பனைசார் விவசாயத்தையும், கைத்தொழிலையும் மேம்படுத்துவதற்கான தேவையும் அவசியமும் எழுந்துள்ளது.

**பனை மர வளத்தைப் பேணலும் விருத்தி செய்தலும்**

பனை மரம் வடபகுதியில் பரந்து வளர்ந்திருப்பதிலிருந்து இந்தப் பிரதேசத்துக்குரிய மரமாக இக்கற்பகதரு இருப்பதனை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். எங்களுருக்குக் கிடைத்த அரும்பெரும் சொத்து இது. ஆனால் இயற்கையால் எமக்களிக்கப்பட்ட இந்த சொத்தினைப் பேணுவதும், பாதுகாப்பதும் அதனை மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி செய்ய வேண்டியதும் சமகால தேவைகளாகும். இது விடயத்தில் பனை அபிவிருத்தி அதிகாரசபை பல முன்மாதிரித் திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுவது பாராட்டுக்குரியது. பனை தென்னை கூட்டுறவு சமாசத்தினதும் கூட்டு முயற்சியுடன் பல்கலைக்கழக அறிவு சார் புலமையாளர்களும் இணைந்து கொள் வதுடன் பல நலன்விரும்பிகளும் இதில் கரிசனை கொண்டிருப்பது பனைமர வளத்தை பேணுவதிலும் விருத்தி செய்தலுக் குமான முயற்சிக்கு உறுதுணையாயிருப்ப தாகக் கொள்ளலாம். யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமாக பனம் விதைகளை நடவு செய்த "மில்க்வைற்" ஸ்தாபனத்தினது முன்னைநாள் அதிபர் அமரர் கனகராசா வினதும் அவருடனிணைந்து அண்ணா கோப்பி ஸ்தாபகர் திரு நடராசா அவர்களதும் சமூக செயற்பாட்டை இதில் பதிவு செய்தல் நன்று. இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு பல தொண்டு நிறுவனங்களும், தனியார் நிறுவனங்கள் மற்றும் பரோபகாரி கள் அனைவரும் பக்கபலமாக நின்று பனை வளத்தை மீளவும் கட்டியெழுப்ப உதவ வேண்டும்.

பனை மரத்திலிருந்து விதைகளை நடுகைக்காக தெரிவுசெய்யும்போது தாய் மரத்திலுள்ள நல் இயல்புகளைக் கவனத்தி லெடுத்து அவற்றின் அடிப்படையில் விதை களைத் தெரிவுசெய்து நடுகை செய்தல் சிறந் தது. இங்கே அருமைபெருமையாகவுள்ள நல்ல இயல்புகளைக் கொண்ட பல பனை மரங்களைப் போரின் உக்கிரத்தினுள் நாம் இழந்துவிட்ட நிலையில் மீதமிருக்கின்ற தாய்ப்பனை மரங்களையாவது இனங்கண்டு அழிவிலிருந்து மீட்டுப் பேணுதல் வேண்டும்.

நல்ல இயல்புகளென குறிப்பிட்ட வற்றுள் குட்டையினங்கள், நன்றாகப் பனங் களியைப் பெறக்கூடிய பனம் பழங்களை உருவாக்கும் மரங்கள், பனங்களியில் கயர்ப் புத்தன்மை குறைவான பனம் பழங்கள், ஒரேஞ் நிறத்தினையுடைய மற்றும் பெரிதான பனம் விதையையுருவாக்கும் பனம்பழங்கள், சீவல் தொழிலில் அதிகளவு பூந்துணர் சாற்றைக் கொடுக்கும் மரங்கள் (ஆண் மற்றும் பெண் பனைகள்), அகன்ற அடியைக் கொண்ட பனை மரங்கள் என்பனவாகும். இவ்வாறான பல விரும்பத்தக்க இயல்பு களைக் கொண்ட பனை மரங்களிலிருக்கும் இடங்களைப் பொதுமக்களின் உதவியுடன் இனங்காணுவதோடு அவை தறிக்கப்படா திருப்பதை உறுதி செய்வதுடன் அவற்றின் இயல்புகள் ஆவணப்படுத்தப்பட்டு அவற்றை மேலும் இனப்பெருக்கும் வழிவகைகளையும் திட்டமிட்டுச் செயலாக்கவேண்டும். குட் டையினப் பனைமரங்களை எதிர்காலத்தில் நடுகை செய்வது சீவல் தொழில் உட்படப் பல வேலைகளுக்கு உதவியாக இருக்கும்.

**பனை சார்ந்த தொழிற்றுறையைக் கட்டி யெழுப்புதல்**

பனை சார்ந்த தொழிற்றுறையில் ஏற்பட்ட விழுக்காடு காரணமாகவும் அதனது அபிவிருத்தி மற்றும் மேம்பாடு சார்பாக முக்கியத்துவமளிக்காமையும் சீவல் தொழில் உட்பட ஏனைய பனைசார் தொழிலிருந்து வளமுள்ள இளைஞர் மகளிரை ஏனைய தொழிற்றுறைகள் கவர்ந்திழுத்துள்ளன. இவையனைத்திற்கும் பனை வளஞ் சார்ந்த தொழிற்றுறையை சமகால தேவைகட்கும், சந்தைத் தேவைக்குமேற்ப அபிவிருத்தி செய்யாமையே காரணமாகும். பனம் பொருட்களை உள்ளூர் நுகர்வுக்கு ஏற்ற தரமான பொருட்களாக மதிப்பேற்றஞ் செய்து தயார்ப்படுத்த வேண்டிய உடனடித் தேவையும் எழுந்துள்ளது. எமது நாட்டி லேயே சிறந்த சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்களுக்கு முன்னுரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையடிப்படையில் வாய்ப்புக்களேற்படுத் தப்பட வேண்டும். அதற்கும் மேலாக பனை சார்ந்த தொழிற்றுறையினுள் மீளவும் இளையோரை கவர்ந்திழுக்க கவர்ச்சிகரமான செயற்றிட்டங்களை உருவாக்குதல் அவசிய மாகும். பனை வளஞ்சார் தொழிற்றுறையை இருக்கின்ற மனிதவலுவுடன் இயந்திரமய மாக்குதலும் அதிகரித்த பொருளாதார அபிவிருத்திக்குள்ளாக்கும் செயலாக அமை யும்.

**பனை வளஞ்சார் வர்த்தகத்திற்கான சந்தை வாய்ப்பு**

பனை வளஞ்சார் தொழிற்றுறையின் விருத்தியானது, அதற்கான முறையான சந்தை வாய்ப்பில் முழுமையாக தங்கியிருக்கின்றது எனலாம். உள்ளூர் சந்தை வாய்ப்பினை இனங்கண்டு அபிவிருத்தி செய்தல் முதற்படி யாக இருக்கவேண்டும். எங்களூரவரின் உற்பத்திக்கு நாமே களமமைத்துக் கொடுத்தல் மிகவும் அவசியமானதன்றோ. பனம் பொருட்களுக்கு தென்னிலங்கையில் இருந்து வரும் மக்களிடையே கிராக்கி இருப்பதனால் இப்பொருட்களை தென்னிலங்கையில் சந்தைப்படுத்துவதனை மேலும் விரிவுபடுத் தலாம். மேலும் பனம்பொருட்களுக்கு மதிப்பேற்றம் செய்வதன் மூலம் நுகர்வோரின் விருப்பத்திற்கிணைவாக புதிய கவர்ச்சிகர மான பொருட்களையும் தரம் மிகுந்த பண்டங்களையும் உருவாக்கமுடியும். இதற்குத் தேவையான எந்தவகை தொழில் நுட்பத்தையும் இதற்காக உள்வாங்கிக் கொள்ளமுடியும்.

**பனைவள அபிவிருத்திக்கான அம்சங்கள்**

1. கள் உற்பத்தியைக் குறைத்தலும் பூந்துணர் சாற்றை நொதிக்கவிடாது தடுத்தலும்

யாழ்.குடாநாட்டு சீவல் தொழிலாளர் களுக்கு பெரும் பிரச்சனையாகக் கள் உற்பத்தி அமைந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்து பனங்கள்ளுக்கு தென்பகுதி மக்களிடையே பலத்த வரவேற்பிருந்தும் அதிகமாக உற்பத்தியாகும் கள்ளை தவறணைகளுக்கும் எஞ்சியதை வடிசாலைக்கும் அனுப்பி அங்கே சாராயமாக வடித்தெடுக்கப்படுகின்றது. இவ்வாறு மாற்றிச் சாராயமாக விற்பனை செய்வதற்காக ஏறக்குறைய வருடமொன் றுக்கு 35 இலட்சம் ரூபாவை வரிப்பணமாக அரசாங்கத்துக்கு செலுத்தவேண்டியுமுள்ளது. ஆச்சரியமென்னவெனில் வாழ்வதற்கு அவதியுறும் மக்கள் உள்ளூர் வளத்திலிருந்து தமது சுயமான உழைப்பினால் பெறும் பொருளை விற்பதற்கு வரிப்பணமும் கட்டு வதுதான். மாறாக இதே வரிப்பணத்தில் பலர் அவரவர் சொந்த வாழ்க்கையை சொகு சாக்கியும், தமது வேலைகளைச் சரிவர செய்யாமலும் பகட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே! பனஞ்சாராயத்தின் உற்பத்திக்கும் விற்பனைக்குமாக செலுத்தப் படும் வரிப்பணம் உற்பத்தியாளருக்கே ஆதாயமாக கிடைத்திட்டால் எங்களூர் மக்களது வாழ்வு வளம்பெறும். இதற்கொரு வழியுண்டு. இதனை அவர்களே பரிந்துரைத்திருப்பதும் இங்கே கவனத்திற் கொள்ளத்தக்கது. **கள் உற்பத்தியை குறைத்தலும், அதற்கு மாற்றீடாக பூந்துணர் சாற்றினை நொதிக்காது பதனிடலும் ஆகும்.**

பூந்துணர் சாறு பெறப்படும்போது கொள்கலனினுட் சுண்ணாம்பை பூசுவதன் மூலமாகச் சேகரிக்கப்படும் சாற்றினை நொதிக்கவிடாது பதநீராக பெறமுடியும். இவ்வாறு பூசப்படும் சுண்ணாம்பின் அளவு குறைக்கப்பட்டால் பெறப்படும் பூந்துணர் சாறு நொதிப்பதற்கான சாத்தியக்கூறு அதிகமாக இருக்கும். ஆனால் அதிகமாக பூசப்படும்போது பதநீருடன் சுண்ணாம்பை உணவாக கொள்ளும் வாய்ப்பு அதிகமாவ தால் சுண்ணாம்பு எமது சமிபாட்டுத் தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் தேவையற்ற விளைவுகளை ஏற்படுத்தி விடும். இந்தப் பிரச்சனைக்கு தீர்வாகக் கிடைக்கும் பூந்துணர் சாற்றினை நொதிக்க விடாது தடுக்க பயன்படும் சுண்ணாம்புக்கு மாற்று வழி கண்டுபிடித்திட வேண்டும். இதனை ஆய்வு மூலம் கண்டுபிடித்திட்டால் மட்டுமே இப்பிரச்சனைக்கான தீர்வாகக் கொள்ள முடியும்.

**கள் உற்பத்தியைத் திட்டமிடுவது சமூக சீரழிவினையும் தடுக்கும்**

வேறு வழியின்றி பெறப்படும் கள் ஆங்காங்கே தவறணைகள் ஊடாக விற்கப் படுவதை நாமறிவோம். இதன் மூலமாக பல குடும்பங்களில் பிரச்சனைகள் எழுகின்றதை பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். குடும்பத் தலைவரின் ஒரு நாள் ஊதியத்தில் கணிசமான அளவு கள் குடிப்பதற்காக செலவிடப்படுவ தும் இதன்மூலமாக குடும்பங்களில் சண்டை கள் அதிகரிப்பதுவும் சமூகச் சீரழிவினை இட்டுச் செல்வதையே குறித்துக் காட்டுகின் றது. இதனை பனை வளத்தை தஞ்சமென்று நம்பியிருக்கும் மக்கள் கவனத்திற் கொண்டி ருப்பதுவும் இங்கே குறிப்பிடத் தக்கது. இதில் கவனிக்கத்தக்க விடயமெனில் பூந்துணர் சாற்றினை நொதிக்கவிடாது பதநீராக பெறுவதன் மூலமாக கள் தவறணைகளை மூடிவிடுவதற்கும் மாறாக பதநீரை குடிபான மாக விற்பனை செய்யவும் அதிலிருந்து பெறப்படும் மதிப்பேற்றஞ் செய்த பொருட் களாகவும் உற்பத்தி செய்து விற்கமுடியும். சமூக சீரழிவை ஏற்படுத்தும் தவறணைகளை இல்லாதொழிக்க எமது மக்களே முன்வந்து ஏற்படுத்தும் மாற்றத்திற்கு நாமும் வழிசெய்ய வேண்டும்.

**குட்டையின பனையும் அதற்கான சாத்தியமும்**

வட இலங்கையை இனங்காட்டிக் கொள்ளும் இரு மரங்களான பனையும் தென்னையும் நீட்டி நிமிர்ந்து ஓங்கி வளரும் இயல்புடையன. இவ்வாறு உயர்ந்து வளர் வது இம்மரங்களிலிருந்து முழுப்பயனையும் பெற தடையாக இருக்கின்றது. எந்தவிதமான உற்பத்திக்கான இயல்பிலும் மாற்றமேற் படாது பனைமரத்தினது உயரத்தைக் குறைத்து குட்டையின மரமாக மாற்ற வேண் டியது அவசியமாகின்றது. குட்டையினமாக மாற்றிவிட்டால் பனைமரத்தில் ஏறும் சிரமத்தைக் குறைத்துக் கொள்ள வாய்ப் புண்டு. சீவல் தொழிலில் ஈடுபடும் இள வயதுடையோரைத் தவிர ஏனையோர் பனை மரத்தில் ஏறும் திறனற்றவர்களாகக் காணப் படுகின்றனர். மேலும் சீவல் தொழிலாளி களுள் பலர் வேறு தொழில்களுக்குள் உள்வாங்கப்படுவதனால் எதிர்காலத்தில் இத்தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை யில் விழுக்காடு இருக்கும். இதனாலும் உயரத்தினால் குறைந்த குட்டையின பனைமரங்களை விருத்தி செய்து நடவு செய்தல் வேண்டும்.

**பனங்கிழங்கும் சந்தைப்படுத்தலும்**

பனைமரத்திலிருந்து பெறக்கூடிய உணவுப் பொருள்களுள் பனங்கிழங்கு முக்கிய மானது. வட பகுதியெங்கும் பரந்துபட்ட அளவில் பனம் விதையைப் பாத்தியிலிட்டு கிழங்கினைப் பெறுதல் நடைபெறினும் இதனது பயன்பாடு குறைவடைந்துவிட்ட தாகவே தெரிகின்றது. எமது சுதேச உணவாக எம்முன்னோர் பனங்கிழங்கை வெறுமனே இரண்டாக கிழித்து நார் நீக்கி அவித்து வெயிலில் காயவைத்து புழுக்கொடியலாக்கி, மேலும் வெறுமனே காயவைத்து ஒடியலாக்கி அதையரைத்து ஒடியல் மாவாக்கி உற்பத்தி செய்யப்படும் பிட்டு மதிய உணவுடன் குறிப்பாகச் சோற்றுடன் சேர்த்து உண்டனர். இவ்வுணவில் நார்ச்சத்து அதிகமிருப்பதால் மலச்சிக்கலைப் போக்கும் எளிய உணவாக இருப்பவதையும் குறிப்பிடலாம். பனங் கிழங்கும், காயவைத்த ஒடியல் வகைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிலங்கை மக்களது விருப்பத்துக்குரிய உணவாக இருப்பதுடன் புலம் பெயர்ந்து வெளிநாடுகளிலிருக்கும் எங்களது உறவுகளுக்கும் சிறிய அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதனையும் அவதானிக்குமிடத்து இனி வருங்காலங்களில் இதனையும் ஏற்றுமதிப் பொருளாக மேலும் மதிப்பேற்றஞ் செய்து உலக சந்தை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும்.

**பனம் பூரான், நுங்கு ஆகியவற்றின் சந்தை வாய்ப்பு**

பனம் விதையிலிருந்து பெறப்படும் பூரான், பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யக்கூடிய வாய்ப்புண்டு. நுங்கினை அழகிய ரின்களில் அடைத்து உலக சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டிருப்பதை கவனத்திலெடுத்தல் நன்று. பனை மரம் வளரும் பிற ஆசிய நாடுகளினால் நுங்கு இவ்வாறு விற்கப்படுவதனால் நாமும் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். நுங்கு உற்பத்திக்காக பனங்காயை வெட்டியெடுப்பதனால் பனம் விதைகளின் எண்ணிக்கையில் விழுக்காடு ஏற்பட்டுவிடும் எனும் கருத்தை கவனத்திலெடுக்கும் அதேநேரத்தில் பனம் விதைகளின் தேவைக்கு மேலதிகமாக பனங்காய் பெறுவதற்காக உற்பத்தியை அதிகரிக்கலாம். நுங்கு உற்பத்திக்காக தெரிவு செய்த ஏற்ற தாய்ப்பனைகளை நடவு செய்தல் நல்லது.

**பனம் பழமும் களியும்**

ஏழை மக்களின் உணவாக பனம் பழம் இருப்பதை நாம் அறிவோம். பனம் பழத்திலிருந்து பெறப்படும் பனங்களியிலிருந்து பலவிதமான உணவுப் பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனாலும் அதனை பனம்பாயில் பூசி காயவிட்டு பனாட்டு தயார் செய்வர். இது போல இன்னும் பல பொருட்கள் மதிப்பேற்றஞ் செய்யப்பட்டு உலக தரத்திற்கு இணையாக உருவாக்கப்படல் வேண்டும். இதன் மூலம் சுய தொழில் வாய்ப்பு, குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாக உள்ள குடும்பங்களின் சுயதொழில் வாய்ப்பாகவும் இதனை உருவாக்கிக் கொள்ளலாம்.

**பனம் கைத்தொழில் பொருட்கள்**

பனையிலிருந்து பெறப்படும் பனம் வெல்லம், பனஞ்சீனி உள்ளிட்ட ஏனைய கைப்பணிப் பொருட்களுக்கான தேவை அதிகமாகவே உள்ளது. வடபகுதியில் அபிவிருத்திச் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்ட நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரிக்கும் போது இவ்வகைப் பொருட்களின் உற்பத்தியில் புதுமைகளைப் புகுத்தி சுற்றுலா பயணிகளை கவரும் விதத்தில் அமைத்திடல் நன்று. இதன் மூலம் சந்தை வாய்ப்பினை மேலும் அதிகரித்திட முடியும். பனம் பொருட்களான பனை வெல்லம் (Jaggery) மிகவும் முக்கியமான பொருள். ஆனால் இதனை தூய்மையானதாக நீண்ட நாட்கள் வைத்திருந்து விற்க முடியாது. இதனில் கசிவு காணப்படுவதே காரணமாகும். இவ்வாறு தூய வெல்லம் கசியாது இருக்க வழிகண்டு பிடித்திட்டால் இதனது சந்தை வாய்ப்பினை அதிகரிக்க முடியும்.

**வடிசாலையும் கழிவு நீரும்**

கள்ளிலிருந்து சாராயம் வடித்தெடுக்கப்பட்ட பின் வெளியேறும் திரவக் கழிவு பசளைப் பொருளாக கடந்த 2-3 வருடங்களாக நெல் வயல்களுக்கு பம்பி மூலம் இறைக்கப்பட்டு அராலிப் பகுதியில் சிறந்த முறையில் நெற்செய்கை செய்கை பண்ணப் பட்டுள்ளது. இதன் மூலம் வடிசாலைத் திரவக் கழிவினை மீள்சுழற்சி செய்து பசளையாக பயன்படுத்தும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இது விடயத்தில் மேலும் ஆய்வுகளை செய்து பனை மரத்தின் பாகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவென்று எதுவும் விரயமாகாது பயன்தரு பொருட்களாக மாற்றிடல் வேண்டும். சேதன விவசாயத்தில் பயிர்களை வளர்த் தெடுத்து நற்சத்தான உணவை உட்கொள்ள இவ்வாறான கழிவுகளை பசளைகளாக்கிப் பயன்படுத்தல் வேண்டும். இதன் மூலம் நல்ல சுற்றாடலையும், சுகத்தையும் பெறுதல் சாத்தி யமாகும். மேலும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பதற்கு முக்கியத்துவமளிக்கவும் இதன் மூலம் வாய்ப்புக்களதிகம்.

### பனம் நார் – வினைத்திறனான பொருள்

வடபகுதியில் போரின் உக்கிரத் தன்மைக்குள் சிக்குண்டு அழிவடைந்த மரங்கள் பனையும் தென்னையும் முதன்மை யானவை. இம்மரங்கள் கூவிவந்த எறிகணை களை தடுத்தமையினால் தலைப்பகுதி முழுமையாக சரிக்கப்பட்டு இறந்துவிட்டன. இது தவிர போரிலீடுபட்ட இருபகுதியினரும் காப்பரண்கள் அமைப்பதற்காகவும் தறித்து விட்டதால் மரங்களின் எண்ணிக்கையில் கணிசமான அளவு விழுக்காடு ஏற்பட்டி ருக்கின்றது. இருந்தும் மனித நடமாட்டம் பல பகுதிகளில் மட்டுப்பட்டிருந்தமை யினால் அந்தந்த இடங்களில் விழுந்த பனம் பழங்களிலிருந்து பிரிந்த விதைகள் முளைத்து வடலிகளாக இருக்கின்றன. இதன்படி தற்போது இருக்கின்ற பனை வடலிகள் முந்தைய எண்ணிக்கையிலும் அதிகமாகவே இருக்கின்றன. இவ்வடலிகளிலிருந்து அவற்றின் இலைத்தண்டிலிருந்து நார் பிரித்தெடுக்க முடியும். பனம் நாரினை பயன்படுத்திக் கைத்தொழில் மூலம் பலவகையான பொருட்களை உருவாக்க முடியும். அத்துடன் தென்னம் நாருடன் ஒப்பிடும்போது பனம் நாரில் அதிகமான லிக்னின் இருப்பதனால் இவை இயற்கை யாகவே உக்குவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும். இருப்பினும் நீரைப் பிடித்து வைத்திடும் திறனுடைய இந்நார்களையும் சேர்த்திகளையும் சிக்கன நீர் சேமிப்பிலான பயிர்ச்செய்கைக்குள் உள்வாங்கிட முடியும்.

### பனை வளஞ்சார் ஆராய்ச்சியின் தேவை

பனை வளத்தைப் பாதுகாப்பதற்கும் விருத்தி செய்வதற்கும் அதனது பயன்களை வினைத்திறனான முறையில் பெருக்கிடவும் இவை சார்ந்த ஆய்வுகள் முடுக்கிவிடப்பட வேண்டும். இதில் பனை ஆராய்ச்சி நிலை யத்தின் புனரமைப்பும் அதில் மேற்கொள் ளப்படும் ஆராய்ச்சிகளுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அனைத்து துறைகளும் உள்ளடங்கிய பல்வேறு துறைகளை யிணைக்கும் ஆய்வுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். பனை, தென்னை வள கூட்டுறவுச் சமாசத்தினை மேலும் விரிவுபடுத்திச் சிறந்த கூட்டுறவு கட்டமைப்புக்குள் இம் முயற்சி களை மேற்கொள்வது சிறப்பாகும்.

மேலும் வீட்டுத் தோட்டங்களின் உருவாக்கம் பல்வேறு கோணங்களில் முன்னேற்றப்படும் இக்காலங்களில் பனை வளஞ்சார் வீட்டுத்தோட்டங்களையும் இதில் உள்ளடக்கிக் கொள்வது, சுயலாபமீட்டும் செயலாகவும், சத்துணவை பெற வழிசெய்வ தாகும். பெண்களுக்கான இலகு தொழிலா கவும் அமையும். மேலும் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான சிறந்த வழியாக இதனை கொள்ளலாம்.

### பனைவளஞ் சார் அபிவிருத்தியில் ஆளணி

இதற்கு முன்பு கூறப்பட்ட வளங் களையும் பனைமரஞ்சார்ந்த அபிவிருத்தியில் எடுத்துரைக்கப்பட்ட பிரச்சினைகளையும் விரிவாகப் பார்த்தோம். இன்னும் இவ் அபிவிருத்தியில் மனிதவலுவின் பங்களிப்பு அவசியமெனினும் குறிப்பிட்ட நேர்த்தியாகச் செய்யும் வேலைகளுக்காக இயந்திர தொழில்நுட்பங்களின் உதவியை பெறலாம். குறிப்பாக சீவல் தொழிலாளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கை இழப்பை இனியும் தொடர விடாது அவர்களுக்கான வேறு வேலைகளை இனங்காண்பதன் மூலம் அவர்களின் வருவாயை அதிகரிக்கும். அதே நேரத்தில் இத்தொழிலிலும் முழுமையாக ஈடுபட வைக்கலாம். வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்பங்களை பனை வளஞ் சார்ந்த அபிவிருத்திக்குள் உள்வாங்க வேண்டியதன் அவசியமும் உணரப்பட்டுள்ள நிலையில் பனை மரத்தின் வளங்களை பெறுவதிலும் மதிப்பேற்றஞ் செய்வதிலும் அனைத்துத் தொழில் நுட்பங்களையும் உள்வாங்கி பனை வளஞ்சார்ந்த கைத்தொழில் மலர்ச்சியும் ஏற்படுத்தப்பட வேண்டும். உலகத்தரம் வாய்ந்த பொருட்களின் உற்பத்தி பனைவளத்திலிருந்து பெறப்பட வேண்டும். இது விடயத்தில் பனைவளஞ் சார்ந்த கல்விக்கு முன்னுரிமையளிக்க நாமனைவரும் முயலவேண்டும். அதிலும் பனை வளத்தை நம்பியிருக்கும் மக்களை இக்கல்வியினூடாக உள்வாங்கி அவர்களின் அறிவுப்புலமையை மெருகூட்டி இன்னும் இவ்வளத்தை பேணவும், பாதுகாக்கவும் இன்னும் சிறப்புற பயன்படுத்தவும் வழி செய்தல் வேண்டும். எங்களூர் மரமான பனை மரத்தின் பயன் பாட்டை உறுதி செய்யும் வகையில் இது சார்ந்த அபிவிருத்திக் கட்டமைப்பை ஏற்ப டுத்தவேண்டும். அதில் சிறந்த ஊக்கியாக "சிந்தனைக் கூடத்தினால்" ஏற்பாடு செய்யப் பட்ட இக்கருத்தரங்கு அமைந்திருக்கின்றது என்றால் மிகையாகாது. இப்புத்துணர்வுக்கு இயற்கையின் ஆசி என்றென்றுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமூகத்தின் அறிவு பாதுகாப்பு ஆவணப்படுத்தல் பரவலாக்கம்

சிவானந்தமூர்த்தி சேரன்,
பொறியியற்பீட மாணவன் (1ஆம் வருடம்) மொறட்டுவ பல்கலைக்கழகம்.
பிரதம செயற்பாட்டு அதிகாரி, நூலக நிறுவனம்.

இனம் அல்லது சமூகம் ஒன்று, தனது இருப்பை உறுதிசெய்வதும், அதனது செழிப்பான எதிர்காலத்தை உருவாக்குவதும் முக்கியமாகப் தனது அறிவை பாதுகாத்து ஆவணப்படுத்தி பரவலாக்கம் செய்வதும் அவசியமாகும். இன்றைய காலகட்டத்தை பொறுத்தமட்டில் அறிவு பாதுகாப்பு, ஆவணப்படுத்தல், பரவலாக்கம் என்ற விடயங்களில் பெருமளவு கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் துரதிஷ்டவசமாக எமது தமிழ் இனம் அல்லது சமூகம் இது தொடர்பாக பெரிய அளவில் விழிப்புணர்வு அற்று கவலையீனமாக இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். ஏனைய மேற்குலக சமூகங்கள் தற்போது இது தொடர்பாக அதிகளவு கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டன. இதற்கு உதாரணமாக பல விடயங்களை எடுத்து காட்டலாம். அதுவும் அதிதுரித வளர்ச்சிகண்டு வரும் நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களை பயன்படுத்தி இச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

இனம் அல்லது சமூகம் ஒன்று தனது வரலாற்றை தொலைக்கும் போது அதாவது பேணி பாதுகாக்க தவறும் போது அது தனது இருப்பில் ஐம்பது சதவீதத்தை இழந்து விட்டதாகவே கருத வேண்டும். இதற்கு இன்று இவ் உலகத்தில் காணாமல் போய்விட்ட இனங்கள் அல்லது சமூகங்கள் சான்றாகின்றன. இந்த வகையில் இனம் அல்லது சமூகம் ஒன்று தனது இருப்பை உறுதிசெய்வதற்கு தனது அறிவு பாதுகாப்பு, ஆவணப்படுத்தல் பரவ லாக்கத்தில் ஈடுபடவேண்டியதன் அத்தியாவசியத்தை உணரகூடியதாக இருக்கின்றது. அதிலும் இன்றைய நவீன விஞ்ஞான தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தும் போதே அறிவு பாதுகாப்பு, ஆவணப்படுத்தல் பரவலாக்கம் என்பது வினைத்திறனாக சாத்தியமாக்கபடுவதுடன் என்றும் எப்போதும் நின்று நிலைக்ககூடிய தன்மையை பெறுகின்றது.

தனித்துவம் எனும் சொல்லும் இங்கேயே முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் ஒரு இனம் அல்லது சமூகம் தனது அறிவு பாதுகாப்பு, ஆவணப்படுத்தல், பரவலாக்கத்தில் ஈடுபடாவிடின் காலப் போக்கில் தனது தனித்துலகத்தை இழக்க வேண்டி நேரிடுகின்றது. அதாவது கால நீரோட்டத்தில் இழுத்து செல்லப்படும் போது சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு தன்னை ஈடு கொடுப்பதற்கும் தன்னை பாதுகாத்து கொள்வதற்கும் ஒரு இனம் அல்லது சமூகம் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டி ஏற்படுகின்றது. இதனுல் அச்சமூகம் தனது அடையாளங்களை இழக்க வேண்டி அல்லது மறக்கவேண்டிய நிலைக்கு உள்ளாகின்றது.

இவ்வகையில் ஒரு இனம் அல்லது சமூகம் தனது தனித்துவமான அடையாளங்களை, வரலாற்றைப் பேணிபாதுகாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் போது சிறப்பான ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு பொறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை கையாள்வதன் மூலமே திரிவுபடுத்தப்பட்ட கற்பனைகள் உருவாவதை தடுப்பதுடன் உண்மைச்சம்பவங்களை உலகுக்கு எடுத்து காட்டுவதுடன் விடயத்தை சரியான முறையில் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்து செல்ல கூடியதாகவும் இருக்கும்.

கணனி உலகத்தில் சுருங்கிவிட்ட எமது உலகம் இணையம் என்கின்ற ஒன்றினால் தன்னை படம் பிடித்து காட்டி கொண்டிருக்கின்றது. இணையற்ற இந்த உலகம் இன்று இணையம் என்ற ஒன்றினுள் சுருங்கிவிட்டது. உலகத்தின் ஒரு முடிவில் இருந்து மற்ற முடிவில் இருக்கும் ஒருவரை தூரநேர வேறுபாடுகளை மறந்து நினைத்தவுடன் தொடர்புகொண்டு உரையாட முடிகின்றது. எமது வாழ்வின் மூலை முடுக்குகளில் எல்லாம் இன்று கணனியும் இணையமும் ஊடுருவி விட்டது. கணனி என்கின்ற யுகத்தில் காலடி வைத்துவிட்ட நாம் அதனை வினைத்திறனுக கொண்டு செல்வதற்கு இணையத்துடன் இணைந்து வாழ வேண்டியுள்ளது. இந்தவகையில் கணனி, இணையம் என்பன உலகெங்கும் பரந்துவாழும் ஒவ்வொரு தனிநபரையும் ஒன்றிணைக்கும் ஒரு சாதனமாகத் நிகழ்கின்றது.

எமது இலங்கை தமிழ் சமூகம் ஏதாவது ஒருவகையில் முற்று முழுதாக பல்வேறுபட்ட காரணங்களால் சிதைக்கப்பட்டுள்ளது. தமது நிலம் தொடர்பான வரலாறு தொடர்பான ஆதாரங்களில் இருந்து பெயர்க்கப்பட்டுள்ளனர். இலங்கையில் வாழும் இலங்கை தமிழரின் எண்ணிக்கைக்கு சற்றும் குறைவில்லாமல் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து இலங்கை தமிழர்கள் சிதறி வாழ்ந்து வருகின்றனர். யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் புலம்பெயர்தல் என்பது இலங்கை தமிழரை பொறுத்தமட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இவ்வாறு திக்கு திக்காகப் பரந்து வாழும் எமது சமூகத்துக்கு புவியியல் ரீதியியல் ஒரு பௌதிக ஆவணகாப்பகம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியம் எங்கும் காணப்படவில்லை. அவ்வாறு நிறுவுவோமாயினும் அது எந்தளவு தூரம் வினைத்திறனானதாக அமையும் என்றும் முழு இலங்கை தமிழ் சமூகத்துக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதும் கேள்விக் குறியான ஒரு விடயமாகும்.

இவ்வாறு சிதைந்து போயுள்ள எமது இலங்கை தமிழ் பேசும் சமூகம் இணையம் மூலமாக மாத்திரமே ஏதாவது ஒரு வகையில் ஒருங்கிணைந்து கொள்ள முடியும். இந்தவகையில் நூலக நிறுவனம் எனும் தன்னார்வ நிறுவனம் மேற்கொள்ளும் எண்ணிம நூலக திட்டம் எமது இலங்கை தமிழ் பேசும் சமூகங்களின் அறிவைப் பாதுகாத்து ஆவணப் படுத்தி பரவலாக்கத்தில் ஈடுபடும் ஒரு விலைமதிப்பற்ற பணியை செய்து வருகின்றது. எதிர்காலத்தில் எழுத்தாவணங்களையும் தாண்டி இதர ஆவணங்களையும் உள்ளடக்கி ஒரு வினைதிறனான ஆவணகாப்பமாக மாற்ற, அதைச் செயற்படுத்துவதற்கான தொழில்நுட்ப சாத்தியங்கள் குறித்தும் ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது மிகவும் மகிழ்ச்சி தருகின்ற ஒரு விடயமாகும். அவ்வகையில் ஒலிகோப்பு (Audio) நிகழ்படம் (Video) இயங்குபடம் (Animation) படங்கள் (Images) தரவுகள் (Data) போன்றவற்றையும் இணைப்பார்களாயின் அது எமது இலங்கை தமிழ் பேசும் சமூகத்திற்கு ஒரு விலைமதிப்பற்ற வரபிரசாதமாகும்.

நூலக நிறுவன அனுசரனையுடன் நிகழும் நூலக திட்டம் மூலம் தற்போது இலங்கையினுள் மட்டுமல்லாது புலம் பெயர்ந்து வாழும் இலங்கை தமிழ் பேசும் சமூகமும், ஏனைய தமிழர்களும் ஏராளமாக பயன்பெற்றுவருகின்றனர். இதற்கு சான்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று புலம்பெயர் நாடுகளில் இத்திட்டத்திற்கான ஆதரவு மேலும் மேலும் அதிகரித்து செல்கின்றது. அந் நாடுகளில் இங்கே நடைபெறுவது போன்று ஆவணப்படுத்தல் அதாவது எண்ணிமமாக்கும் பணிகளும் பரவலாக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கை தமிழ் பேசும் சமூகத்தில் நடைபெறும் முக்கியத்துவமிக்க அத்தனை சம்பவங்களும் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் இயலுமானவரை பூரணமாக பெற்று கொள்ள முடியும்.

புவியியல் ரீதியில் பேணப்படும் பௌதிக ஆவணகாப்பகத்துக்கும் இணையம் மூலம் பேணப்படும் ஆவணகாப்பகத்துக்கும் இடையில் பயன் ரீதியில் பாரிய வேறுபாடுகள் உண்டு. பௌதிக ஆவணகாப்பகத்தில் குறிப்பிட்ட ஒரு ஆவணத்தை பார்வையிடுவதாயின் உலகில் எப்பாகத்தில் இருந்தாலும் அவ்விடத்திற்கு வருகை தந்தே அதனை பார்வையிட வேண்டும். அதுமட்டுமல்லாமல் ஆவணம் ஒன்றை வழங்க வேண்டுமாயின் கூட அந்த பொறிமுறையையே கடைப்பிடிக்க வேண்டும். ஆனுல் நூலக திட்டம் போன்ற இணைய ஆவணகாப்பகத்தில் ஒருவர் எந்நேரத்தில் எங்கிருந்தும் தனக்கு தேவையான ஆவணத்தை பார்வையிடமுடியும் என்பது மட்டுமல்லாமல் தன்னிடம் உள்ள ஆவணத்தையும் அங்கிருந்தே ஆவணகாப்பகத்துக்கு அளிக்க முடியும். அது மட்டுமல்லாமல் இருபத்து நான்கு மணிநேர பயன்படுத்த முடிவதோடு, ஒரே நேரத்தில் பலர் ஒரு ஆவணத்தை பார்வையிடமுடியும், எல்லாவற்றுக்கு மேலாக எந்த ஒரு காரணிகளாலும் அழிக்கமுடியாது.

உதாரணமாக அண்மையில் பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்று தமிழ் மொழியின் தலைவர் இறைபதம் அடைந்தார். இதனை வாசித்த ஒரு இளம் சமுதாயத்தினருக்கு இவர் பற்றி அறிய ஆவல் தூண்டும். உடனடியாக அவர்கள் தமது கணனியில் www.bhhlaham.hrg எனும் இணைய முகவரிக்கு சென்று எழுத்தாளர்கள் எனும் பகுப்பின் ஊடாக செல்வாராயின் இவர் எழுதிய நூல்களை பெறமுடியும் அதனைவிட நூல்கள் எனும் பகுப்புக்கு செல்வாராயின் இவர்பற்றியும் இவரது தமிழ் பணிகள் பற்றியும் பல ஆய்வாளர்கள் எழுதிய நூல்கள் காணப்படுகின்றன. ஆய்வுமுயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு இவ்வாறான ஒரு வசதி இருத்தல் ஒரு பெரும் வரப்பிரசாதமாகும். அதாவது ஒரு தகவலை தேடி செல்லும் போது அது தொடர்பிலான மேலதிக தகவல்கள் அல்லது அது தொடர்பான இணையான தகவல்கள் என்பவற்றை பெறக்கூடியாதாக இருக்கும்.

நூலக திட்டம் தனக்கேயென சில சிறப்பியல்பான அம்சங்களை கொண்டுள்ளது. அதாவது எந்தவொரு எழுத்தாவணங்களிலும் ஒரு சிறு மாற்றங்களை கூட ஏற்படாதவாறு பார்த்து கொள்கின்றனர். ஒரு ஆவணத்தை எண்ணிமபடுத்தும் போது அவ் ஆவணத்தின் முழுவதையும் அதாவது அங்கு காணப்படும் வெற்றுதாள் முதல் அச்சிடப்பட்ட தாள்கள் வரை முழுவதுமாக ஆவணப்படுத்துகின்றனர். ஆரம்பகாலத்தில் தட்டெழுதப்பட்ட ஆவணங்கள் மட்டுமே இணைக்கப்பட்டிருந்தன ஆனுல் எண்ணிம நூலகம் என்ற கருத்தியலை தாண்டி ஆவணகாப்பமாக அது உருவெடுத்த போது மின்பிரதியாக்கம் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலமே சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவையும் ஆவணப்படுத்தல் சாத்தியமானது. அதனைவிட தட்டெழுதுவதிலும் பார்க்க மின்பிரதியாக்கம் செய்வதில் துல்லியம், வேகமான ஆவணப்படுத்தல், எழுத்து பிழைகளற்ற மாற்றமின்றிய ஆவணம் போன்ற அனுகூலங்களை பெற முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமானது அல்லது தரமற்றது, பயனுள்ளது அல்லது பயனற்றது போன்ற தணிக்கைகள் நூலக திட்டத்தில் மேற்கொள் ளப்படுவதில்லை. விமர்சகர்களால் அல்லது பயனாளர்களால் அவை தீர்மானிக்கபடுகின் றன. இலங்கை போன்ற தமிழ் பேசும் சமூகம் சார்ந்த அச்சில் வெளிவந்த எந்த ஒரு ஆவண மாக இருந்தாலும் இவர்களால் ஆவணப்படுத் தப்பட்டு வருகின்றது. எதிர்கால சந்ததியின ருக்கு இன்றைய காலப்பகுதியிலும் கடந்த காலப்பகுதியிலும் அச்சில் வெளிவந்த ஆவணங்களை அழியாது விட்டு செல்வதே நூலக திட்டத்தின் நோக்கமாக இருக்கின்றது.

நூலக திட்டம் தற்போது மிகவும் சாதாரணமாக மெதுவாகவே பயணித்து கொண்டிருக்கின்றது. இதற்கு தேவையான மூலங்கள் அதாவது ஆவணங்கள் பெரும்பா லானவை நீண்டகாலமாக கொழும்பு தமிழ்ச் சங்க நூலகத்தில் இருந்தே பெறப்பட்டு வந்தன. தற்போது யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இருந்தும் ஆவணங்கள் பெறப்படுகின்றன. ஆனால் இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் கிடைத்தற்கரிய பல முக்கியமான ஆவணங் களை இவ் இரு இடத்தில் இருந்தும் பெறக் கூடியதாக இருந்தாலும் இன்னும் ஏராளமான ஆவணங்கள் பல்வேறுபட்ட இடங்களில் சிதறி காணப்படுகின்றன. இவற்றை எல்லாம் தேடி அடைய வேண்டிய கட்டாயத்தில் நூலக திட்டம் உள்ளது.

எனினும் சில பத்திரிகைகள் உதாரண மாக தினமுரசு மற்றும் சில சஞ்சிகைகள் தாமாக முன்வந்து நூலக திட்டத்துக்கு பழைய புதிய ஆவணங்களை வழங்கி ஆவணப்படுத்தி பொறுப்புணர்வுடன் செயற்படுகின்றனர். இதேபோல் அனைவரும் முன்வந்தால் இத்திட்டம் வெகு விரைவாக வினைத் திறனுடன் முன்னேற்றம் கண்டுவிடும். தனிநபர்கள் சிலர் ஆரம்பகாலங்களில் வெளி வந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றை சேகரித்து வைத்துள்ளனர். இதற்கு உதாரணமாக கண்டியை சேர்ந்த இரா.கனகரத்தினம் அவர்களை குறிப்பிட லாம். இப்படியானவர்களையும் நூலக திட்டம் மிகவிரைவாக அணுகவேண்டி யுள்ளது. ஏனெனில் தனிப்பட்ட நபர்கள் சார்ந்த சேகரிப்புகள் அவர்களுடைய ஆயுட்காலத்துடன் தொடர்புடையவை. அதாவது அழியும் ஆபத்து கூடியவை.

நிதி என்பது இவ்வாறான செயற்பாடு களுக்கு எப்போதும் மிகவும் சவாலான ஒரு விடயம் என்பது யாவரும் அறிந்த உண்மை. இத்திட்டம் பெருமளவான தன்னார்வலர் களின் பணியினுல் வளர்க்கப்பட்டு வருவதால் உண்மையில் இதன் நிதி தேவை பெருமளவு குறைக்கப்படுகின்றது. இத்திட்டம் இன்று வரையான இதன் வளர்ச்சியை வைத்து இதன் பெறுமதி சம்பந்தமாக கணிப்பீடு செய்த போது உண்மையில் இதுவரை இதற்கு செலவான தொகையின் 10 மடங்கு தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டது. எனவே அந்த ஒன்பது பங்குகளும் தன்னார் வலர்களது உழைப்பால் மீதமாக்கப்பட்டது. எனினும் இதற்கான செலவுகளை செய்வதில் பெரும்பாலான ஏறத்தாழ 99வீத அனுசரணை நூலக நிறுவனத்தாலேயே மேற்கொள் ளப்படுகின்றது. அதாவது மாதாந்த செலவுகளை ஈடுசெய்வதற்கு நூலக நிறுவனம் பங்களிபாளர்களை கண்டடைந்து அவர்களி டமிருந்து நிதியை பெற்று வழங்கிவருகின்றது. இந்த விடயத்தில் மிகவும் சிறப்பானதொரு அணுகுமுறையை கடைப்பிடிக்கின்றனர் யாதெனில் தனிநபர்கள் மூலமான மிகச்சிறிய பங்களிப்பாயினும் அதனை நிறுவனங்கள் மூலம் பெறப்படும் பெரியளவான பணங் களிலும் மேலானதாக கருதப்படுகின்றது. ஏனெனில் ஒவ்வொரு சின்னஞ்சிறிய தொகை மூலம் திட்டம் மீது அக்கறையுள்ள பல பங்காளர்களை சம்பாதிக்க முடியும் என்ப தால் ஆகும். இதனைவிட இதற்கான வரவு செலவுகளை இயலுமானவரை விரைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைத்தளத்தில் வெளிப்படையாக வெளியிட்டு வருவதும் பல பங்களிப்பாளர்கள் தாமாக முன்வந்து நிதி பங்களிப்பு செய்வதற்கு முக்கியமான காரணமாகும்.

நூலக நிறுவனம் 2010ம் ஆண்டு மே மாதம் இலங்கை சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சட்ட ரீதியான நிறுவனமாக இயங்கிவருகின்றது. இது 2008ம் ஆண்டிலிருந்து நூலக திட்டத்துக்கு பங்களிப்பு செய்த முக்கிய பங்களிப்பாளர்களை இணைத்து கொண்டு செயற்படுகின்றது. அவ்வகையில் நூலக வலைத்தளத்தை பொறுப்பெடுத்து அதனை மிகப்பயனுள்ள வினைத்திறனுன ஒன்றாக வளர்த்தெடுக்க அரும்பாடுபட்டு வருகின்றது. நிறுவனத்தில் நான்கு இயக்குனர்களை கொண்ட அறங்காவலர் சபை மிகவும் பொறுப்புவாய்ந்த ஒரு சபையாகவும் மேலும் நிறுவன பொறுப்புகள் சார்ந்து அதாவது தொழில்நுட்பம், நூலகவியல், சட்டம், நிதி போன்றவற்கு பொறுப்பாக சிலரை நியமித்து துணை ஆளணியாகவும் பிரதேசம் சார்ந்து ஒருங்கிணைப்பாளர்கள், குழுக்கள், நாடுகள் சார்ந்து ஒருங்கிணைப்பாளர்கள் குழுக்கள் அமைத்து தன்னார்வ வெளியை இயலுமான வரை குறுக்காதவகையில் விரிவாகவே வைத்துள்ளது. இக்கட்டத்தில் இந்தியாவின் தமிழ்நாட்டை சேர்ந்த விநோத்ராஜனின் பங்களிப்பு பற்றி இக்கட்டுரையில் குறிப்பிட்டே ஆக வேண்டும். முகம் தெரியாத தன்னாவ பங்களிப்பாளராக நூலக திட்டத்துடன் இணைந்து நீண்ட காலமாக செயற்பட்டு வந்தார். மிகவும் அண்மையிலேயே புகைப்படங்கள் மூலம் முகம் அறிந்துகொள்ளப் பட்டார். இவரே நூலக வலை தளத்தை மீடியா விக்கி என்ற தளத்தை கோபிநாத்துடன் இணைந்து அடுத்தகட்டத்திற்கு கொண்டு சென்றவர். நிறுவனமாக செயற்படுவதன் மூலம் நூலகத்திட்டம் சார்ந்து மட்டுமல்லாமல் இது சார்ந்த பல் தளங்களிலும் செயற்பட முனைந்து வருகின்றது.

எமது சமூகத்தின் அறிவு பாதுகாப்பு, ஆவணப்படுத்தல், பரவலாக்கம் சார்ந்து நேரடியான அளவீடுகளுக்கு சாத்தியமில்லை. எனினும் பலவகைப் பதிவுக்கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், தமிழ் விக்கிபீடியாக் கட்டுரைகள் போன்றவற்றிலும் நூலக திட்டம் பெருமளவு உசாத்துணையாக பயன்படுகின்றது. இலங்கை, இந்தியா மட்டுமன்றி தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் இதன் பயன்பாடு காணப்படுவது மட்டுமன்றி அதிகரித்தும் செல்வது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அதுமட்டுமன்றி எண்ணிம ஆவணப்படுத்தல் தொடர்பில் தமிழ்ச்சூழலில் முன்மாதிரிச் செயற்திட்டமாக காணப்படுகின்றது. இதற்கு உதாரணமாக பொள்ளாச்சி தாசனின் ஒரு நாள் ஒரு நூல் திட்டம், தமிழரங்கத்தினர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் எண்ணிம ஆவணப்படுத்தல் செயற்திட்டங்களுக்கு நூலக திட்டம் முன்மாதிரியாக இருத்தல் மகிழ்ச்சி தருகின்ற ஒரு விடயமாகும்.

நூலக நிறுவனம் நிறுவனமாக இன்னும் சாதிக்க நிறைய இருக்கின்றது என்றே கருத வேண்டியுள்ளது. வெறும் ஆவணப் படுத்தல் என்ற புள்ளியுடன் தன்னை மட்டுப் படுத்தி கொள்ளாமல் அதையும் தாண்டி இன்னும் பல செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு நூலக நிறுவனத்தின் முன் இன்றுள்ளது. அறிவு பாதுகாப்பு, தகவல் அறிதிறன், அறிவுபரம்பல், கல்வி மேம்பாடு என பல தளங்கள் கண்முன்னே இன்று காணப்படுகின்றன. இப்புள்ளிகளில் பரந்து பட்டு செயற்படுவதன் மூலம் இன்னும் பல தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து சமுதாய பேரியக்கமாக செயற்படுவதன் மூலம் மேற் கூறிய இலக்குகளை வெற்றி கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் நிலைத்து நிற்கக்கூடிய மீன்பிடி அபிவிருத்தியை நோக்கி

திருமதி சிவசாந்தினி குகநாதன்,
இணைப் பேராசிரியர், விலங்கியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கையின் வடபகுதியில் முக்கியமாக யாழ். மாவட்டத்தில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக மிகமுக்கிய புரத உணவை வழங்குவதும். சமுதாயத்துக்கு வருமானத்தை ஈட்டித்தரும் துறையாகத் திகழ்வதும் மீன் பிடித்துறையாகும். இத்துறையின் சரிதத்தை உற்று நோக்கினால் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புகளைச் சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து மேல் மட்டமான மீன்பிடி அமைச்சுவரை ஒருங்கிணைத்துச் செல்வதைக் காணலாம். இத்தகைய கட்டமைப்பு இலங்கையின் எல்லா மாவட்டத்திலும் காணப்படுவது ஒரு தனித்துவமான சிறப்பம்சமாகும்.

மீன்பிடித்துறையானது இலங்கையைப் பொறுத்தவரையில் 65%ஆன விலங்குப் புரதத்தை நாட்டுக்கு வழங்குவதுடன் 600,000 பேருக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ வேலை வாய்ப்பு வழங்குவதாக இலங்கையின் தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவக (NARA) புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (Gross Domestic Production; GDP) உற்று நோக்கினால், இது 2000ஆம் ஆண்டு 2.1% ஆகக் காணப்பட்டது. பின்பு 2001இல் 2.0% ஆகவும் அதையடுத்த வருடங்களில் படிப்படியாகக் குறைந்து 2005இல் 0.8% ஆகவும் மாறியது. GDP ஆனது 2005இல் குறைவடையப் பிரதான காரணம் சுனாமியின் தாக்கமாகும். 2004 மார்கழி 26ஆம் திகதி பாரிய சுனாமி அலைகளின் தாக்கத்தினால் எமது நாட்டின் கரையோரப் பிரதேசங்கள் பாரிய தாக்கத்துக்குட்பட்டன. எனினும் 2005 தை மாதம் முதல் அரசு - அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியினால் மீன்பிடி வலைகள், உபகரணங்கள் மீனவர்கட்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து GDP ஆனது படிப்படியாக உயர்வடைந்தது. GDP ஆனது 2007/2008இல் 1.5 ஆகவும் 2009இல் 1.7 ஆகவும் உயர்வடைந்தமை மீன்பிடித் துறையில் அபிவிருத்தி நிகழ்ந்துள்ளமையைத் தெளிவுபடுத்துகிறது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில், யாழ்ப்பாண மாவட்டத்தின் மீன்பிடி உற்பத்தி இயற்கை அழிவுகளால் மட்டுமன்றி 1983இலிருந்து அங்கு நிலவிய போர்ச் சூழலினால் பெரிதும் பாதிப்படைந்தது. 2009ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிவரை மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத கட்டுப்பாடுகள் நிறைந்த ஒரு சூழ் நிலையே காணப்பட்டது. இதனால் மீனவர்கள் மாற்றுத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் உதாரணமாக: CARE, CARITAS, HUDEC, World Vision மற்றும் பல நிறுவனங்கள் மாற்றுத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பல திட்டங்களை மீனவ குடும்பங்களிடையே அமுல்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வருடாந்த தனிநபர் நுகர்வினை (Per Capital Annual Consumption) எடுத்து நோக்கினால் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தால் (Medical Research Institute; MRI) அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நுகர்வு 21 kg ஆகக் காணப்படும்போது எம் நாட்டின் வருடாந்த தனிநபர் நுகர்வு 2009ஆம் ஆண்டில் 16.7 kg ஆகும். எனினும், யாழ். மாவட்டத்தின் தனிநபர் நுகர்வு 2008ஆம் ஆண்டில் 5.2kg ஆகும்.

மேலே விபரித்த தரவுகளை உற்று நோக்கினால் யாழ். மாவட்டத்தில் மீன்பிடி அபிவிருத்தியின் அவசியமானது தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது. அபிவிருத்தி எனும்போது மீன்பிடி உற்பத்தியை அதிகரிப்பதை மட்டும் கருத்திற்கொள்ளல் ஆகாது. உற்பத்தி அதிகரிக்கப்படும் வேளை நிலைத்து நிற்கும் தன்மை பற்றியும் சிந்தித்தல் வேண்டும். எனவே மறைமுகமாக மீன்பிடி முகாமைத்துவத்தில் அதிக சிரத்தை எடுத்தல் இன்றியமையாதது. முகாமைத்துவமானது உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்பு, சூழலியலுக்குரிய மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பவற்றினை மையமாகக் கொண்டு அமுல்படுத்தப்படல் சிறந்தது.

மீன்பிடித்துறையானது இலங்கையைப் பொறுத்தவரை கரையோர, கரைக்கப்பாலான, ஆழ்கடல் மீன்பிடி என பிரதானமாக மூன்று வகையாகக் கூறப்படலாம். இலங்கையின் மொத்த மீன்பிடி உற்பத்திக்கு அதிகம் பங்களிப்பது கரையோர மீன்பிடியே. 1990ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உற்பத்திக்கு கரையோர மீன்பிடி 92%உம், கரைக்கப்பாலான/ஆழ்கடல் மீன்பிடி 8%உம் பங்களித்தது. 2000ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உற்பத்திக்கு கரையோர மீன்பிடி 66.5%உம், கரைக்கப்பாலான / ஆழ்கடல் மீன்பிடி 33.5%உம் பங்களித்தது. 2009இல் கரையோர மீன்பிடி 61.4%உம், கரைக்கப்பாலான/ ஆழ்கடல் மீன்பிடி 38.6%உம் பங்களித்தது. இத்தரவுகள் இருபது வருடங்கட்கு முன்பிருந்த நிலைமை மாறி கரைக்கப்பாலான/ ஆழ்கடல் மீன்பிடி வளர்ச்சியடைந்து வருவதை எடுத்துரைக்கிறது. யாழ்.மாவட்டத்திலும் தற்போது ஆழ்கடல் மீன்பிடியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. இதற்கான வசதிகள், ஏற்பாடுகள் மிகக் குறைந்தளவிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளன. கரையோர மீன்பிடியைப் போலன்றி ஆழ்கடல் மீன்பிடியானது செலவு கூடியது. தொழில் நுட்ப அறிவு அதிகம் தேவைப்படுவது. எனவே யாழ் மாவட்ட மீனவரிடையே ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்லுவதில் அதிக நாட்டம் இல்லாத ஒரு நிலைமையே இன்னும் காணப்படுகிறது. ஆழ்கடல் மீன்பிடிக்குத் தேவையான பல நாட்கலங்களோ, இழுவைப் படகுகளோ மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்றது.

இலங்கையின் தெற்குப் பகுதியில் அண்ணளவாக 3000 பல நாட்கலங்கள் 2009ஆம் ஆண்டில் பாவனையிலுள்ளதாக மீன்பிடித்துறை நீர்வாழ்வள அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கும் அதேவேளை யாழ் மாவட்டத்தில் 10 பல நாட்கலங்கள் மட்டுமே உள்ளன. இதில் ஒன்று Ocean Perlyn எனும் பெயர்கொண்ட பல நாட்கலம். இது GTZ நிறுவனத்தால் யாழ். மாவட்ட மீன்பிடி கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்துக்கு நன்கொடையாக 2009ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வழங்கப்பட்டது. எனினும் கடற்படையினரின் அனுமதிக்காக காரைநகர் கடற்படைத்தளத்தில் இது 10 மாதங்கள் காத்துக்கிடந்ததன் பிற்பாடு தற்போது இது மீன்பிடியில் ஈடுபடுகிறது. ஏனைய ஒன்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்கலங்களும் மீளத் திருத்தியமைக்கப் பட்ட தனியாருக்குச் சொந்தமான கலங்களா கும். இவற்றைவிட பலநாட் கலங்கள் தயாரிக்கும் இடங்கள் ஒன்று தன்னும் யாழ். மாவட்டத்தில் இல்லை. இது ஆழ்கடல் மீன்பிடி அபிவிருத்தியில் மிக முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

இவை எல்லாவற்றையும் மனதில் கொண்டு யாழ். மாவட்ட மீன்பிடி அபி விருத்தியை நோக்கினால் பிரதானமாக பின்வரும் நான்கு விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். அவையாவன

1) சமுதாய திருப்தியும், அபிவிருத்தியும்,
2) கரையோரப் பாதுகாப்பு,
3) வீதிப் புனரமைப்பு,
4) மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களினதும், சமாசங்களினதும் வலுவாக்கல்.

சமுதாயத்தின் திருப்தியையும், அபிவிருத்தியையும் எடுத்துநோக்கினால், மீன்பிடித் துறையில் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் முதற்கண் அச்சமூகத்தினை மேம்படுத்துதல் வேண்டும். அச்சமூகத்துக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளான வீட்டு வசதி, குடிநீர்வசதி, மலசலகூட வசதி, கல்வி வசதி என்பன கட்டாயமாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு அவர்கள் கல்வியறிவு உள்ளவர்களாக மாற்றப்படல் வேண்டும். கல்வியறிவு ஏற்பட தாமாகவே ஒற்றுமையாக செயற்படும் ஆற்றல், மீன்பிடித்துறையை முகாமைத்துவம் செய்தலின் முக்கியம் போன்ற எண்ணங்கள் அவர்களிடையே உருவெடுக்கும். இணை முகாமைத்துவம் சாத்தியமாகும்.

அத்துடன் மீன்பிடிக் கலங்கள், வள்ளங்கள், படகுகள், கட்டுமரம், வலைகள் என்பனவற்றை வாங்குவதற்கான வசதிகள் உதாரணமாக சுழற்சிமுறைக் கடன் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். வெளிச்ச வீடு, பனிக்கட்டி உற்பத்தி வசதிகள், தொழிற்சாலைகள், எரிபொருள் நிரப்பு நிலையம், சகல வசதிகளுடன் கூடிய துறைமுகம், பல்நோக்கு மண்டபங்கள், மீனவர் இளைப்பாறும் மண்டபங்கள், சிறு மீன்களிலிருந்து கால்நடை உணவு தயாரிக்கும் தொழிற்சாலை, அதிக மீன்கள் பிடிபடும் போது அவற்றைப் பாதுகாக்க சிறந்த சுகாதார மான முறையில் பதனிடும் தொழிற்சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். ஏற்படுத்திக் கொடுக்கும் வசதி வளங்களை சிறந்த முறையில் பேணிப் பாது காக்கும் வழிமுறைகளும் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

கரையோரப் பாதுகாப்பினை உற்று நோக்கினால் யாழ். மாவட்டத்தில் தற்போது கண்டல் தாவரங்கள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. இக்கண்டல் தாவரங்களின் முக்கியத்துவம் பற்றி கரையோர வாழ் மக்களி டையே எடுத்துரைத்து அவற்றை அழிப்பதைத் தடைசெய்வதுடன் ஏனைய கரையோர விலங்குகள், தாவரங்களும் அழிவடையாது பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும். சில இடங்களில் கடல் நீர் உட்புகுவதால் கரை யோரக் கிராமங்களில் உள்ள கிணறுகள் உவர் நீராக மாறும் நிலைமை தகுந்த மாற்று ஏற்பாடு களால் தடுக்கப்படல்வேண்டும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தெருக்கள் மிக மோசமாகப் பழுதடைந்த நிலையிலேயே காணப்படு கின்றன. பிடிக்கப்பட்ட மீன்கள் தகுந்த முறையில் பாதுகாக்கப்பட்டு சந்தைப்படுத்து வதற்கு ஏதுவாக, மீன்கள் பிடிக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டவுடன் கொண்டு செல்வதற்கேற்ப பாதைகள் மறுசீரமைக்கப் படல் வேண்டும். கரையோரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டியவையும், பிரதான தெருக்களும் வாகனங்கள் இலகுவாக பயணிப்பதற்கு ஏற்ப திருத்தியமைக்கப்படல் இன்றியமையாதது.

அடுத்து மீனவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கிராமத்தில் காணப்படும் மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவராக இருப்பர். சங்கங்கள் பல சேர்ந்து சமாசங்களாகவும், சமாசங்கள் யாவற்றினதும் தலைமை சம்மேளனமாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பாகத் திகழ்கிறது. சம்மேளனமானது மீன்பிடியியல் நீருயிர்வளத் திணைக்களத்துடன் நேரடித் தொடர்பிலிருக்கும். எனவே அனைத்து சமாசங்களும் ஏதோ ஒரு வகையில் மீன்பிடியியல் நீருயிர்வளத் திணைக்களத்துடன் தொடர்புடையனவாக இருப்பர். திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வழிநடத்தலில் சமாசங்கள் இயங்கும். இவ்வழிநடத்தலில் மீன்பிடியியலுக்குரிய பரிசோதகர் முக்கிய இடம் வகிப்பர்.

எனவே மீனவ சங்கங்களை வலுப்படுத்துதல் அதாவது அங்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து அங்கத்தவரின் அறிவைப் பெருக்குதல் மீன்பிடி அபிவிருத்திக்குப் பெரிதும் வழிசமைக்கும். சமாசங்களின் உட்கட்டுமான வசதிகளை அதிகரிக்கச் செய்யலாம். உதாரணமாக பிரதி எடுக்கும் இயந்திரம், கணினி, மோட்டார் சைக்கிள் போன்ற வசதிகளை வழங்கி மீனவ அங்கத்தவரது பிள்ளைகள் இவ் உபகரணங்களை இயக்குவதில் பயிற்றுவிக்கப்படுவதால் அவர்களின் ஆற்றலை மேம்படுத்தலாம். கணக்குகளை ஏடுகளில் பதிவிடல், அவற்றைச் சரியான முறையில் பேணல், தட்டச்சு மற்றும் பிரதி எடுத்தல் ஆற்றலை மேம்படுத்த சில பயிற்சி வகுப்புக்களை நடாத்தி ஆளணியினரின் அறிவை மேம்படுத்தலாம். மீனவ சமூகத்தினரின் சிறு பிள்ளைகட்கு ஆரம்பக்கல்வி வசதி, பெரிய பிள்ளைகட்கு அவர்களின் வகுப்புக்குரிய பாடங்களை கற்பிக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

எது எவ்வாறாயினும் மீனவ சமூகத்தின் அறிவைப் பெருக்கி அவர்களையும் கல்வியியலாளர்களாக்குவதே மீன்பிடி அபிவிருத்தி நிலைத்து நிற்பதற்கு கை கொடுக்கும். எனவே இணை முகாமைத்துவத்தினை ஏற்படுத்த சமுதாய அடிப்படையான முகாமைத்துவமே சிறந்தது என்பதை மனதிற் கொண்டு செயற்படுவோமாக.

மேலும், அயல் நாடான இந்தியாவின் மீன்பிடி இழுவைப்படகுகள் எமது எல்லையில் வந்து மீன் வளங்களைச் சுரண்டிச் செல்கின்றன இது ஒரு நீண்டகாலப் பிரச்சனையாகவே இருந்துவருகிறது. எமது வடபகுதியில் நிலவிய போர்ச் சூழலால் மீனவர்கள் போதியளவு வசதி வாய்ப்புகளைக் கொண்டிராமையும் ஆழ்கடல் மீன்பிடிக்குரிய தொழில் நுட்ப வளர்ச்சியின்மையும் இச்சுரண்டல் நிலைக்கு வாய்ப்பளிக்கின்றன. இம் முரண்பட்ட நிலமையை இரு நாட்டு அரசாங்கங்களும் சரியான முறையில் அணுகி தீர்த்தல் இலங்கையின் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியில் இன்றியமை யாததொன்றாகும். எனவே நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியைப் பேணுவதில் மீனவர் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனம், மீன்பிடியியல் நீரியல் வளத்துறை, யாழ். பல்கலைக் கழக மீன்பிடியியற்றுறை, அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் இணைந்து இணை முகாமைத்துவப் பாதையில் முன்னோக்கி நகர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி விவாசய அபிவிருத்தியின் எதிர்கால வாய்ப்புகள்

பேராசிரியர் கு.மிகுந்தன்
*விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.*

வடபகுதிக்கான அபிவிருத்தியில் விவசாயஞ் சார்ந்த எதிர்கால வாய்ப்புகள் பற்றிய அம்சங்களை இக்கட்டுரையில் ஆராய முற்பட்டிருக்கும் அதே வேளையில் இவ் அபிவிருத்தியின் பயன்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதான எதிர்பார்ப்பையும் உள்வாங்கியிருக்கின்றது. வடபகுதிக்கான விவசாய அபிவிருத்தி எனும்போது இங்கு இருக்கின்ற வளங்களை மையப்படுத்தியதாகவே இது சார்ந்த திட்டமிடல்களும் நடைமுறைப்படுத்தல்களும் இருக்கும். அத்துடன் விவசாய அபிவிருத்தி அம்மக்களின் வாழ்வாரத்தை விருத்தி செய்வதுடன் விவசாய செய்கைக்கான வளங்களைப் பேணுவதும், மேலும் பாதுகாத்தலுடன் அதனை சிறந்த முறையில் பயன்படுத்தவும் இன்னும் விவசாயஞ் சார்ந்த கைத்தொழில் துறையின் விருத்தி, சிறந்த சந்தை வாய்ப்பு, பொறிமுறைகளின் வாயிலாக வேலைவாய்ப்பை அதிகரித்துக் கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். எதிர்கால அபிவிருத்தியினுள் எமது வாழ்க்கை நிலையை வளப்படுத்தும் வழிமுறைகளை அவசியம் இனங்கண்டு உள்வாங்குதல் அவசியமானதாகும்.

**வளங்களைப் பேணலும் பயன்பாடும்.**

வடபகுதிக்குரிய வளங்கள் தனித்துவமானவை என்பதுடன் அவற்றை பேணிப் பாதுகாத்தலும் தேவைக்கேற்ப வினைத்திறனான வகையில் பயன்படுத்தலும் மிகமுக்கியமானதாகும். வளங்களுள் முக்கியமானவை வடபகுதிக்கான தாவரங்களாகும். குறிப்பாக இங்குள்ள பனை, தென்னை, மா, பலா என வடபகுதியை இனங் காட்டிக் கொள்ளும் சிறப்புக்குரிய தாவர இனங்கள் ஒரு புறமிருப்பினும் இப்பிரதேசத்திற்கான விலங்குகள் இவற்றுடன் இங்கிருக்கும் பௌதிக வளங்களையும் குறிப்பிடலாம். தாவர வளங்களுள் வடபகுதிக்கான பயிரினங்கள் முக்கியமானவை. சிறந்த இயல்புகளுடைய தாவர இனங்கள் பல அழிந்துவிட்ட நிலையில் மீதமிருக்கின்ற இனங்களையாவது பேணி பாதுகாத்தல் அவசியமானதாகும்.

**தாவர இனங்களுக்கான வங்கி (Germplasm Bank)**

வடபகுதிக்குரிய தாவர இனங்களுள் சிறப்புக்குரியவற்றை மேலும் அழிந்து போகாது பேணிப் பாதுகாப்பதற்கான தாவர இனங்களுக்கான வங்கியொன்றின் தேவை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே மீதமாயுள்ள இனங்களை இனங்கண்டு அவற்றை அதேயிடத்தில் அழியவிடாது பாதுகாக்கும் அதேவேளையில் அவற்றை ஓரிடத்தில் வளர்த்து பாதுகாத்துக் கொள்ளலாம். இதன் மூலம் சிறந்த இயல்புகளுடைய தாவர இனங்களை அதன் பயன்பாட்டை மேலும் விருத்தி செய்து பெறமுடியும். இங்கே அனைத்து வகையான தாவர இனங்களும் உள்வாங்கப்படுதல் சிறப்புக்குரியதாகும். இவ்வகையான தாவர இனங்களுக்கான வங்கி ஒவ்வொரு மாகாணத்திற்கும் அமைக்கப்பட்டு அந்தந்த பிரதேசத்துக்குரிய தாவர இனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**உள்ளூர் இனங்களை விருத்தி செய்தல்**

வடபகுதிக்குரிய உள்ளூர் பயிர் இனங்களை விருத்தி செய்யவேண்டிய தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்துள்ளது. குறிப்பாக 'யாழ்ப்பாணத்து மாம்பழம்" என்பது இப்பகுதிக்கான சிறப்புக்குரிய பிரதேசத்து அடையாளத்தை முன்னிறுத்தும் பயிரினமாகும். நார்த் தன்மையுடன் தனித்துவமான சுவையுடன் கனிந்தாலும் முக்கால் பகுதி பச்சையான தோற்பகுதியைக் கொண்ட மாமர வகை தற்போது அழிந்து செல்கின்றது. இதேபோல பலா, பனை, தென்னை என பல பயிர்களின் சிறப்புக்குரிய இனங்களை மேலும் விருத்தி செய்து கொள்ள வேண்டும். இவ்வினங்கள் இப்பிரதேசத்து சுவாத்திய நிலைக்கு இயை வாக்கிக் கொண்டவையாதலால் இவற்றை இனங்கண்டு, இனம் பெருக்கி அவற்றின் பயனை பெறுதல் வேண்டும். உள்ளூர் இனங்களின் பெருக்கம் உள்ளூரிலிருந்து உலக சந்தை வாய்ப்பினை நிலைநிறுத்தவும் பயன்படும். உள்ளூர் பயிரினங்களுள் சிறந்த இயல்புகளுடையவற்றை தெரிவு செய்து அவற்றினை நடவு செய்தலை ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக இப்பிரதேசத்து வள மான கற்பகதருவான பனை வளத்தை அவற்றின் வேறுபட்ட இனங்களை இனங் கண்டு நடவு செய்தல் சிறந்தது. இங்கே அதிக பூந்துணர் சாறு உற்பத்தி, பனங்களி, நொங்கு, பூரான், கிழங்கு போன்றவற்றை உடைய நார்த்ததாவரங்களை மேலும் நடுகை செய்ய வேண்டும்.

**விதை மற்றும் நாற்று உற்பத்தியை ஊக்குவித்தல்**

விவசாய அபிவிருத்தியில் குறிப்பாக விவசாய செய்கையில் தூய விதை (Pure seed) என்பது மிகமுக்கியமானதாகும். அதேபோல சிறந்த வீரியமுள்ள நாற்றும் முக்கியமானது. இரண்டும் சிறந்த விவசாய செய்கைக்கான அடிப்படைத் தேவையாக அமைவதனால் அனைத்து பயிர்களுக்குமான தூய விதைகளை உற்பத்தி செய்ய உற்பத்தி கிராமங்களை (Seed village) உருவாக்குதல் வேண்டும். தூயவிதை உற்பத்தியில் எமது பிரதேசத்து உள்ளூர் பயிர் இனங்களுடன் விளைச்சலை அதிகம் தரக்கூடிய கலப்பினப் பயிர்களின் விதைகளை உற்பத்தி செய்யவும் ஊக்குவித்தலும் நன்று. விதை உற்பத்தி செய்யும் போது பயிர் செய்கைக்கான தனிமைப்படுத்திய இடை வெளி ஆகக் குறைந்தது 200 மீற்றர் என்பதால் குறிப்பிட்ட விதைகளுக்கும் இன்னும் வீரிய முள்ள நாற்றுக்களை உற்பத்தி செய்வதற்கும் விதை மற்றும் நாற்றுக்களை உற்பத்தி செய்யும் கிராமங்களை உருவாக்கிக் கொள்ளலாம். இங்கே விவசாய சம்மேளனங்களை உள் வாங்கிய நிறுவன கட்டமைப்பினூடாக இதனை செயற்படுத்துவது வெற்றிகரமான தாக இருக்கும்.

**காலநிலை மாற்றமும் பயிர்ச்செய்கையும்**

நடுத்தர பணவரவுடைய நாடுகளுள் தற்போது எமது நாடும் அடக்கப்பட்டுள்ளது. ஓரளவிற்கு ஏனைய பயிர்வகைகளில் முன் னேறிக் கொண்டிருந்தாலும் நெல் உற்பத்தியில் நாம் தன்னிறைவடையும் நிலைக்கு எட்டிவிட்டோம் என்பது மகிழ்ச்சிக் குரியதாகினும் இன்னும் பல மக்கள் ஒரு கைபிடி நெல்லை பெறுவதில் இன்னல்களுக் குள்ளாகின்றதை அவதானிக்கலாம். உற்பத்தியில் தன்னிறைவடையினும் அதன் கிடைத்தன்மையை அதிகரித்து அனைவ ருக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும். இந் நிலையில் ஏனைய பயிர்களினதும் உற்பத் தியை அதிகரித்து அதன்மூலம் விவசாயஞ்சார் கைத்தொழிலை மேம்படுத்த முடியும். பயிர்ச் செய்கைக்கு தடைக்கற்கலாக பலகாரணங் களிருப்பினும் தற்போது காலநிலை மாற்றம் முன்னிலைப்படுத்தப்பட்ட பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதிகரித்த வெப்பநிலை, வழமைக்கு மாறான நீண்ட வரட்சித்தன்மை யைப் பிரதிபலிக்கும் மாதங்கள் இவற்றுடன் சீரற்ற மழை வீழ்ச்சி இவையனைத்தும் பயிர்ச்செய்கை அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன எனலாம். மாறிவரும் காலநிலைக்கேற்ப பயிர்ச்செய்கையிலும் பயிர் தெரிவிலும் மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். வடபகுதி விவசாயத்தினுள் புதிய உத்திகளை உள்வாங்கி மாறிவரும் கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கேற்ப பயிர்ச்செய்கையை மேற் கொள்ள வழிசெய்தல் நன்று. பணப்பயிர் களான வெங்காயம், புகையிலை ஆகியவற்றை பரந்த அளவில் தொடர்ச்சியாகப் பயிர் செய்வதைத் தவிர்த்து இவற்றிற்கு மாற்றீடாக அதே இலாபத்தைதரக் கூடிய உணவுக்கான பயிர்களையும் கைத்தொழிலுக்கான பயிர் களையும் அறிமுகஞ்செய்ய வேண்டும். ஆதா யத்தையும் உற்பத்தியையும் முதன்மைப் படுத்தி தொடர்ச்சியாக ஒரேநிலத்தில் குறித்த பயிர்களை நடுகை செய்வதைத் தவிர்த்து திட்டமிட்ட ஒருங்கிணைந்த பயிர்ச்செய்கை வழிமுறைகளை கவனத்திற் கொள்ள வேண்டும்.

**விவசாயமும் கால்நடையும் இணைந்த செய்கை முறைகள்**

விவசாய அபிவிருத்தியென்பது தனித்து பயிர்வகைகளை வளர்க்கும் செயற் பாட்டுக்கு மேலாக கால்நடை வளர்ப்பும் இணைந்ததாக செய்முறைகள் அமைய வேண்டும். ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை இங்கே முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். விவசாய செய்கையிலிருந்து கால்நடைகளுக்கு தீவனமும் கால்நடை வளர்ப்பிலிருந்து கூட்டெருவும் ஒன்றுக்கொன்று ஒத்தாசை யான செயன்முறைகளூடாக அபிவிருத்தி கட்டியெழுப்பப்படல் வேண்டும். இதன் மூலம் வாழ்வாதரத்திற்கான வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ளலாம். கடந்த கால இன்னல்களுக்குள் சிக்குண்டு உறவுகள், உடைமைகள் என பலவற்றையிழந்து தவிர்க் கும் இப்பிரதேசத்து மக்களின் வாழ்வியல் மேம்பாடு இவ்வபிவிருத்தி நோக்கங்களுள் முக்கியமானதாக இருத்தலே இதனூடு பயணிக்கும் எவ்வகைத் திட்டமாயினும் அவர் களுக்கான விடியலாக அமையும். ஒருங் கிணைந்த பயிர்ச்செய்கை அனைத்து வளங் களையும் சிறப்பாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த உதவுவதோடு இயற்கை சார் விவசாயத்தை கட்டியெழுப்ப பெரிதும் பயன்படும்.

**சத்துணவும் சமநிலையுணவும்**

வடபகுதியெங்கும் மட்டுமல்ல எமது நாடளாவிய ரீதியிலும் சத்துணவினை உட்கொள்பவர்களின் சராசரியளவு குறைவாக காணப்படுகின்றது. ஒருவர் சராசரியாக தமது தேவைக்கான உணவை உட்கொண்டாலும் அதுவே நிறைவுணவாக இருப்பதில்லை. இதனால் சத்துணவு குறைபாட்டினால் பல நோய்கள் இங்குள்ளவர்களை வயது வேறு பாடின்றி பீடித்துள்ளதை அண்மைய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் விலை குறைவாக சத்துணவை கொடுக்கும் பயிர்வகைகள் உற்பத்தி செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது. எங்கள் பிரதேசத்து உற்பத்தி எங்களது மக்களை பட்டினி போட்டு வேறிடத்திற்கு இலாபத்தை மட்டும் இலக்கா கக் கொண்டு ஏற்றுமதி செய்வதில் எதுவித பிரயோசமில்லை. முதலில் விலைகுறைந்த நிறையுணவைப் பெற விவசாய அபிவிருத்தி கொடுக்குமாயின் இம்மக்களை மேன்மையுற வைத்து பின்பு அவர்கள் மூலமாக விவாசயத்தி லும் அது சார்ந்த கைத்தொழில் புரட்சியிலும் பங்கேற்கலாம். 'தனிமனிதனுக்கு உண வில்லையெனில்' என்னும் வாக்கின் எதிர் பார்ப்பு வடபகுதி விவசாய அபிவிருத்தி யினூடாகச் சாத்தியமாகும் நிலை வர வேண்டும். பெண்கள், சிறுவர்கள், குழந்தை களுக்கான தினமொன்றுக்கான சத்துணவு உறுதி செய்யப்படாத நிலையில் இது சார்ந்த அபிவிருத்திக்கான திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் மேம்பாடு**

எமது பிரதேசமெங்கும் ஏறக்குறைய 70,000 விதவைகள் வாழ்வதாக கணிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. இவர்களுடன் சேர்த்து பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் குடும்ப வருமானத்திற்கான வழிவகைகளையும் அத்துடன் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் கவனஞ் செலுத்துவது நல்லது. பெண்களுக்கான வருமானம் அவர்களது திறனுக்கேற்பவும், ஈடுபாட்டிற்கேற்பவும் உயர்த்தப்படல் வேண்டும். பெண்களினது உழைப்பை விவசாய அபிவிருத்தி முழுமையாக உள்வாங்கப்படும்போது அவர்களது நியாயமான ஊதியம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

**விவசாய செய்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

வடபகுதி விவசாய செய்கையின் அபிவிருத்திக்கு குறிப்பிட்ட சில உள்ளார்ந்த பிரச்சினைகள் சவாலாக அமைந்திருக்கின்றன. இவற்றுள் உள்ளீடுகளின் கிடைத்தன்மையும் பாவனையும் ஒரு காரணமாக இருப்பின் அவற்றையும் தாண்டி பீடை முகாமைத்துவம் ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பீடைகளை முகாமைதுவப்படுத்துவது எளிதானதாக இருக்காது. இதுகாலும் பீடைகளை கட்டுப்படுத்துவது எனும் போர்வையில் அளவுக்கதிகமான பீடைநாசினிகளை விவசாய செய்கையில் பிரயோகித்ததன் விளைவாக சூழல் மாசடைந்ததுடன் குறிப்பாக நீர்நிலைகளை மாசுபடுத்திவிடுவதிலும் இன்னும் உணவாக உண்ணும் மரக்கறி வகைகளையும் சுத்தமானதாக, சுகாதாரமானதாக பெறுவதற்கும் இயலாமல் போய்விட்டது. பீடை நாசினிகளுக்கான மாற்றீடாக உயிரியல் கட்டுப்பாட்டையும் ஏனைய முறைகளை பயன்படுத்த இது சார்ந்த ஆய்வு செய்தாக வேண்டும். இவ்வாறான பீடைநாசினிக்கு மாற்றீடான பீடைக்கட்டுப்பாட்டு முறைகளை விருத்தி செய்து சேதன விவசாயத்தை நோக்கிய வழித்தடங்கலில் பயணிக்க வேண்டும். பீடைநாசினி மட்டுமே தீர்வென்ற வழமையான கலாசாரத்திலிருந்து விலகி சேதன முறை மூலமான இயற்கை வழி விவசாயத்தை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

மாறிவரும் காலநிலையின் தாக்கம் பீடைப் பெருக்கத்திலும் உந்து சக்தியாக இருப்பதனால் பீடை முகாமைத்துவம் இனிவருங்காலங்களில் இன்னும் சிக்கலுக்குள் உள்ளாகவிருக்கிறது. இத்தகைய பிரச்சினைகளுக்கு சூழலை மாசுபடுத்தாது சிறந்த பரிகாரங் கண்டிட வேண்டும். சுத்தமான சுகாதார உணவை உற்பத்தி செய்து இன்னும் பலவுயிர்களை மீட்டிட வேண்டும். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாய் வெளிநாடுகளிலிருந்து எமது பிரதேசத்தினுள் கொண்டு வரப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களுடன் பலவகையான புதிய பீடைகள் வந்திங்கு பரவுகின்றன. இவ்வாறான பீடைகளை அனுமானித்து அவற்றை இயன்றவரை கட்டுப்படுத்த முயலவேண்டும். இவ்வவிடத்தில் மூலிகைத் தோட்டம் ஒன்று வீட்டுத்தோட்டத்துடனான ஒரங்கமாக இணைக்கவேண்டும்.

**நீர்வளமும் எதிர்நோக்கும் சாவல்களும்**

வடபகுதி விவசாயத்தில் நீர் வளத்தின் பங்களிப்பு முக்கியமானது. அதுவும் வரண்ட வலயத்தினுள் சுருங்கிப்போன இப்பிரதேசத்தில் கால போகத்தில் பெய்யும் கன மழையும் சிறுபோகத்தில் பெய்யும் சிறுமழையுமே பயிர்களை வளர்க்க உறுதுணையாயுள்ளன. தற்போது சூழவுள்ள கரையோரப் பிரதேசம் உவர் நீராக மாறிவரும் இந்நிலையில் உள்ளூரிலும் அதிகரித்த நீர் பாவனையால் விவசாய கிணறுகள் உவர் நீராக மாறிவருகின்றன. இதனை சீர் செய்ய உவர் நீருக்கு இசைவாக்கமடைந்து வளரும் பயிர்களை தெரிவு செய்து வளர்க்க வேண்டும். மேலும் வன்னிப்பகுதியில் குளங்கள் இருப்பதனால் நீர்ப்பாசனத்துடனான விவசாய செய்கையை மேலும் விரிவு படுத்தலாம். வன்னிப் பிரதேசத்திலும் யாழ்ப்பாணத்திலும் நீர் முகாமைத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகளான சொட்டுநீர்ப்பாசனம், தூவல் நீர்பாசனம் ஆகிய முறைகளை மேலும் விரிவுபடுத்தி நீரை சேமித்து வரட்சியிலிருந்து தாக்குப்பிடிக்கலாம். இன்னும் மணல் மண் உள்ள பிரதேசங்களில் ஏற்ற பயிரை தெரிவு செய்து தொழில்நுட்ப அறிவை பயன்படுத்தி பயிர்ச்செய்கையை மேம்படுத்தலாம்.

**மீன்பிடியும் விவசாய அபிவிருத்தியும்**

நன்னீர் நிலைகளில் நன்னீர் மீன் வளர்ப்பினை ஊக்குவித்தலும் அவற்றுடனிணைந்து ஒருங்கிணைந்த விவசாய செய்கையை மேற்கொள்வது இன்னும் சிறப்பாக இருக்கும். மீன்வளர்ப்பு மூலமாக விலங்குப் புரதத்தின் தேவையை ஈடுகட்ட முடியும். மேலும் கடற்கரைப் பகுதியில் கடல்பாசிகள், கடல் குக்கும்பர், கடலட்டை போன்றவற்றை வளர்த்து வருமானமீட்டவும் வேலை வாய்ப்பை விருத்தி செய்யவும் வழிகளுண்டு.

**விவசாயஞ்சார்ந்த கைத்தொழில் விருத்தி**

விவசாய அபிவிருத்தியில் அதுசார்ந்த கைத்தொழில் விருத்தி முன்னிலைப்படுத்த வேண்டும். விவசாய செய்கை மூலமாக பெறப்படும் விளை பொருட்கள் மதிப்பேற்றஞ் செய்யப்பட்டு வினைத்திறனை அரிகரித்துக் கைத்தொழிலின் விளை பொருளாக வெளிவரும். இவ்வாறாக மதிப்பேற்றஞ் செய்வதனால் அவற்றுட்குரிய கேள்வியை அதிகரிக்கலாம். இதன் மூலம் விவசாயிக்கு நிறைந்த வருமானமும் பல இளைஞர் யுவதிகட்கு வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். அத்துடன் இதற்கான முன்னேற்பாட்டில் விவசாயத்துள் உள்வாங்கப்படும் அனைத்து வகை பயிர்களையும் பயிர்ச் செய்கை முறைகளையும் மேலும் விருத்தி செய்ய விஞ்ஞான தொழில்நுட்பங்களையும் உள்வாங்க வேண்டும். மேலும் தொழில்சார் அபிவிருத்தியில் வேலையை இலகுவாக்கவும் தரமானதாக்கவும் அவசியங்கருதிய இயந்திர தொழில்நுட்பங்களையும் உள்வாங்க வேண்டும்.

குறிப்பாக பழவகைகளை சேமித்து பதனிட்டு, நுகர்வோர் விரும்பும் தரமான பொருட்களாக உள்ளூர், வெளியூர் மற்றும் உலக சந்தையில் விற்பனைக்கு விடவேண்டும். இதற்கு உறுதுணையாக போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதும் இன்னும் தற்போது புனரமைக்கப்பட்டு செப்பனிடப்படும் நெடுஞ்சாலைகளும் ஏனைய பாதைகளும் உந்துதலாக இருக்கும்.

பனை வளஞ்சார் கைத்தொழில் விருத்திக்கு இங்கே தனியிடமுண்டு. பனை, தென்னை வளங்களை அவற்றின் பயன்களை முழுவதுமாக பயன்படுத்தும் காலத்துள் விவசாய அபிவிருத்தி ஒன்றிணைவதாலும் "வடக்கின் வசந்தம்" கருத்திட்டங்களுக்குள் இவை உள்வாங்கப்பட்டிருப்பதாலும் இவையனைத்தும் நடைபெறும் என உறுதியாக கூறலாம்.

மனைப் பொருளாதாரத்தின் மேம்பாடு விவசாய அபிவிருத்தியின் அடித்தளமாக இருப்பதனால் விவசாயியின் சமூக பொருளாதார நலன்கள் கவனிக்கப்பட்டு அதன் மூலமாக விவசாயத்தைச் செய்வதற்காக இளையோரை திசைதிருப்பியும், கவர்ந்திழுத்தும் ஆக்கபூர்வமான வழிகளை செயற்படுத்த வேண்டும்.

**மூலிகைப் பயிர்களும் விவசாய அபிவிருத்தியும்**

"உணவே மருந்து, மருந்தே உணவு" எனும் முதுமொழிக்கிணங்க விவசாய செய்கையினுள் மூலிகைப் பயிர்களையும் விருத்தி செய்தலை ஊக்குவிக்கலாம். ஆனாலும் மூலிகைப் பயிர்கள் மருத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்காக நேரடியாக பயன்படுத்துவதால் சேதன முறை மூலமே வளர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் மூலிகை மருத்துவத்தையும் செழிப்புற செய்ய முடியும். இயற்கை வழி விவசாயத்தையும் இயற்கை மருத்துவத்தையும் அபிவிருத்தியினுள் சிறைப்படுத்தி அவற்றின் பயன்களை அனைவரும் அனுபவிக்க இந்த விவசாய அபிவிருத்தி முனைதல் வேண்டும். மேலும் இதன் மூலமாக பலருக்கு மேலும் வேலை வாய்ப்புப் பெற வாய்ப்பாகிவிடும். விவசாய அபிவிருத்தி என்னும் அகன்ற போர்வைக்குள் வடபிரதேசத்து வளங்களை பேணுதலும், அவற்றின் சிறந்த பயன்பாட்டை பெறுவதோடு உள்ளூர் மருத்துவம், வேலை வாய்ப்பு என பல விடயங்களுக்கு வழிசமைக்கலாம்.

இன்னும் நீரிழிவு, புற்றுநோயென பலரும் வயது வேறுபாடின்றி பாதிக்கப்படுவதால் நீரிழிவுக்கு காரணமான மாச்சத்தை உணவில் குறைத்து புரதம், நார்ச்சத்துடைய உணவுகளை உண்பதை ஊக்குவிக்க வேண்டும். இதற்காக இவை சார்ந்த பயிர்களை உற்பத்தி செய்வதிலும் இன்னும் மருத்துவ மூலிகைப் பயிர்களையும் உணவில் சேர்த்து இருப்பவர்கள் சுகமாகவும் இனிவருஞ் சந்ததியை தேகாரோக்கியத்துடனும் வளர்த்தெடுக்க வழிகாணலாம்.

**விவசாய கல்வியும், ஆராய்ச்சியும், மற்றும் அபிவிருத்தியும்**

வடபகுதி விவசாய அபிவிருத்திக்கான செயற்பாட்டில் விவசாய கல்வியின் பங்கு அளப்பரியது. இது ஒரு விவசாய பூமி எனினும் விவசாய கல்வியினுள் உள்வாங்கப்படும் மாணவர்களது எண்ணிக்கை க.பொ.த் சாதாரண தர மற்றும், உயர்தர மட்டத்திலும் சரி இன்னும் பல்கலைக்கழக மட்டத்திலும் சரி குறைவானதாகவே இருக்கின்றது. இதில் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் விழுக்காடு விவசாய அபிவிருத்தியில் நிச்சயமாக ஒரு தேக்க நிலையை நீண்ட கால நோக்கில் தோற்றுவிக்கும். இதற்காக க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர கல்வி நிலைகளில் புதிதாக பாடசாலைகளில் விவசாய விஞ்ஞானத்தை அறிமுகப்படுத்துவதும் விவசாய பீடத்திலும் இன்னும் அதிகமான மாணவர்களை உள்வாங்கவும் வழிசெய்திடல் வேண்டும். இது குறித்து எழுதும் போது விவசாய பீடத்து வளங்களின் குறைபாடும், பீடத்திற்கான நிலத்தில் கட்டடம் அமையாததும் பீடத்தில் மாணவர் வருகையில் விழுக்காட்டிற்கு காரணமானது. இருபது வருடமாக தற்காலிக இருப்பிடத்தில் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கியபின் தற்போது விவசாய பீடத்திற்கென கிளிநொச்சியிலுள்ள அறிவியல் நகரில் சொந்தமான காணியில் இருக்கும் கட்டடங்களுள் விரைவில் நிரந்தரமாக இடமாற்றப்படவுள்ளது எனும் இனிய செய்தியை இதில் பதித்துக்கொள்ள விரும்புகிறேன். சிந்தனைக் கூடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு தொடரில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஆறு மாதங்கள் கடந்து இக்கட்டுரை எழுதும்போது நனவாகியிருக்கின்றது. விவசாயபீடத்தின் வளர்ச்சி நிச்சயமாக வடபகுதி அபிவிருத்தியில் ஒரு மைல் கல்லாகவும் அடித்தளமாகவும் இருக்கும்.

வடபகுதி விவசாய அபிவிருத்தியில் மேற்கூறப்பட்ட விடயங்களைத் திட்டமிட்டுச் செயலாக்கினால் அதன் பயனை விரைந்து அனைவரும் அனுபவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பும் சிபார்சுகளும்

*01.* மனித வாழ்வுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பயன்படும் அனைத்தும் வளங்களே ஆகும். இயற்கையாகக் கிடைக்கும் வளத்தை மனிதன் தன் அறிவாலும், தொழில்நுட்ப விருத்தியாலும் பயன்பாட்டிற்கு உட்படுத்தி உற்பத்தி வளங்களாக மாற்றுகின்றான். மனித தேவைக்காகவே அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே வளங்களை முறையாகவும் திறமையாகவும் பயன்படுத்துவதற்கு மனித வளத்தை மேம்பாடு அடையச் செய்தல் வேண்டும். மனிதனுக்கு நாம் வழங்கும் கல்வியறிவு, வினைத்திறன் மிக்க தொழில்நுட்ப அறிவு என்பனவே இவற்றை மேம்படுத்தும். வடமாகாணத்தில் காணப்படும் வளங்களை இனங்கண்டு வகைப்படுத்தி, அட்டவணைப்படுத்தி தொகுப்பாக நூல் வடிவில் வெளியிட வேண்டும். வளங்களுக்கான Resource Atlas ஒன்றினை விரைவில் நாம் உருவாக்க வேண்டும். அதனைப் பயன்படுத்தி அரச நிறுவனங்களும், உள்ளூராட்சி சபைகளும், அரசசார்பற்ற நிறுவனங்களும், தனிப்பட்ட முதலீட்டாளர்களும் அபிவிருத்திக்கான திட்டத்தை மேற்கொள்ள முடியும்.

*02.* எமது பிரதேச பொருளாதாரம் அறிவுசார்பொருளாதாரமாக மாற்றமடைவதே இன்றைய தேவையாகும். இதற்கேற்ப உற்பத்தித் துறைகளை நாம் உருவாக்க வேண்டும். விவசாயம் கைத்தொழில் துறைகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே நேரத்தில் சேவைத் துறைசார் உற்பத்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்திகளை யாழ்ப்பாணத்தில் வளர்த்தெடுத்தல் சாத்தியமானதேயாகும். கணனித்துறை சார்ந்த மென்பொருள் உற்பத்தி, இணையத்தள வலைப்பின்னல் ஊடான செயற்றிட்டங்கள், அச்சிடல் துறை, விளம்பரத் துறை போன்ற அறிவுசார் துறைகளில் எமது இளைஞர்களை விரைவாக ஈடுபடுத்துவது பயன்மிக்கதாக அமையும். மேலும் இவர்கள் புலம்பெயர்வாழ் சமூகத்துடனும் இணைந்து கருமமாற்ற இது உதவும். இத்துறை வளர்ச்சிக்கு புலம்பெயர் சமூகம் பெரிதும் உதவமுடியும் என்பதால் அவர்களிடம் இம் மேம்பாட்டுத் திட்டங்களைச் சமர்ப்பித்து ஆதரவு கோருதல் வேண்டும்.

*03.* எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பொருளாதார வளர்ச்சி அடிப்படையானது. இதற்கு பௌதிக மூலதனம், மனித மூலதனம், தொழில்நுட்பம் என்பன இன்றியமையாத அடிப்படைத் தேவைகளாகும். நிதி வளங்களை இன்று புலம்பெயர் வாழ் தமிழ் மக்களிடமிருந்து நாம் பெற்றுக்கொள்வது இலகுவானதாக அமையும். இவற்றை நான்கு வழிகளில் பெற்றுக் கொள்ளலாம்

- புலம்பெயர் தமிழர்கள் நேரடியாக தனியார் முதலீடுகளை இங்கு ஏற்படுத்துவது.
- இங்கு வாழும் ஒருவருடன் இணைந்து முதலிடுவது.
- புலம்பெயர்ந்தவர்கள் உதவிக்கானநிதிகளை இங்குள்ள நிறுவனங்கள் ஊடாக வழங்குவது.
- புலம்பெயர் மக்கள் தமது உறவினர் ஊடாக இங்கு முதலிடுவது.

தொழில்நுட்ப ஆலோசனை, முகாமைத்துவ ஆலோசனை போன்றவற்றை பல்வேறு முறைகளில் இங்கு கொண்டுவர இங்குள்ள புலமையாளர் முயலவேண்டும். புலம்பெயர்ந் தோரும், இங்குள்ளோரும் இணைத்து செயலாற்றும் வழிகளை நிறுவனமயப்படுத்துதல் ஊடாக தோற்றுவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண அபிவிருத்திக்கு இவ்வாறான முறையில் புலம்பெயர் சமூகத்தை ஈடுபட வைப்பது இன்றியமையாததாகும். இதற்கு இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் அல்லது சமூக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் எழுத்துமூலமாக செயற்றிட்டங்களை சமர்ப்பித்து முறையாக அவர்களை அணுகுதல் வேண்டும்.

04. கடந்த 30 வருட யுத்தம் காரணமாக மனிதவள அபிவிருத்தி இங்கு குறிப்பிட்டளவு ஏற்படவில்லை. இதனால் எல்லா உற்பத்தி துறைகளும் பாதிப்படைந்துள்ளன. யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியில் மனிதவள அபிவிருத்தியை நோக்கியே அக்கறையுடனான முன்னெடுப்புகள் செய்யப்படுதல் வேண்டும். இதனை முறையாக ஒழுங்குபடுத்தாவிடின் விவசாயத்தையோ, கைத்தொழிலையோ, சேவைத் தொழிலையோ நாம் சரியான முறையில் அபிவிருத்தி செய்ய முடியாது.

05. வடமாகாணத்தில் கைத்தொழில்துறை அபிவிருத்திக்குரிய பௌதிக வளங்களும், மனித வளங்களும் நிறைய உள்ளன. சுண்ணக்கல், களிமண், உப்பு. போன்றவற்றை பயன்படுத்தி கைத்தொழில் அபிவிருத்தியுற வாய்ப்புண்டு. சீனிக் கைத்தொழில், கண்ணாடிக் கைத்தொழில், காகித உற்பத்தி, துணி உற்பத்தி, தீப்பெட்டி, சவர்க்காரம், பசளை போன்ற அன்றாட பாவனை உற்பத்தி போன்றவற்றுக்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. கைத்தொழிலிற்கான வளங்களை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்ய முயலவேண்டும். நடுத்தர, சிறுகைத்தொழில்கள், கிராமியக் கைத்தொழில்கள் இங்கு அபிவிருத்தியுற நிறைய வாய்ப்புகள் உள்ளன. விவசாய உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களைக் கிராமிய மட்டத்தில் உருவாக்க வசதி வாய்ப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

06. பொதுவாக எமது நாட்டை யுத்தம் பாதித்தாலும் அவை பெண்ணினத்தையே அதிகம் பாதித்துள்ளன. உலகில் நிகழும் எந்தப் போரிலும் பெருமளவு பாதிக்கப்படுபவர்கள் பெண்களே. வடபகுதி இதற்கு விதிவிலக்கல்ல என்பதனை இங்கு பல துறைகளிலும் உணரக்கூடியதாக உள்ளது. அவர்களது பொருளாதார சமூக கலாசார அடித்தளங்கள் ஆட்டங்கண்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 29,000 இளம் விதவைகள் காணப்படுகின்றனர். குடும்பச் சுமையை இவர்களே சுமக்க வேண்டியுள்ளது. பெண்களுக்கு உரிய அபிவிருத்தி திட்டங்கள் எதுவும் சிறப்பாக இப்பகுதியில் உருவாக்கப்படவில்லை. அபிவிருத்தி பற்றி சிந்திக்கும் எவரும் பெண்களின் அபிவிருத்தி பற்றியும் அவர்களின் தனிப்பட்ட தேவைகள் பற்றியும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. பெண்களை மையப்படுத்திய அபிவிருத்தி திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், விதவைப் பெண்கள், முன்னர் போராளியாய் இருந்தோர் என்போருக்கான அபிவிருத்தி திட்டங்கள் விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் தோற்றிவிக்கப்பட்ட வங்கிகள் பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளை மேம்படுத்த நிதி உதவிகளை வழங்குதல் வேண்டும். பொருளாதார சமூக துறைகளில் பெண்களில் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டுள்ள போதும் கொள்கை வகுக்கும் பணிகளில் இவர்களது ஈடுபாடு குறைவாகும். பாராளுமன்றம், உள்ளூராட்சி அமைப்புகளில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாக உள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 5 வீதத்திற்கு குறைவானவர்களே பெண்களாவர். அனைத்து அரசியல் கட்சிகளும் பெண்களுக்காக குறைந்தது 30 வீதமான பங்களிப்பை பேணுவது இன்றியமையாததாகும். இன்றைய யாழ்ப்பாண நிலையில் முன்னாள் பெண் போராளிகளின் மீள் சமூக இணைப்பு முக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றது. அவர்களது வாழ்வாதாரம், சமூக மதிப்பு என்பன மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

07. பனைமரத்தை நம்பி வாழும் பெருந்தொகையான மக்கள் வாழும் இப்பூமியில் இதற்கான முக்கியத்துவம் அபிவிருத்தி சார்பாக பெருமளவு எடுக்கப்படவில்லை என்றே எண்ண வேண்டியுள்ளது. போரின் போது பனைமரங்கள் பெருமளவு அழிக்கப்பட்டன. இவை மீள் நடுகைக்கு உட்படுத்தப்படவேண்டும். பனைசார் விவசாயத்தையும் கைத்தொழிலையும் மேம்படுத்துவதற்கான பல வழிகள் காணப்படுகின்றன. பனைவளஞ்சார் தொழிற்றுறை விருத்தி அதற்கான சந்தை வாய்ப்பிலே பெருமளவு தங்கியுள்ளது. தென்னிலங்கை மக்களிடம் இவ் உற்பத்திக்கான கிராக்கி இருப்பதனால் பனம்பொருள் உற்பத்திக் கைத்தொழிலில் உள்ளூர் பிரதேச சபைகள் அதிக கவனம் கொள்ளலாம். பனம் விவசாயம் எனும் போது பனங் கிழங்கு, பனம் பூரான், நுங்கு போன்றவற்றை சந்தைப்படுத்துதலை குறிப்பதாகும். பனம் வெல்லம், பனஞ்சீனி என்பனவற்கும் அதிக கிராக்கி உண்டு. கள் உற்பத்தியை பதநீர் உற்பத்தியாக மாற்றி சாதாரண மக்கள் குடிக்கும் பானமாக உற்பத்தி செய்தால் அதிக பயனைப் பெறலாம். பனவளப் பயன்பாடு பற்றிய கல்வியறிவினை பல்கலைக்கழக மட்டத்தில் அறிமுகப்படுத்துவது பனையின் பயன்பாட்டை அதிகரிக்கும் என நம்பலாம்.

08. இன்றைய உலகு அறிவுசார் உலகமாகும். அறிவைப் பாதுகாப்பதற்கு அதனை ஆவணப்படுத்துதல் இன்றியமையாததாகும். அதன் மூலமே அதனைப் பரவலாக்கலாம். எமது தமிழ் சமூகம் ஏனைய மொழிச் சமூகத்தினரை விட இதில் அக்கறை கொண்டோராய் இல்லை. இனத்தின் இருப்பு தனது வரலாற்றையும், பண்பாட்டையும் பேணுவதிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இனம் தனது இருப்பை உறுதி செய்வதற்கு அது தனது அறிவைப் பாதுகாத்து ஆவணப்படுத்தி, பரவலாக்குதல் வேண்டும். கணனி பாவனையால் சுருங்கிவிட்ட உலகமானது இணையத்தினால் மக்களிடையே இறுக்கமான உறவுகளை பேணி வருகின்றது. எனவே நாம் இணையத்துடன் இணைந்து வாழவேண்டியவர்களாக உள்ளோம். 40ற்கு மேற்பட்ட நாடுகளில் பரந்துவாழும் தமிழர்களை ஒன்றிணைப்பதற்கு எண்மிய நூலகத்திட்ட உருவாக்கம் அவசியமாகும். என்றும் அழியாத எங்கிருந்தும் எந்நேரத்திலும் பார்க்கக்கூடிய தமிழருக்கான எண்மிய நூலக உருவாக்கத்தின் மூலம் எமது மொழியை எமது பண்பாட்டை எமது அறிவை பேண முடியும். தமிழரிடம் உள்ள நூலகங்கள் அனைத்தும் எண்மிய நூலகங்களாக மாற்றப்படுவதோடு அவை இணையத்துடன் இணைக்கப்பட்டு உலகில் பரந்து வாழும் தமிழர்களின் அறிவை விருத்தியாக்க வேண்டும்.

09. இலங்கையில் விலங்குப் புரத உணவில் 65 வீதம் மீன் நுகர்வால் கிடைக்கிறது. இதில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் நுகர்வு அதிகமாகும். உள்நாட்டு யுத்தத்தால் மிக மோசமான நிலையில் வடபகுதி மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. மீன்பிடித் தொழிலாளர்கள் கடலினுள் இறங்கமுடியாத நிலை நீண்ட காலமாக நிலவிற்று. இது படிப்படியாகவே இன்று புனர்நிர்மாணம் பெறுகின்றது. இதனை விரைவுபடுத்த வேண்டும். சுதந்திரமாக இவர்கள் தொழிலாற்றுவதற்கான வழிவகைகள் காணப்பட வேண்டும்.

இங்கு பொதுவாக மீன்பிடியில் 92வீதம் கரையோர மீன்பிடியாகவும் 8 வீதமே ஆழ்கடல் மீன்பிடியாகவும் உள்ளது. கரையோர மீன்பிடி வாழ்வாதாரத்திற்கே உதவுகின்றது. ஆழ்கடல் மீன்பிடியே வர்த்தக ரீதியில் இலாபம் தரக்கூடியதாக அமைகின்றது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்பாண குடாநாட்டு மீன்பிடியில் ஆழ்கடல் மீன்பிடி முறையை விரைவில் அதிகரிக்க வேண்டும். ஆழ்கடல் மீன்பிடிக்கு அதிக நிதியும், உயர் தொழில்நுட்பமும், பலநாட்கலங்களும் தேவை. இலங்கையின் தென்பகுதியல் 3000ற்கு மேற்பட்ட பலநாட்கலங்கள் காணப்படுகின்ற போது இங்கு 10 கலங்களே உள்ளன. எமது மீனவர்கள் மிக விரைவாக ஆழ்கடல் மீன்பிடியை மேற்கொள்வதற்கு அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் கடற்றொழில் சங்கங்களும் அதிக பலநாட்கலங்களைப் பெற்று உதவவேண்டும். அத்துடன் கடலில் மீனவர்களிற்கான பாதுகாப்பு, மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களின் வலுவாக்கம், மீன்பிடித் துறைமுக உருவாக்கம், அதனுடன் இணைந்த வீதி புனரமைப்பு என்பன விரைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இடைத்தரகரற்ற சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு தென்பகுதிக்கு மீன்களை உடனடியாக கொள்கலன்களில் இட்டு விரைவாகக் கொண்டு செல்வதற்கான வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.

10. விவசாய அபிவிருத்தியில் நிலைத்துநிற்கும் விவசாயம் என்பது இன்று முக்கியத்துவம் பெறுகின்றது. இதற்கு வடபகுதி தாவர இனங்களுக்கான வங்கி ஒன்றை பேண வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. தனித்துவம் மிக்க உள்ளூர் பயிர் இனங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கு எமது பிரதேசத்திற்கான விதைவங்கி அவசியம். யாழ்ப்பாணத்து மாம்பழம், வாழைப்பழம், முந்திரிகைப் பழம், முருங்கைக்காய் என்பன தனித்துவமானவையாகும். இவற்றின் விதைகள் பேணப்படுதல் எதிர்கால விவசாய அபிவிருத்திக்கு இன்றியமையாதனவாகும். விவசாய அபிவிருத்தியில் தூயவிதைகள், வீரியமுள்ள விதைகள் என்பன முக்கியமானவை. இவற்றைப் பேணுவதற்கு விதைக் கிராமங்களை உருவாக்குதல் வேண்டும். மேலும் மூலிகைப்பயிர்கள் எமது பிரதேசத்தில் விருத்தி செய்வதை ஊக்குவித்தல் வேண்டும். இதன் மூலம் சுதேச வைத்தியத்தையும், இயற்கை மருத்துவத்தையும் எமது மக்கள் கடைப்பிடிக்க ஊக்குவிக்கலாம். மேலைத்தேய மருத்துவத்தால் மாற்றமுடியாத பல நோய்களை எமது உள்ளூர் மூலிகை மருத்துவம் குணமாக்கியிருந்ததை வரலாறு உணர்த்துகின்றது. எனவே மூலிகைப் பயிர்களை உற்பத்தி செய்து அதனை மருந்தாகவும் உணவாகவும் பயன்படுத்தினால் சுகவாழ்வு வாழ முடியும். எனவே இதனை ஊக்குவித்தல் வேண்டும். மேலும் விவசாய அபிவிருத்திக்கான முதற்படி விவசாயத்திற்கான கல்வியை ஊக்குவித்தல் ஆகும். கா.பொ.த சாதாரண தரத்தில் இருந்து கா.பொ.த உயர்தரம் ஊடாக பல்கலைக்கழக மட்டத்தில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் விவசாய பாடத்தை கற்பதற்கான வசதிகளையும், வாய்ப்புகளையும் வழங்க வேண்டும். விவசாய பூமியின் முறையான அபிவிருத்திக்கு விவசாயக்கல்வி இன்றியமை யாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955537880-0
9789555378802

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org